29540

# பொன்னிறத்தாள் கதை

டாக்டர் ஏ.கே. பெருமாள்
டாக்டர் எஸ். ஸ்ரீகுமார்

# பொன்னிறத்தாள் கதை


பதிப்பாசிரியர்கள்

டாக்டர் ஏ.கே. பெருமாள்,
தமிழ்த் துறை, அறிஞர் அண்ணா கல்லூரி,
ஆரல்வாய்மொழி.

டாக்டர் எஸ். ஸ்ரீகுமார்,
தமிழ்த்துறை, தெ. தி. இந்துக் கல்லூரி
நாகர்கோவில்.



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41 - பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை - 600 098.

# PONNIRATHAAL KATHAI

Compiled by
Dr. A.K. Perumal
Dr. S. Sree Kumar

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு

முதற் பதிப்பு : ஜூலை, *1997*

© நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

Code No : A 864
ISBN : 81-234-0441-7

விலை : ரூ. 20-00

ஒளி அச்சு : M/s சிஸ்டெக், சென்னை - 2
அச்சிட்டோர் :
காரிஸ் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 029.

# பதிப்புரை

இலக்கியங்கள் சிதைந்து விடாதபடி ஏட்டுச் சுவடிகளை நூற்களாகப் பதிப்பித்தவர் உ.வே. சாமி நாதய்யர். இன்றும் தமிழ்'நாட்டில் கிராமங்களில் நாட்டுப்புறப்பாடல்கள் மற்றும் கதைப்பாடல்கள் ஏட்டுச் சுவடிகளாக உள்ளன. அவற்றை நூல் வடிவம் பெறச் செய்ய அறிஞர்கள் முயல்கின்றனர். அந்த வரிசையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சில கோவில்களில் வில்லடிப் பாட்டாகப் பாடப்படும் பொன்னிறத்தாள் கதையை ஏட்டுச் சுவடியிலிருந்து நூல் வடிவம் பெற முயன்று தொகுத்த டாக்டர் ஏ.கே. பெருமாள் டாக்டர் எஸ். ஸ்ரீகுமார் இருவரும் பாராட்டுக்குரியவர்கள்.

'பொன்னிறத்தாள் கதை' ஏட்டில் உள்ளபடியே திருத்தப்படாமல் பதிப்பிக்கப்படுகிறது. பொன்னிறத்தாள் என்ற பெண் தெய்வம் பற்றிய வில்லடிப்பாட்டு நூலாகிய இந்த நூலுக்கு வாசகர்கள் வழக்கம் போல ஆதரவு தருவார்கள் என்று நம்புகிறோம்.

*பதிப்பகத்தார்*

# நன்றிகள்

ஆரல்வாய்மொழி அறிஞர் அண்ணா கல்லூரி தாளாளர் பேராசிரியர் ம. சங்கரலிங்கம் எம்.எ. முன். எம்.எல்.சி. கல்லூரி முதல்வர் பேரா. என். தாணுபிள்ளை .... தமிழ்த்துறைத்தலைவர் டாக்டர். ச. சிதம்பரம் எம்.எ. பிஎச். டி.

நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரி தாளாளர் டாக்டர் அ. பாலசுந்தரம் பிள்ளை, கல்லூரி முதல்வர் பேரா. சி. தாணுமூர்த்தி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியை அவ்வையார் அழகப்பன்....

சுயம்புலிங்கபுரம் முத்துசாமிப்புலவர் பேரா. ஜனார்த்தனன், குமரி மாவட்ட கிராமியக் கலைஞர்கள் முன்னேற்றச் சங்கச் செயலர் கே. ராஜா.

# முகவுரை

தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்குத் தமிழ் கலாச்சார வளர்ச்சியில் மூன்று நிலைகளில் முன்னணி இடமுண்டு. ஒன்று தற்கால இலக்கியங்களில் தரமான படைப்பும், விமர்சனமும். இரண்டு நாட்டார் இயல் ஆராய்ச்சியில் தீவிரப் போக்கு. மூன்று அதிகமான கதைப் பாடல்கள் கிடைத்துக் கொண்டே இருப்பது.

தமிழகத்தில் கிடைக்கின்ற கதைப்பாடல்களில் மூன்றில் இரண்டு பகுதி கன்னியாகுமரி, நெல்லை கட்டபொம்மன். வ. உ. சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் தான் கிடைக்கின்றன. கதைப்பாடல்களை ஒரே மூச்சாய் எழுதக்கூடியவர்களும் இப்பகுதிகளில் இன்றும் சிலர் இருக்கின்றார்கள். இந்த மாவட்டங்களில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் பல கதைப்பாடல்களைப் பதிப்பித்தும் உள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 92 க்கு மேற்பட்ட கதைப்பாடல்கள் உள்ளன. ஒரு கதைக்கு இரண்டு வடிவங்களும் உள்ளன. சில கதைகளுககு மலையாள வடிவங்களும் காணப்படுகின்றன.

பொன்னிறத்தாள் கதைக்கும் மலையாள வடிவம் உள்ளது. இக்கதை மிக அபூர்வமாகவே பாடப்படுகிறது. குமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் தம்மத்துக்கோணம். பூச்சிவிளாகம் போன்ற சில கிராமங்களில் முத்தாரம்மன் கோவில்களில் துணைத்தெய்வமாகப் பொன்னிறத்தாள் தெய்வம் இருக்கிறது. இக்கதையைத் தெரிந்து பாடுகின்றவர்கள் ஒரு சிலரே உள்ளனர்.

சுயம்புலிங்கபுரம் முத்துச்சாமிப் புலவரை, குமரி மாவட்டக் கிராமியக் கலைக் கலைஞர்கள் முன்னேற்றச் சங்கச் செயலர் திரு. கே. ராஜா அறிமுகப்படுத்திய போது பொன்னிறத்தாள் கதையின் ஒரு பகுதியைப் பாடுமாறு கேட்டோம். அவர் வில்லோ, பிற பின்னணி இசைக்கருவிகளோ இல்லாமல் சரளமாகப் பாடக் கூடியவர். அவர்

கதையின் சுருக்கமான சில பகுதிகளைப் பாடிக் காட்டினார். அதோடு புருஷாதேவி கதையையும் சொன்னார். புருஷா தேவியின் ஏவலின் படிதான் பொன்னிறத்தாள் பலி கொடுக்கப்பட்டாள் என்றும் சொன்னார்.

புருஷாதேவி அர்ஜுனனின் காதலி அல்லி மாதிரி. ஆண்வாடை வேண்டாம் என்றே இருப்பவள். வீராங்கனை. அவளைச் செம்பமுற மன்னன் சந்தித்த போது அல்லியை விட வேகமாகவே அவனைச் சாடினாள். செம்பமுற மன்னனுடன் போர் செய்யவும் செய்தாள். இறுதியில் போர்க்களத்திலேயே இறந்தாள். செம்பமுற மன்னனும் தற்கொலை செய்து கொண்டான். புருஷாதேவி காட்டாளம்மனாக மாறி தென்காசிக் காட்டிலே கோவில் கொண்டாள். அவள் தன் பேய்ப்படைகளைக் கள்ளர்களாக அனுப்பி பொன்னிறத்தாளைப் பலி கொண்டாள்.. பொன்னிறத்தாளும் தெய்வமான பின்னர் இரு தெய்வங்களுமாக மதுரைப் படை வீட்டை அழிக்கச் சென்றனவாம்.

எங்களுக்குக் கிடைத்த பொன்னிறத்தாளம்மன் கதையில் புருஷாதேவி கதை பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் முத்து சாமிப்புலவர் தந்த புருஷா தேவி கதை அல்லது செம்பமுற மன்னன் பாட்டு என்ற கதைப்பாடலில் மதுரைப்படை வீட்டை அழிக்க காட்டாளம்மன் பொன்னிறத்தாளைத் தெய்வமாக்கியதாகவும், பலி கொண்டதாகவும் வருகிறது.

பொன்னிறத்தாள் கதை பதிப்பிற்குத் தம்மத்துக்கோணம், சுயம்புலிங்கபுரம் ஆகிய ஊர்களில் கிடைத்த ஓலைப்பிரதிகளும், முத்துச்சாமிப்புலவரின் கையெழுத்துப் பிரதியும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தம்மத்துக்கோணம் கோவில் ஓலைப்பிரதியைப் பெற பேராசிரியர் ஜனார்த்தனன் உதவி செய்தார். சுயம்புலிங்கபுரம் ஓலைப் பிரதியையும் தன் கையெழுத்து பிரதியையும் முத்துசாமிப் புலவர் தந்து உதவினார். அவர் மூன்று பிரதிகளையும் படித்து உணரவும், பாடிக்காட்டியும் உதவினார்.

பொன்னிறத்தாள் கதையின் ஆசிரியர் உலகுடைய பெருமாள் நாடார் ஆவார். இதைத் தம்மத்துக்கோணத்திலும், சுயம்புலிங்கபுரத்திலும் கிடைத்த பொன்னிறத்தாள் கதை ஏடுகளின் முதல் ஓலை உறுதிப்படுத்துகின்றன. நூலின் உள்பகுதியில் ஆசிரியர் பெயர், ஊர்

பற்றிய குறிப்புகள் இல்லை. நூல் பெரும்பாலும் 1891 அளவில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் முத்துசாமிப்புலவர். அவர் தம்மத்துக்கோணம் நடேசநாடாரின் ஏட்டுப்பிரதிதான் இக்கதையின் முதல் பிரதி என்றும் கருதுகிறார். முத்துசாமிப்புலவரின் வீட்டில் உள்ள பிரதி தம்மத்துக்கோணம் பிரதியைப் பார்த்து எழுதப்பட்டது என்றும் அவர் கூறினார்.

பொன்னிறத்தாள் கதை நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்திற்கும் பல ஆண்டுகளுக்குப் பின்பே கதைப்பாடலாக வடிவம் பெற்றிருக்கிறது. கதை நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தை அறிய நூலில் சில அகச்சான்றுகள் உள்ளன.

தம்மத்துக்கோணத்தில் கிடைத்த பொன்னிறத்தாள் கதை ஏட்டில், அவ்வேடு கொல்லம் ஆண்டு 1066ல் (கி.பி. 1891) எழுதப்பட்டதாகக் குறிப்பு உள்ளது. குமரி மாவட்டத்தில் கிடைக்கின்ற பழைய கதைப் பாடல் ஏடுகளில் இதுவும் ஒன்று. எனவே பொன்னிறத்தாள் கதைநிகழ்ச்சிகள் கி.பி. 1891ஆம் ஆண்டுக்கு முற்பட்டது என்று தெரிகிறது.

பொன்னிறத்தாளைப் பலி வாங்கிய காட்டாளம்மன் கோவில் தென்காசியில் உள்ள அழகான கோட்டை போல் இருந்தது என நூல் கூறுகிறது. இதை நூல்

அன்னாளில் கள்ளரெல்லாம்
ஆகாவென்று கூடுவாராம்
கூடிய கள்ளரெல்லாம் காட்டாளம்மன்
கோவிலிலே
தென் காசிக் கோட்டையைப் போல்
அழகாய் நின்ற இடம்
காட்டாளச்சி கோவிலிலே கடிதாய்
கூடினரே.

என வருணிக்கிறது. தென்காசிக் கோட்டை நல்ல நிலையில் இருந்தபோது கள்ளர்கள் அங்குக் கூடியதாகக் கதைப்பாடல் கூறுகிறது. தென்காசியில் பாழடைந்த கோட்டையை 1820ஆம் ஆண்டில் தான் நேரில் பார்த்ததாக டர்னல் என்ற ஆங்கிலேயர் கூறுகின்றார். (R. Caldwell, A History of Tinnevely, 1982, 1982, P.54) எனவே இக்கதை நிகழ்ச்சிகள் 1820ஆம்

ஆண்டுக்கு முற்பட்டு கோட்டை பாழடைவதற்கு முந்திய காலத்தில் நிகழ்ந்ததாகக் கருதலாம்.

உடையார் கதை என்ற கதைப்பாடல், உடையார் தென்காசிக் கோட்டைக்குள் சென்று வீதி வழியே நடந்து சென்ற நிகழ்ச்சியைக் கூறும் போது

சிறந்த தென்காசி கோட்டை முடுகியே
சென்றரைசர் தெருவில் உலாவினார்
சென்றுலாவியே தென்காசியில்
தெருக்கள் தெருக்களுஞ் சிங்காரமாய்
அண்டர் பதியது போலிருக்கும்
ஆடரங்கும் மேடைக்கும்
ஆடரங்கு மாளிகையும் அம்பொன்மணி
மண்டபமும்

என்று வருணனை செய்கிறது. (கி. நடராஜன், உடையார் கதை, 1980, ப. 88) உடையார் கதை நிகழ்ச்சிகள் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும் (அ.கா. பெருமாள், வில்லிசைப் பாடல்கள் ஓர் ஆய்வு பி.எச்.டி. ஆய்வேடு, மதுரைப் பல்கலைக் கழகம் மதுரை 1987 ப. 78) எனவே பொன்னிறத்தாள் கதை இதற்குப் பிற்பட்டது என்று கருதலாம்.

பொன்னிறத்தாளின் கணவன் இணைசூரன் திருமலை நாயக்கரின் உறவினன் என்பதை நூல்

மதுரை நாடதிலே திருமலைவாழ் நாயக்கன் மகன்
தளவாய் நாயக்கன் மகன் தக்க இணைசூரனுமோ

என்று குறிப்பிடுகிறது

மதுரை நாயக்க மன்னர்களில் பேரரசனாக இருந்த திருமலை நாயக்கருக்குத் தளவாய் நாயக்கன் என்ற மகன் இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறவில்லை. ஆனால் அவருக்கு நிறைய மனைவிகள் இருந்தார்கள். அவர்களுக்குப் பிறந்த புதல்வர்கள் தென்பகுதியில் சிறு தலைவர்களாக, இருந்தனர் என்பதை வாய்மொழிக்கதைகள் கூறுகின்றன.

திருமலை நாயக்கரின் காலம் கி.பி. 1623-1659 ஆகும். எனவே இக் காலத்துக்குப் பிற்பட்டது பொன்னிறத்தாளின் கதை நிகழ்ச்சிகள் என்று கூற முடியும்.

எனவே பொன்னிறத்தாள் கதை நிகழ்ச்சிகள் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிக்கும் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம். கதை நிகழ்ச்சிகள் நடந்து சுமார் 25 முதல் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் கதைப்பாடல் வடிவம் பெற்றிருக்க வேண்டும்.

இக்கதைப்பாடல் தெலுங்கு நாயக்கர் சமூகம் தொடர்பானது. பொன்னிறத்தாள் தெலுங்குக்காரி. இவள் பலிகொடுக்கப்பட்ட பின்பு சிவனிடம் வரம் வாங்கியபின் தெய்வமாகிக் கோவிலில் நிலைபெறுகிறாள். நாஞ்சில் நாட்டில் இத்தெய்வத்தை வழிபடுகின்றவர்கள் நாடார் சமூகத்தினர். நாயக்கப் பெண் தெய்வத்தை நாடார் சமூகத்தினர் வழிபடுவதற்குரிய காரணங்களைக் கதைப்பாடலில் காண முடியவில்லை. ஆனால் நாஞ்சில் நாட்டில் நாடாரின் குடியேற்றம் குறித்த கள ஆய்வுச் செய்திகளிலிருந்து சில கருத்துக்களை ஊகிக்க முடிகிறது.

நாஞ்சில் நாட்டில் நாடார் சமூகத்தினர் வழிபடுகின்ற நாட்டார் தெய்வங்களில் பலவேசம் சேர்வைக்காரன், முத்துப்பட்டன், கருப்பசாமி, குரங்காணி அம்மன், நம்பூதிரிச்சாமி, புளியடிப்போத்தி போன்றவைகள் வேறு சாதிகளுடன் தொடர்புடையன. வேறு பகுதிகளில் வழிபடப்பட்டவை. இவற்றின் தோற்றமும், குடி பெயர்ச்சியும் குறித்த கதைகள் நாடார் சமூகத்தினர் நெல்லை மாவட்டத்திலிருந்து குடிபெயர்ந்து வந்த போது உடன்வந்தவை இத்தெய்வங்கள் என குறிப்பிடுகின்றன. பொன்னிறத்தாளின் சமூகத்தினர். நாஞ்சில் நாட்டிற்குக் குடிபெயர்ந்து வந்த போது இது வந்தது என்று கருதலாம்.

பொன்னிறத்தாள் கதை என்ற இந்த வில்லடிப் பாட்டுக் கதையை வெளியிட முன்வந்த நியூ **செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்துக்கு** எங்கள் நன்றி.

ஏ.கே. பெருமாள்
எஸ் ஸ்ரீகுமார்

# கதைச் சுருக்கம்

**காப்பு**

அணஞ்சபெருமாள் என்பவன் பொன்மாரியைத் திருமணம் செய்து குழந்தை வேண்டி காசியில் வாழ்ந்தான். மறையவர் அருளால் அவர்களுக்கு 7 ஆண்குழந்தைகள் பிறந்தன. பொன்மாரி பெண் குழந்தை இல்லையே எனச் சொல்லி வேண்டினாள். இறைவன் அருள் செய்தபின் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குப் பொன்னிறத்தாள் எனப் பெயரிட்டனர். அப்பெயருடைய பெண்ணின் புகழை நான்பாட கரிமுகனே கணபதியே காப்பாய். கேட்பவர்கள் பிழை பொறுப்பீர்.

**கதை**

கடையம் என்னும் ஊரிலே வடுகர் குலத்தில் பிறந்த பொன்மாரி என்பாள் இனிதாக வாழ்த்திருக்கும் நாளில் அவளுக்கு அணஞ்ச பெருமாள் என்பான் மாலையிட்டான். மணமக்கள் இருவரும் மகிழ்வாக இல்வாழ்வை நடத்தினர். அதன் பலனாக பொன்மாரி அடுக்கடுக்காக ஏழு ஆண் குழந்தைகளைப் பெற்றாள். அக் குழந்தைகளுக்கு சித்தன், சித்திரன், தம்மப்பன், மேப்பன், கிருஷ்ணன், வேலப்பன், மாடப்பன் எனப் பெயரிட்டாள். ஏழு ஆண் குழந்தைகள் இருந்தும் பெண் இல்லையே என்ற கவலை அவளுக்கிருந்தது. அவள் கோவில்களில் தவமிருந்தாள். கோவிலைத் தூத்துத் தெளித்தாள், விளக்கேற்றிவைத்தாள். ஈரத்துணி உடுத்து கோவிலைச் சுற்றி வந்தாள். பெண்குழந்தை பிறந்தால் ரங்கநாதன், குமரி அம்மன், குருத்தோலைநாதன், சிவனணஞ்ச மார்த்தாண்டன் ஆகிய தெய்வங்களுக்கு நேர்ச்சை செய்வதாக வேண்டிக் கொண்டாள். அதன் பயனாக அவள் கர்ப்பமுற்றாள். பத்தாம் மாதத்தில் வெள்ளிக்கிழமையில் மீனராசியில் பஞ்சமியில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். பொன்மாரிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

தனக்கு உதவி செய்த பெண்களுக்கு பொன்னைவாரி நல்கினாள்.

பொன்நிறமுடைய அக்குழந்தைக்குப் பொன்நிறம் எனப்பெயரிட்டனர். குழந்தை வளர்ந்தது. செழித்துப் புடைத்து நின்ற பொன்னிறத்தாளின் அழகு பக்கத்து ஊரெல்லாம் பரவியது. அவளுக்குத் தோழிகளும் பெருகினர்.

ஒருநாள் பொன்னிறத்தாளும், அவள் தோழிகளும் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியே மதுரை திருமலை நாயக்கரின் உறவினன் தளவாய் நாயக்கன் மகன் இணைசூரப்பெருமாள் வந்தான். அவனுடன் துப்பன், வெள்ளியத்தேவன், தூங்கலிங்கபுரிமறவன், அசையீட்டிக்காரர்கள் ஆகியோர் வந்தனர். இணைசூரப்பெருமாள் வேகமாகப் பந்தாடும் இனியகொடி பொன்னிறத்தாளைக் கண்டதும் மெய்மறந்து நின்றான். இந்த நாட்டிலே இவளைப்போல் அழகியை நான் கண்டதில்லை. என்ன அழகு என்றான். பந்து விளையாடிக்கொண்டிருந்த தோழிகளை அழைத்தான். இவள் யார்? எந்த ஊர்? எனக் கேட்டான். தோழிகள் "ஐயா இவள் பேர் பொன்னிறத்தாள். ஊர் தென்காசி. இவள் தந்தை பெருமாள் தலைவன். இவளுடன் உடன் பிறந்தவர்கள் ஏழு ஆண் சிங்கங்கள். இவளது உறவினர்கள் கடையத்தில் வாழ்கின்றனர்" என்றனர்.

இணைசூரனுக்குப் பொன்னிறத்தின் அழகு அறிவை மயக்கியது. மெய்யை உருக்கியது. தன் அரண்மனையில் சென்று படுத்தான். அவன் உடலில் மாற்றம் கண்ட அவன் தாய் "மகனே உனக்கு என்ன நடந்தது"? எனக் கேட்டாள். அதற்கு இணைசூரன் " அம்மா தென்காசி பெருமாள் தல்லவனின் மகள் பொன்னிறத்தாளை விரும்புகிறேன்.. அவளை நான் அடையவேண்டும்" என்றான். அதைக் கேட்ட அவனது தாய் "அந்தப் பொன்னிறம் உனக்கு ஒருவகையில் முறைப்பெண் தான். அவளை உனக்கு மணமுடித்து வைக்கிறேன். கவலை விடு" என்றாள்.

இணைசூரனின் தந்தை, அணஞ்ச பெருமாளிடம் தன் மகனுக்குப் பெண் கேட்டுச் சென்றான். அவனும் பொன்னிறத்தாளை இணைசூரனுக்குக் கொடுக்க இசைந்தான் திருமண நாளையும் குறித்தனர். மணமகனின் வீட்டை பலவகை பூக்களால் அலங்கரித்தனர். குறித்த நேரத்தில் இணைசூரன் பொன்னிறத்தின் கழுத்தில் மாங்கல்யத்தைச்

சூட்டினான். தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

மணம் ஆன இரண்டாம் வருடம் பொன்னிறத்தாள் கர்ப்பமுற்றாள். ஏழாம் மாதத்தில் தன் குல வழக்கப்படி தன் தாய் வீட்டிற்கு வந்தாள். வீட்டில் வலது காலை எடுத்து வைத்தாள்; கால் தடுக்கியது; என்ன வருமோ என நொந்து கொண்டே வீட்டில் புகுந்தாள். பொன்மாரி மகளின் பருத்த வயிற்றைக் கண்டு மகிழ்ந்தாள். ஒன்பதாம் மாதத்தில் முளைப்பாலி வைக்க வேண்டும் என்றாள். பொன்னிறத்தாளின் 21 தோழிகளும் 7 நாள் விரதம் இருந்து பலவகை வித்துக்களைச் சட்டியிலே இட்டு குருத்தோலை கொண்டு மூடிவைத்தனர். ஏழாம் நாள் வளர்ந்த முளையை எடுத்துப் பார்த்தனர். எல்லா பெண்களும் வைத்த முளைகளும் வளர்ந்திருந்தன. பொன்னிறத்தாளின் முளைகள் அழுகிப் போயின. எல்லாப் பெண்களும் தங்கள் முளைகளைச் சுனையிலே விடச் சென்றனர். எல்லா முளைகளும் நீரிலே மிதந்தன. பொன்னிறத்தாளின் முளையோ நீரில் அமிழ்ந்தது. பொன்மாரி இதை அறிந்து இது என் போதாத காலம் என வருந்தினாள்.

இந்த நிகழ்ச்சி நடந்த இரண்டு நாள் கழித்து தோழிகள் பொன்னிறத்தாளிடம் " நாம் எல்லோரும் சுனையாடப் போவோமா" என்று கேட்டனர். பொன்னிறத்தாள் எனக்கு நிரம்ப வேலையிருக்கிறது. நீங்கள் முன்னே செல்லுங்கள். நான் வருகிறேன் என்றாள். தோழிகள் சென்றதும் பொன்னிறத்தாள் தயிர் கடைய மத்தை எடுத்தாள். பூனை அப்போது பானையை உருட்டியது. இது என்ன தீய சகுனம் என நினைத்தாள்.

பொன்னிறத்தாள் சமையல் செய்து கொண்டிருக்கும் போது பொன்மாரி சமையலறைக்கு வந்தாள். "மகளே இன்று நீ சுனையாடப் போக வேண்டாம்; நேற்று நான் ஒரு கனவு கண்டேன். நீ சுனையாடப் போகும் போது கள்ளர் உனைப்பிடித்து காட்டாளம்மன் கோவிலில் பலி கொடுக்கக் கண்டேன். நீ சுனையாடப் போகாதே" என்றாள். பொன்னிறத்தாளோ "குறத்தி சொல்லை நம்பி நீ இவவாறு பேசுகிறாய். என் விதியை விலக்க யாரிருக்கிறார்கள். அப்படியே சாகும் விதியை யார் மாற்ற முடியும்? மயங்காதே அம்மா நீ. சுனையாடி நான் வருவேன்" என்றாள்.

சுனையாடுவதற்குரிய பொருள்களைச் சேர்த்து எடுத்தாள். மஞ்சள், துயில் எண்ணெய் போன்ற பொருள்களை எடுத்துக் கொண்டாள் தாயிடம் சுனையாட விடை கேட்டாள். அன்னையோ " ஐயோ மகளே தனியாக செல்லாதே; பெண் மகவு இன்றிப் பேதலித்து கோயில்களில் விளக்கேற்றி வைத்து உன்னைப் பெற்றேன். உன் மணவாளன் வந்தபின் அவனைத் துணைக்கு அழைத்துச் செல்லுவாய் அல்லது உன் தந்தை வந்த பின் சுனையாடப் போவாய். வாகை நல்லூர் அம்பலத்தில் மறவர் இருப்பார்கள். பொல்லாத குலம் அது; கொலை செய்யத் தயங்காது; மகளே நீ போகவேண்டாம்" என்றாள்.

தாய் சொல்லை மீறி சுனையாடச் சென்றாள் பொன்னிறத்தாள். வழியில் தீய சகுனங்கள் வந்தன. அவற்றைத் தாண்டிச் சென்றாள். நடுக்காட்டில் ஒரு குறத்தி வந்தாள். பொன்னிறத்தாளின் கையைப் பிடித்துப் பார்த்து "உன்னை மறவர்கள் காட்டாளம்மன் கோவிலுக்குப் பலி கொடுப்பார்கள்; தனியே சுனையாடப் போகாதே" என்றாள். பொன்னிறத்தாள் அவள் பேச்சை கேட்காது வேகமாய் நடந்து வாகை நல்லூர் அம்பலத்திற்கு சென்றாள். அங்கு தோழிகளைக் காணவில்லை; பொன்னிறம் திகைத்தாள். தோழிகள் சதித்து விட்டாரே! என்ன செய்வது என்று எண்ணி வேகமாய் நடந்தாள். கடுநடை நடந்து தோழிகளைச் சுனைக்கரையில் கண்டாள்.

தோழிகள் பொன்னிறத்தைக் கண்டதும் மிக மகிழ்ந்தனர். எண்ணையைத் தலையில் தேய்த்து சுனையாட இறங்கினர். அவர்கள் மகிழ்வோடு சுனையாடத் தொடங்கிய அந்த நேரத்தில் திடீரென மேகம் கவிந்தது. மழை கருக்கொண்டது. புயல் வீசியது. தோழிகள் அவசரமாகக் கரை ஏறினர். பொன்னிறத்தாளும் சுனைக்கரையில் வந்தாள். தோழிகள் நாம் வாகை நல்லூர் அம்பலத்திற்குச் செல்வோம் என்றனர். எல்லோரும் வேகமாய் அம்பலம் நோக்கி நடந்தனர். பொன்னிறத்தாள் மெல்ல நடந்தாள். தோழிகளை அவளால் எட்டிப் பிடிக்க முடியவில்லை. புயல் வேகமாக வீசியது ஒரு புளிய மரத்தின் மூட்டில் சென்று நின்றாள். புளிய மரம் சரிந்தது. பொன்னிறம் ஓடிச் சென்று ஆலமரமூட்டில் நின்றாள். ஆலமரமும் சரிந்தது. அவள் ஒரு மாமரமூட்டிற்குச் சென்றாள்.

இந்த நேரத்தில் வெள்ளாளர், மறவர், வாணியர், ஆகிய சாதிகளில் 61 கள்ளர்கள் கூடினர். இன்று நாம் எந்த ஊரில் களவு செய்யலாம் எனக் கூடி யோசித்து நின்றனர். ஒரு கள்வன் கூறுவான் "காட்டாளம்மன் கோவில் கருவூலம் இருக்கிறது இன்று அதை எடுப்போம்" என்றான். இன்னொருவன் "நான் மந்திரம் படித்தவன்; மையிட்டுப்பார்க்கிறேன் எங்கே கருவூலம் இருக்குது என்பதைக் கண்டு சொல்வேன்" என்றான். அவன் தீ வளர்த்து மையிட்டு பார்த்தான் அதில் பெரிய பூதங்கள், இசக்கிகள், வாதைகள், பேய்ப்படைகள் ஆகியன தெரிந்தன. மந்திரவாதிக் கள்ளன் கூறினான் 'கருவூலத்திற்கு நிறையக்காவல்கள் உள்ளன. நாம் இங்கே நிற்க வேண்டாம்; வட்டப் பாறைக்குப் போவோம்' என்றான்.

கள்ளர்கள் எல்லோரும் வட்டபாறையில் கூடினர். குறிக்காரன் ஒருவன் பிரசன்னம் வைத்துப் பார்த்தான். காட்டாளம்மன் கருவூலத்தை எடுக்க வழி கேட்டான். பேய்களும், இசக்கிகளும் வந்து கூடின. பலிகள் கேட்டன. பாலாடு, சூலாடு, கரும்பூனை, சேவல் இப்படிப் பல பலிகள், சூலிப் பெண் வேண்டும் எனக் கேட்டாள் இசக்கி. கள்ளர்கள் இப்போது சூலியை எங்கே போய் நாம் தேடுவோம் எனத் தவித்தனர். ஒரு கள்ளன் கூறினான். நாம் தனிவழியே வந்த பொழுது மாமரத்து நிழலில் ஒரு சூலி நின்றதைக் கண்டேன் என்றான்.

இந்த நேரத்தில் காட்டாளம்மை கோவிலில் பூசை செய்வதற்கு வேதியன் ஒருவன் உருளியில் பச்சரிசி எடுத்து வந்தான். கோவிலின் முன்னே வந்த போது 60 கள்ளர்கள் கூடியிருக்கக் கண்டான். அண்ணன்மார்களே இங்கு எல்லோரும் கூடியிருக்கக் காரணம் என்ன எனக் கேட்டான். கள்ளர்கள், "காட்டாளம்மன் கோவில் கருவூலத்தைக் கவர வந்த கள்ளர்கள் நாங்கள்; கருவூலத்தை எடுக்க உங்களைப் பலி கொடுக்கப் போகிறோம் என்று கூறி வேதியனைப் பிடித்தனர். வேதியன் "ஐயோ அண்ணன்மார்களே வேண்டாம் உங்களுக்குத் தலைச் சூலிப்பெண்ணொருத்தியைக் காட்டுகிறேன். என்னை விட்டு விடுங்கள்" என்றான். கள்ளர்கள், "அவளைக்காட்டு முதலில்; பின் உன்னை விடுதலை செய்கிறோம்" என்றனர்.

வேதியன் கள்ளர்களை வழி நடத்தி அழைத்துச் சென்றான். பொன்னிறம் நின்ற மரத்தைக் காட்டினான். கள்ளர்கள் பொன்னிறத்தாளைக் கண்டதும் வேதியனை விட்டு விட்டனர். பொன்னிறத்தாளின் அருகில் வந்தனர். கள்ளர்கள் "பெண்ணே நீ யார்?" எனக் கேட்டனர். அவள் தான் யார் என்பதையும் கூறி தன் வரலாற்றையும் கூறினாள்" தோழிகள் என்னைச் சதித்து விட்டார்கள் அண்ணன்மார்களே: என்னை என் வீடு கொண்டு சேர்த்தால் என் தந்தை என் எடைக்குப் பொன் தருவார்; என் அண்ணன்மார்கள் ஏழு பேரும் நீங்கள் கேட்பதைத் தருவார்கள்" என அழுது கொண்டே கூறினாள். கள்ளர்கள் "பெண்ணே நாங்கள் இந்தக் காட்டிற்கு மாடுபிடிக்க வந்தோம்; உன்னை உன் வீடு கொண்டு சேர்ப்போம் கவலை வேண்டாம்; முன்னே நீ நடப்பாய் பின்னே நாங்கள் நடக்கிறோம்" என்றனர்.

அவள் மெல்ல நடந்தாள். ஒன்பது மாதக் கர்ப்பிணியான அவளால் நடக்க முடியவில்லை. கள்ளர்கள் அவளை ஓடு ஓடு சீக்கிரம் நட என்றனர். ஒரு மாபாவிக் கள்ளன் எருக்கலைச் செடியால் அவளை அடித்தான். ஒருவன் புளியம் விளாரை வெட்டி அடித்தான். அவள் அழுதாள். "அண்ணே அடிக்காதே பெண் பாவம் தீராது; என் தாய் என்னை இதற்கா பெற்றாள். மஞ்சள் பூசிய என் மேனி இப்படி ஆனதே" என்றாள். தன்னை நொந்து கொண்டாள். அண்ணன்மார்களே என் நகைகளைக் கழற்றித் தருகிறேன் விட்டு விடுங்கள் என்றாள். கள்ளர்கள் மனம் கசியவில்லை, கொடியமனம் படைத்த அக்கள்ளர்கள், பொன்னிறத்தைக் காட்டாளம்மன் கோவிலுக்குக் கொண்டு சென்றனர். கோவில் அறையில் அடைத்து வைத்தனர்.

கோவிலின் முன் பெரிய பரண் கட்டினர். குலைவாழை கட்டினர். குருத்தோலை கட்டினர். துள்ளுகிடாவும், குட்டியும் சூலாடும் கொண்டு வந்து கோவில் முன்னே வைத்து நெஞ்சைப் பிளந்தனர். அதன் குருதியைத் தெளித்தனர். வடக்கு வாசலில் பன்றியைப் பலி இட்டனர். சூல் பன்றியின் நெஞ்சைப் பிளந்து வைத்தனர். சூல் பன்றியின் குட்டி மேலே எழும்பியது. மேற்கு வாசலில் பூனையை வைத்துக் கீறினர். பின்னர் கருவூலம் இருந்த இடத்தில் பலி கொடுக்க பொன்னிறத்தை அழைத்தனர். அவள் மயங்கி விழுந்தாள். ஐயோ அண்ணன்மார்களே ஆண் குழந்தை பிறந்தால் உங்கள் பெயர் இடுவேன் என இரங்கிக்

கேட்டாள்.

கள்ளர்கள் விடவில்லை. பொன்னிறத்தாளைப் பிடரியில் அடித்து பரணிலே ஏற்றினர். கைகால்களைக் கட்டினர். ஒருவன் அவள் வயிற்றைக் கீற ஓடி வந்தான். அவளது அழகிய முகம் கண்டு இரங்கி பின் சென்றான். அடுத்து மொட்டையன் வந்தான். அவனும் அவளைக் கொல்லத் துணியவில்லை. இறுதியில் ஒரு மறவன் வந்தான். பொன்னிறத்தாளின் அருகே தலைவாழை இலையை விரித்தான். அவள் வயிற்றைக் கீறினான். வயிற்றில் இருந்த ஆண் மகவை வெளியே எடுத்து இலையில் வைத்தான். பொன்னிறத்தின் வயிற்றில் எரியும் திரியைக் குத்தி வைத்தான். கள்ளர்கள் பலியைச் சுற்றி வந்தனர். குரவையிட்டனர். பின் கருவூலத்தைத் திறந்து பொன்னை எடுத்தனர். ஒரு கள்ளன் சொன்னான் " நாம் பொன்னை அளக்க மரக்கால் கொண்டு வரவில்லை அதனால் மூங்கில் குழல் வெட்டி வருவோம்; வந்தபின் அளந்து கொள்ளலாம்" என்று. வெள்ளாளர் 10 பேரும் சம்மதித்து கொடுங்காட்டிற்குச் சென்றனர். கள்ளர்கள் எல்லோரும் முளைவெட்ட சென்றனர். காட்டாளம்மை புலி கடுவாய்களை அவர்கள் மேல் ஏவி விட்டாள். கள்ளர்களைப் புலிகள் கடித்தன; கடுவாய் பிடித்தன. எல்லோரும் இறந்தனர். இறந்த உயிர்கள் நரகத்திற்குச் சென்றன.

இந்த நேரத்தில் பொன்னிறத்தைக் காணவில்லையே என்று தாய் பொன்மாரி தேடினாள். தோழிகளை அழைத்துக் கேட்டாள். அவர்கள் சுனையில் நீராடிய போது மழை வந்தது. நாங்கள் வந்து விட்டோம். என்றனர். தாய் பதறினாள். தந்தை ஆண் மக்களை அழைத்தார், கணவனும் வந்தான். உறவினர் கூடினர். ஆக 90 பேர் சுனைக்குச் சென்றனர். பொன்னிறத்தின் காலடிப்பாதையைக் கண்டு அதன் வழி சென்றனர். காடு மலையெல்லாம் கடந்தனர். அப்போது ஆகாயத்தில் கழுகுகள் பறந்ததை அண்ணன்மார்கள் கண்டனர். கழுகு சுற்றிய பாதையை மனதில் எண்ணி எல்லோரும் நடந்தனர். அது காட்டாளம்மை கோவிலில் சென்று சேர்ந்தது. கோவிலில் நான்கு மூலைகளையும் பார்த்தனர். பூனை, ஆடு பலிகளைக் கண்டனர். இணைசூரன் கோவிலுனுள் சென்றான். நெஞ்சு பிளக்கப்பட்ட பொன்னிறத்தைக் கண்டான். அருகில் தலைவாழை இலையில் பாலகனைக் கண்டான். கையில் எடுத்தான். ஏங்கி அழுதான்.

மகளின் கோலத்தைக் கண்ட தந்தை அவள் தலைமாட்டில் மாண்டு விழுந்தார். தாயோ பொன்னிறத்தைக் கண்ட அளவில் இறந்தாள். உடன் பிறந்த ஏழு அண்ணன்மார் அவள் முன் வாளை நட்டுச் சாடினர். மாமன்மார்கள் இனி நாங்கள் வாழமாட்டோம் எனக்கூறி உயிரை விட்டனர். மற்ற உறவினர்களும் மாய்ந்தனர். எல்லோரும் மாண்ட பின்பு இணைசூரன் வாளை நட்டு அதில் பாய்ந்து உயிரை விட்டான்.

இந்த நேரத்தில் கைலாயத்திற்குச் சென்ற பொன்னிறத்தாள் சிவபெருமானைப் பணிந்தாள். சிவன் " உனக்கு என்ன வேண்டும்" எனக் கேட்டார். பொன்னிறம் " எனக்கு நாட்டில் பூசை கொள்ள வரம், தலைப்பிள்ளை மதலைகளைக் குடலைப்பிடுங்க வரம். என்னைக் கொன்ற கள்ளரின் வம்சத்தை அடியோடு கொல்ல வரம்: காட்டாளம்மன் கோவில் வேதியனையும் அவன் குடும்பத்தையும் பழியறுக்க வரம் இப்படி நிறையவரங்கள் வேண்டும்" எனக் கேட்டாள்.

மேலும் வாவறை, குறுமாங்குளி, மூன்றரை கூடம் போன்ற இடங்களில் இசக்கியாக வரம் வேண்டும் எனக் கேட்டாள். சிவபெருமானும் அவள் கேட்ட வரங்களைக் கொடுத்தான். பொன்னிறமும் நூல்பாலம் வழி கைலாசத்தைக் கடந்து தன்னைக் கொன்ற கள்ளர்கள் வாழ்ந்த ஊருக்குச் சென்றாள். கள்ளர்களின் குடும்பத்தைக் கருவறுத்தாள். குரவையிட்டாள். பின் தன்னைக் காட்டிக் கொடுத்த வேதியனையும், அவன் குடும்பத்தையும் அழித்தாள். தான் நீராடிய சுனைக்கு வந்தாள். அங்கு அவளது 21 தோழிகளும் பேய்களாக நின்றனர். அவர்களுடன் சுனையில் நீராடினாள். காட்டாளம்மை கோவிலுக்கு வந்து அம்மனை வணங்கினாள். அம்மன் பொன்னிறதுக்குப் பல வரங்கள் கொடுத்தாள்.

வரங்கள் பெற்ற பொன்னிறத்தாள் மதுரைக்குச் சென்றாள் மதுரையில் எல்லா வீதிகளிலும் பலி ஏற்றாள். மண்ணை வாரி எறிந்து பயமுறுத்தினாள்.

பொன்னிறத்தாள் பாண்டிநாட்டு யானையைப் போய் பிடித்தாள். யானைக்கு மதம் பிடித்தது. மதுரை வீதியெங்கும் ஓடியது. சாடியது துள்ளியது. மக்களை மிதித்தது. அதைப் பாகனால் அடக்க முடியவில்லை மன்னன் திகைத்தான். சோதிடர்களை அழைத்தான் யானையின்

மதத்திற்குக் காரணம் என்ன எனக் கேட்டான். சோதிடர் பிரசன்னம் போட்டுப் பார்த்தனர். தெய்வக்குற்றமிது; மதுரையை வாதைகள் வந்து பிடித்துள்ளன என்றனர். தெய்வக் குற்றத்தைப் போக்க மந்திரவாதிகள் வந்தனர். அவர்களில் இளவேலன் ஒருவன் என் மந்திரத்தில் இப்போதே அந்தப் பேயை ஓட்டிக் காட்டுவேன் பார் என்றான்.

இளவேலன் வேறு மந்திரவாதிகளை மலையிலிருந்து வரவழைத்தான். எல்லோரும் கூடி மதுரை மன்னனிடம் சென்றனர். மன்னா மதுரையில் புகுந்த வாதைகளை இப்போதே விரட்டுவோம்; எங்களுக்கு வேண்டிய பொருட்களைத் தாருங்கள், வெள்ளரிசி. குருத்தரிசி. சாம்பிராணி. களபம். பூ. பழம் சர்க்கரை, பூனைமுட்டை 21. குதிரை முட்டை 21. புலிமான் கொம்பு. நீலம் தீண்டா வெள்ளம், சாவல் 7, கோழி 100. எல்லாம் வேண்டும் என்றனர். மன்னன் கேட்டதைக் கொடுத்தான். மந்திரவாதிகள் பெரிய பரண்கட்டி ஏறி நின்றனர். இளவேலன் பரண்மேல் உரலைக் கவிழ்த்து வைத்தான். அதன் மேல் நின்றான்.

பொன்னிறத்தாள் அப்போது அவன் நெஞ்சில் ஓங்கி அடித்தாள். இளவேலன் மடிந்தான். வேலத்தி ஓடி வந்தாள். பொன்னிறத்தாளின் முன்னே வந்து குய்யோ முறையோ என அழுதாள். பொன்னிறத்தாளுக்கு வேறு பலி தருவேன்; என் கணவனை எழுப்பித்தா எனக் கேட்டாள் உடனே பொன்னிறம் வேலனை எழுப்பினாள். உயிர் பெற்ற வேலன் பல வாதைகளுக்கும் பூசை கொடுத்தான். தன் மகள் செண்பகக்குட்டியைப் பொன்னிறத்தாளுக்குப் பலி கொடுத்தான். வாதைகள் கோபம் தீர்ந்து மதுரையில் கோயில் கொண்டு நிலைபெற்றன.

# பொன்னிறத்தாள் கதை

## வணக்கம்

## விருத்தம்

படைக்கு சுருபமா கிருபைக்குள்ளே யிரண மந்து
நடத்தியே முன்னூ ற்றேழு நாளும் நலம் பெற வாழ்வும் தந்து
அடைத் தென்னை குடத்தினுள்ளே ஆணைனை உருவதாக்கி
குடத்தினில் அடைத்தீரென்னை குடமோ நோகா வண்ணம்
துறந்தென்னை வெளியிலாக்கி வைத்தீர் சிவசிவதின மறக்கமாட்டேன்

## கதைச் சுருக்கமும், காப்பும்

அணஞ்ச பெருமாள் தலைவன் அருமையாக
ஆயிழையாள் பொன்மாரி தனையும்
கலியாணம் செய்துடனே இருபேரும்தான்
காசியில் வாழ்ந்திருந்தார் சில காலமாய்
மாமறையோர் திருவருளால் மதலை தன்னை
வகுத்தார் ஏழு ஆண்மக்கள் ஒவ்வொன்றாக
ஏழு மக்கள் ஆண் மக்கள் இருக்கும் போது
ஏந்திழையாள் பொன்மாரி மனது நொந்து
ஆயிரத்தொரு பதியில் தவழச் செய்து
ஆயிழையாள் ஈன்றெடுத்தாள் ஒரு பெண் மதலை
ஈன்றெடுத்த மதலை கண்டு இனத்தார் தாமும்
இதர உலகோர் மனமகிழ்ந்து சந்தோஷமாக
பூவுலகில் கீர்த்தி பெற்ற பொன்னிறத்தாள்
புகழ் காவியம் பாட புத்திரனும் புவியிலுள்ளோரும்

பிழை பொறுத்து இக்கதையைப் புத்தியுள்ள
மனைவியர்கள் ஆராய்ந்து அறிந்து கேட்க
கரிமுகவா கடகரிவாள் முகத்து ஏழைக்
கணபதி தன்னிரு சரணங் காப்பதாமே

## பொன்மாரியின் திருமணம்

நாடான நாடதிலே நல்ல கடயத்து ஊரதிலே
கடயத்து ஊரதிலே காரிகையாள் பொன்மாரி
பொன்மாரி தாயாரும் போர்க் கொடியாள் இனிதிருந்தாள்
வடுவர் குல பொன்மாரியும் வாழ்ந்திருக்கும் நாளையிலே
பொன்மாரியும் தோழியரும் புகழ்ந்த தென்காசியிலே
வாழ்ந்திருக்கும் நாளையிலே வடுகர் குல பொன்மாரியை
அணஞ்ச பெருமாள் தலைவன் ஆயிழையை மாலையிட்டான்
மாலையிட்ட பொன்மாரியும் வாழ்ந்திருந்தார் இருபேரும்
வாழ்ந்திருக்கும் நாளையிலே மங்கை நல்லாள் பொன்மாரி
பன்னிரண்டு திருவயதில் பாவை நல்லாள் திருப்பூற்றாள்
உறவு முறையான் தான் கூடி உற்ற சடங்கே முகித்தார்
சடங்கதுதான் முகித்தபோது தார் குழலாள் பொன்மாரியும்
மன்னவரும் மங்கையரும் வாழ்ந்திருந்தார் சிலகாலம்
பதினாறு திருவயசில் பாலகரை ஈன்றெடுத்தாள்

## ஆண் குழந்தைகள் ஏழு பெறல்

ஆண்டிலொரு பாலகனை ஆயிழையாள் ஈன்றெடுத்தாள்
ஈன்றெடுத்த பாலகர்க்கு ஏந்திழையாள் பேரிடவே
சித்தனென்றும், சித்திரனென்றும், சிறந்த நல்ல புத்திரனென்றும்
தம்மப்பனும், பேப்பனும், தமக்கிளைய கிருஷ்ணனும்
வேலப்பன், மாடப்பனென்றும் வேல்விழியாள் பேரிடவே

என்று சொல்லி பேருமிட்டு ஏந்திழையாள் தான் வளர்த்தாள்
வளர்ந்து வரும் நாளையிலே மங்கை நல்லாள் மனது நொந்து
ஆணுக்கு ஆணழகன் அப்பன் ஏழு பேரிருக்க

## பெண் குழந்தைக்குத் தவமிருத்தல்

ஒரு பெண் மதலை வேணுமென்று பொன்மாரி தவமிருந்தாள்
தூரத்துக் கோவிலெல்லாம் தூத்து தெளித்திருந்தாள்
பழங்கோவிலானதெல்லாம் பகல் விளக்கு ஏற்றி வைத்தாள்
குளிர்ந்த மரச் சோலை எல்லாம் கோவிலென்றே கும்பிடுவாள்
தமுத்தமாகச் சோலை எல்லாரும் சந்ததி என்றே தொழுதார்
சந்ததி என்றே தொழுது சாத்தாவை கையெடுத்தாள்
நனைந்த முந்தி துவராமல் நடையில் வந்து கைதொழுதாள்
உடுத்த முந்தி குலையாமல் ஓவியமும் தவமிருந்தாள்
சாரங்க நாதருக்கு திருவுருவம் நேருவாளாம்
குமரியம்மாள் பகவதிக்கு குழலாடி நேருவாளாம்
குருத்தோலை நாதருக்கு குதிரை பொன்னால் விடவும் நேர்ந்தாள்.
சிவனணஞ்ச பெருமாளுக்கு செங்கோலும் நேருவாளாம்
திருவனந்தபுர பெருமாளுக்கு இலையும். வில்லும் நேருவாளாம்
மாயனுட அருளாலே மங்கை நல்லாள் திருவயிற்றில்

## பொன்மாரியின் கர்ப்பம்

பூரணமாய் கர்ப்ப மது பொன்மாரிக்கே தோன்றிடுமாம்
தோன்றிய தோர் கெர்ப்ப மது துய்ய திங்கள் ஒன்றாக
ரண்டான திங்களிலே நாகரெத்தினம் போல் நிறமானாள்
மூன்றான திங்களிலே முத்து கூட நிறமேனியானாள்
நாலான திங்களிலே நல்ல ஆலம் பழம் போலானாள்
அஞ்சான மாசத்தின் அரவயிறு ஆளானாள்

ஆறான மாசத்தில் அரகரா தஞ்சமென்பாள்
ஏழான மாசத்தில் இறையவரே தஞ்சமென்பாள்
எட்டான மாசத்தில் ஈசுபரரே தஞ்சமென்பாள்
ஒன்பதான மாசத்தில் உடையவரே தஞ்சமென்பாள்
பத்தான மாசத்தில் பாவையருக்கு மெய்நோக
மெய்தான மெய்நோவு மெலிவது கண்டுடல் பதறி

## *மருத்துவச்சியை அழைத்துவர ஏவல்*

உற்றான மருத்துவத்தை ஒரு நொடியில் கூட்டிவர
உற்றபுகழ் தூதுவனை உடனே அவர் கூட்டி வந்து
கூட்டி வந்த தூதனிடம் கூறுவாராம் ஒரு வார்த்தை
மருத்துவத்தைக் கட்டியிப்போ வரவேணும் தூதுவனே
அந்த வார்த்தை கேட்டபோது ஆகட்டென்றான் தூதுவனும்
உடனோட தூதுவனும் உற்ற ஆத்தங்கரை வழியாக
சாயபுங்கு மூருமிட்டு தான் ஓட தூதுவனும்
திடுதிடென்று தூதுவனும் சீக்கிரத்தில் போய் சேர்ந்து
மருத்துவத்தாள் பதியில் சென்று மருத்துவத்தைத்தான் விழித்தான்
விழித்த விழிதான் கேட்டு மேல்லி நல்லாள் வெளியில் வந்தாள்
ஆருதம்பி தூதுவனே அறிவு சொல்ல வேண்டு மென்றாள்
கடையத்தூர் பதிதனிலே காரிகையாள் பொன் மாரியற்கு
மாசம் பத்தும் சென்றது காண் வருத்தமுற்றாள் பொன்மாரி

## *மருத்துவச்சி பேரம் பேசல்*

மெய்பிடிக்க வரவேண்டும் மெல்லியரே மருத்துவமே
அந்த வார்த்தை கேட்டபோது ஆயிழையாள் மருத்துவமும்
மருத்துவத்தாள் கூலியெல்லாம் வரலாறு சொல்லு மென்றாள்
ஒரு களஞ்சு பொன்தருவோம் ஒண்ணுதலே மருத்துவமே

ஒரு களஞ்சு பொன்னதுதான் என்றனக்கு ஒன்றுக்கும் பற்றாது
ரண்டு களஞ்சு பொன் தாறோம் நாயகியே வாடி என்றான்
ரண்டு களஞ்சு பொன்னதுதான் நல்லெண்ணைக்கு விலையாமே
மூன்று களஞ்சு பொன் தருவோம் மொய்குழலே மருத்துவமே
மூன்று களஞ்சு பொன்னதெல்லாம் முற்றத்து முருங்கை தரும்
நாலு களஞ்சு பொன்தருவோம் நன்னுதலே மருத்துவமே
நாலு களஞ்சு பொன்னதெல்லாம் நாளிக்கிடும் பூணுக்குண்டே
அஞ்சு களஞ்சு பொன்தருவோம் ஆயிழையே மருத்துவமே
அஞ்சு களஞ்சு பொன்னதெல்லாம் அரைவயிறு கஞ்சியல்லோ
ஆறு களஞ்சு பொன்தருவோம் ஆயிழையே மருத்துவமே
ஆறு களஞ்சு பொன்னதெல்லாம் என் ஆண் மக்கள் அரஞானம்
ஏழு களஞ்சு பொன்தருவோம் எழுந்திருடி மருத்துவமே
ஏழு களஞ்சு பொன்னதெல்லாம் எந்தன் கால் சிலம்புவிலை
எட்டு களஞ்சு பொன்தருவோம் யேந்திழையே மருத்துவமே
எட்டு களஞ்சு பொன்னதெல்லாம் எந்தன் கைவளைக்குவிலை
ஒன்பது களஞ்சு பொன்தருவோம் ஒவியமே என்றான்
ஒன்பது களஞ்சு பொன்னதெல்லாம் ஓம்மென்றாள் மருத்துவமும்
பத்து களஞ்சு பொன்தருவோம் பாவையரே மருத்துவமே
பத்து களஞ்சு பொன் என்றபோது படி கடந்து வெளியில் வந்தாள்

## *மருத்துவச்சி புறப்பட்டு வரல்*

கொப்பளது தான் முறிக்க கொப்புள் கத்தி கையிலெடுத்தாள்
பொலிவுகள் தான் வாங்கி வைக்க பொத்து பெட்டி கையிலெடுத்தாள்
ஊன்றி நடப்பதற்கு ஊன்றி தடி கையிலெடுத்தாள்
மருத்துவத்தாள் முன்பாக வந்து தூதுவன் வந்தான் பின்பாக
இடவழியில் வரும் போது இருந்து கொண்டாள் மருத்துவமும்
நான்கிழவி என்மகனே நடக்கவும்தான் போகுதில்லை

ஆனையது கொடு வரட்டோ ஆயிழையே மருத்துவமே
ஆனையின் மேல் இருந்தாலும் அலையுமெடா என்னுடம்பு
குதிரையது கொடு வரட்டோ கொடியிடையே மருத்துவமே
குதிரையின் மேல் இருந்தாலும் குலுங்குமடா என்னுடம்பு
பல்லாக்கு கொடு வரட்டோ பைதொடியே மருத்துவமே
பல்லாக்கின் மேல் இருந்தாலும் பதறுமடா என்னுடம்பு
என்று சொல்லி எழுந்திருந்தாள் யேந்திழையாள் மருத்துவமே
வாறந்த வேளையில் வாணுதலாள் ஏதோ சொல்லாள்
பொன்மாரி அழுத சத்தம் பொற்கொடியாள் தான் கேட்டு
ஆயிழையாள் அழுத சத்தம் அன்னாதான் கேட்கு தென்றாள்
கல்லு முருகுதல்லோ கற்பசுவும் கன்றினும்
புல்லு முருகுதய்யோ புவன மெல்லாம் நடுங்குதய்யோ
அந்த வார்த்தை கேட்டல்லோ அரமனையில் வந்து சேர்ந்தாள்

## பொன்மாரியின் வேதனை

மருத்துவத்தை கண்டபின் வருத்தமுற்றாள் பொன்மாரி
வந்தாயோ மருத்துவமே வலதுபக்கயிரு நீ என்றாள்
வலதுபக்கம் இருக்க சொன்ன மங்கையரை முகம் நோக்கி
ஏதுபக்க நோகுதம்மா இளங்கொடியே பொன்மாரி
பாடகங்களிட்டிருக்கும் படங்களெல்லாம் நோகுதடி
மோதிரங்களிட்டிருக்கும் மொழிகளெல்லாம் நோகுதடி
பக்கம் பருத்திருக்கும் கொங்கண் நோவுதடி
உடம்பெல்லாம் நோகுதடி உரையாட போகுதில்லை
அப்போது மருத்துவமும் ஆயிழையோடேது சொல்வாள்
மலங்காதே பொன்மாரி மகாதேவர் காத்திடுவார்

## மருத்துவச் சிகிச்சை

கலங்காதே காரியந்தான் சொல்லுகிறேன்
கிண்ணியிலே எண்ணெய் வாங்கி கிளிமொழியாளோ திருவருள்
ஓதின தோர் எண்ணெய் தன்னை உடன் குடிக்கவே கொடுத்தாள்
உட்குடிக்கவே கொடுத்த உடன் வயிறு தானோக
எண்ணெய் அதுதான் குடிக்க யிளகுதல்வோ குழந்தை யது
ஆதியுட திருவருளால் அரைகடந்து கீழ்நோக்கி
மெல்லி நல்லாள் தன் தனக்கு மின்னோவுத்துடங்கிடுமாம்
சாவுருண்டு வருவதுபோல் தான் பிறக்கும் பாலகியாள்

## குழந்தை பிறத்தல்

வெள்ளி யென்ற கிழமையிலே மீனமென்ற ராசியிலே
ஏற்றிய தோர் பஞ்சமியில் உதயமது மீனமதில்
தெள்ளிய தோர் பொன்மாரிக்கு சிவனுடைய திருவருளால்
பள்ளியறைப் புரைத் தன்னிலே பாலகி வந்து பிறந்தாளே

## பொன்மாரிக்கு சிகிச்சை

பாலகி வந்து பிறந்த அப்போதே
பைந்தொடி மார்கள் மனதுமகிழ
கூசாமல் சேலைகட்டி யிறுக்க ஒருத்தி
கும்பகடிக்கு மருந்து கொடுக்க ஒருத்தி
சத்திப்பால் சாத்திட்டி பார்க்க ஒருத்தி
தாளியில் மஞ்சள் கலக்க ஒருத்தி
வேப்பங்குளை தேடிபோக ஒருத்தி
வென்னிருக் காச்சி ஒத்தக ஒருத்தி
மஞ்சள் அரைத்துத் திரட்ட ஒருத்தி
மாணிக்க பொற்காப்புச் சாற்ற ஒருத்தி
காய மிளகு கடுகு கொடு திப்பிலி
கடைச் சரக் கெல்லாம் அரைத்து கொடுக்க

## மருத்துவச்சிக்கு பரிசு

திண்ணைதலத்தில் இருந்து எல்லோரும்
செம்பொன் பொலிவு கொடுத்தாள் ஒருத்தி
ஒரு பணங்கொண்டு பொலித்தாள் ஒருத்தி
ஊழ்கெட்டுக் கொண்டு பொலித்தாள் ஒருத்தி
ரண்டு பணத்தை பொலித்தாள் ஒருத்தி
நாலு பணத்தை பொலித்தாள் ஒருத்தி
அஞ்சு பணத்தை பொலித்தாள் ஒருத்தி
அரைஞாண் கொண்டு பொலித்தாள் ஒருத்தி
காறை களத்தி பொலித்தாள் ஒருத்தி
கர்க்கடக மாலை பொலித்தாள் ஒருத்தி
பீலிக் களத்தி பொலித்தாள் ஒருத்தி
பின் தாங்கி கொண்டு பொலித்தாள் ஒருத்தி
பொன் மோதிரத்தை பொலித்தாள் ஒருத்தி
இரண்ட சுவடி பொலித்தாள் ஒருத்தி
எருக்கல மாலை பொலித்தாள் ஒருத்தி
வெள்ளிக் களத்திப் பொலித்தாள் ஒருத்தி
வெங்கலக் கிண்ணி பொலித்தாள் ஒருத்தி
அன்று பொலிந்த பொலிவுகள் எல்லாம்
ஆயிழை மருத்துவம் தானே எடுத்தாள்
முப்பது களஞ்சு பொன்னை எடுத்து
மொய்குழல் மருத்துவத்தார்க்கு கொடுத்தார்
இன்னுங் குறையுள்ள தெல்லாம் உனக்கு
இருபத்தெட்டுக்கு தருகிறோம் என்றார்
என்று தான் சொல்லியே மன்னனும் தேவியும்
ஏந்திழைமாரும் யியல் மும்முறை யாரும்

சலிப்பென்றுமில்லை எனக் கொன்று தாயே
தானே மருத்துவம் தன்பதிப்போக
மருத்துவத்தார்க்கு விடையுங் கொடுத்து
மங்கை பொன்மாரி ஈன்ற பாலகி தன்னை ஆட்டுவாளே

## குழந்தையைத் தாலாட்டுதல்

பொங்கும் புலிதேசம் கடைய நகர் பிறந்தவளே
தாரி ரரி ரரி ரரி ராரோ தாரி ரரி ரரி ராரி ராரோ
உமையம்மை தன்னருளால் பொன்மாரி ஈன்றகன்றோ
எங்கள் குடிவாழ பிறந்த கன்றோ ஈனாத வாழைக்கன்றோ
செங்கண் நெடுமால் அருளாலே வந்தவளோ
சங்கடங்களை தீர்க்கவந்த தமிழ்சேர் மயிலே நீ ராரி
தாராட்டும் வேல்விழியாள் தாரக் குழலாள் பொன்மாரி
சீராட்டிப் பிள்ளை தன்னை சிறப்புடன் தாலாட்டுவாளாம்
நீராட்டி பிள்ளை தன்னை நிறைந்த தொட்டிலில் தான் கிடத்தி
மணியோ மணிவிளக்கோ மங்கை பொன்மாரி ஈன்ற கன்றோ
மங்கை நல்லாள் மனமகிழ வையகத்தோரும் புகழ
தோகை வந்து உதித்த சிறந்த மரகத மணியோ
கண்மணியோ காரிகை பொன்மாரி பெற்ற கன்றோ
கண்மணியாள் பாலகியை கண் முகத்தோடணைத்தாள்
பெண்ணரசி பெற்ற கன்றோ பேராசை தீர்த்த கன்றோ
கனியமுத வாயழகி காரிகையாள் ஈன்ற கன்றோ
தவசிருந்து பெற்ற மகள் தானுறங்க தாராட்டுவாளாம்
என்று சொல்லி தாராட்டி இன்பம் குளிர்தங்கேயிருக்கலுற்றாள்

## வேறு

## குழந்தைக்குப் பெயரிடல்

இருபத்தெட்டாம் நாளையிலே இருபத்தெட்டும் கெட்டி பெயரிடவே
ஆருடைய பேரிடுவோம் அழகாய் பிறந்த நல் பாலகிக்கு
முன்பிலுள்ளோர் பேரிடவே மூத்தோர்கள் பேரிடவே
தாய்தகப்பர் பேரிடவோ தங்கை நங்கைமார் பேரிடவே
மாமன்மார் பேரிடவோ மச்சினமார் பேரிடவோ
அந்த பேரல்லாமிட வேண்டாம் அழகாய் பிறந்த பாலகிக்கு
பொன்மாரி இறைமகள் பொன்னிறத்தாள் என்று சொல்லி
அட்டதிருக் கலியாணம் செய்து அரையில் பூவாடை சுற்றுவாராம்
எட்டுமாச மானதிலே யிதமாகக் காதுங்குத்த

## பொன்னிறத்தாள் வளருதல்

காதுங்குத்தி தோடுமிட்டு கனத்த பொன்பணி தானணிந்தார்
மூன்றான திருவயசில் முடிவளர்த்தாள் பொன்னிறமும்
நாலான திருவயசில் நாகரீக பட்டுடுத்தாள்
அஞ்சான திருவயசில் அழகு வர்ண பணிபூண்டாள்
வளர்ந்தாளே பொன்னிறமும் வார்ப்புருக்கு வார்த்தபோ
அள்ளி தொழித்தது போல் அழகு பெற தேமலாய்
வாரி தொழித்தது போல் வயிறுரெல்லாம் தேமலாய்
கோரி தொழித்தது போல் கொங்கையிரண்டும் தேமலாய்
நெத்தி புருவமது நேர் பிறை சேர்த்தது போல்
மையிட்ட கண்ணழகும் மதிமுகங்குறிஞ்சிரிப்பும்
ஒய்யார கைவீச்சும் ஒரு பாவந்திலை முடியும்
வலது தோளிலே தாப்பும் மார்பிலிட்ட பொன்பணையும்
யேததாப்பும் நடையுடையும் இருகாலில் சிலம்புலியையும்

பார்த்தவர்க்கு அழகுபெற பத்துவிரல் மோதிரமும்
கிளிமொழியாள் பொன்னிறத்தாள் கீழ்மாறி பார்த்த கண்ணும்

## பொன்னிறத்தாளின் தோழிகள்

வளர்ந்து வரும் நாளையிலே மங்கையரும் தோழிமாரும்
தோழிமார்கள் கூட்டுவாராம் தோகை பொன்னிறத்தாளுக்கு
இருபத்தொரு தோழிமாரும் இனமினமாய்க் கூட்டுவாராம்
வெள்ளான் மகளொருத்தி வேதியனார் மகளொருத்தி
சாலியனார் மகளொருத்தி தாழ்ந்த கைக்கோளன் மகளொருத்தி
கண்ணாளன் மகளொருத்தி கருமறவன் மகளொருத்தி
தட்டனார் மகளொருத்தி தாணுவன் மகளொருத்தி
சித்திகூடையான் மகளொருத்தி சிறந்த கன்னான் மகளொருத்தி
குசவனார் மகளொருத்தி கோமுட்டியாள் மகளொருத்தி
இலவாணியன் மகளொருத்தி இசந்த செட்டி மகளொருத்தி
பார்பனர் மகளொருத்தி பட்டாணி மகளொருத்தி
நாயக்கன்மார் மகளொருத்தி நாடானர் மகளொருத்தி
ஆந்திரன்மார் மகளொருத்தி துலக்கன்மார் மகளொருத்தி
பட்டுநூலான் மகள்தனையும் பலயினமாய் கூடுவாராம்
பலஇனமாய் தோழிமாரும் பைங்கிளியாள் பொன்னிறமும்
இனமினமாய் தோழியர்கள் எல்லோரும் கூடுவாராம்

## பொன்னிறம் பந்தாடுதல்

வந்தாள் பொன்னிறமும் தோழிமாரும் வாய்த்த கடயம் பதியில்
பந்தடிக்க வேணுமென்று பாவையர்கள் தான் கூடி
வாராயோ பொன்னிறமே வாய்த்த பந்தடிப்பதற்கு
குலத்தொடு பந்துவகை கொடியிடைமார் தானெதோர்
முறபந்தாம் முகில்பந்தாம் மூன்று நிறமான பந்தாம்

ஓலபந்தாஞ் சீலபந்தாம் உற்ற குருத்தோல பந்தாம்
பச்சற்பவள பந்தாம் பழக்காய் நிறமான பந்தாம்
பொன்னு பந்தாம் தங்க பந்தாம் நிறமான பந்தாம்
பொன்னின் நீலவான பந்தாம் சிங்கார பந்தாம்
பொட்டகத்தில் வைத்திருந்த பட்டுநூலுயிட்ட பந்தாம்
மங்கை பொன்னிறந்தனக்கு தங்க தாரியிட்ட பந்தாம்
தங்க தாரியிட்ட பந்தாம் சகலாத்து பந்தாம்
சகலாத்து பந்துடனே தங்க மரகத சுவர்ண பந்தும்
மரகத மாணிக்க பந்தும் வர்ணமிட்ட சின்ன பந்தும்
பந்து வகைதானெடுத்து பைந் தொடிமார்களெழுந்தருள
அங்கே சந்தி புளிமூட்டில் வந்தனரே

## வேறு

ஓரோலம் ஒருபந்தை எடுத்து ஒன்னுதல் பொன்னிறம் தட்டிடுவாளாம்
இரண்டேலம் ஒருபந்தை எடுத்து நன்னுதலாள் பந்தாடிவாறாள்
மூன்றேலம் ஒரு பந்தை எடுத்து மொய் குழல் பொன்னிறமாடியவாறாள்
நாலோலம் ஒரு பந்தை எடுத்து நாயகியாள் பந்தாடியவாறாள்
ஐந்தோலம் ஒரு பந்தை எடுத்து அச்சுரைத் தொழுதாடிய வாறாள்
ஆறேலம் ஒரு பந்தை எடுத்து ஆறுமுகனை தொழுதாடிய வாறாள்
ஏழேலம் ஒரு பந்தை எடுத்து இறையவரை தொழுதாடிய வாறாள்
எட்டேலம் ஒரு பந்தை எடுத்து ஈசுபரரை தொழுதாடிய வாறாள்
ஒன்பதோல மொரு பந்தை எடுத்து உடையவரை தொழுதாடிய வாறாள்
பத்தோல ஒரு பந்தை எடுத்து பைந்தொடி பொன்னிற மாடியவறாள்
எனக்கொரு விதமாடாய் பந்தே எனக்கொரு தோழிக்கொரு விதமாடாய்
ஆடென்றாள் ஆடாய் பந்தே ஐங்கரரை தொழுதாடாய் பந்தே
அம்பரம்பரமாடாய் பந்தே ஆதி பொருளைப் பார்த்தாடாய் பந்தே
சிவனாரைபார்த்தாடாய் பந்தே திருமாலை பார்த்தாடாய் பந்தே

நான்முகனை பார்த்தாடாய் பந்தே நடராஜனை ஆடாய் பந்தே
ஒன்னாம் பந்து பொன்னிடம்தட ஓடிய எல்லை விடப்புறஞ்சாட
ரண்டாம் பந்து தோழியடிக்க நலமுடன் ஒரு தரம் வெறியாக
மூன்றாம் பந்து பொன்னிறம் தட்ட முட்டிய எல்லை விட்டுபுறஞ்சாட
நாலாம் பந்து தோழியடிக்க நலமுடன் பின்னும் வெறியாக
ஆகூவெனவே பந்தடிக்க ஆகாசமீதில் பந்து பறக்க
மறுபிறந்தோழி அடித்திடும் பந்தை வலதுகாலால் பொன்னிறந்தட்ட
ஆகாசத்தில் பந்து எழும்பி அந்த எல்லை அகமே விழுமாம்
வெற்றி நமக்கில்லை என்று மெல்லியல் பொன்னிறம் இருந்தாள்
பின்னும் பந்து அடிக்க வென்று பூவையர் தோழிகள் கூறிடுவாராம்

## வேறு

## நாயக்கர் வரவு

மதுரை நாடதிலே திருமலையான் நாயக்கன் மகன்
தளவா நாயக்கன் மகன் தக்க இண சூரனுமோ
தூங்கலிங்க புரிமறவன் துட்டன் வெள்ளையத்தலைவன்
அசையீட்டி காரர்களும் அடப்பம் பிடிப்பவரும்
முன்னணியும் பின்னணியும் முன்னும் பின்னுமாய் வரவே
அரமனைக்கு போகவென்று அன்று தண்டியல் ஏறிவர
இணசூர பெருமாளும், இவர்கள் கூடவரவே
பொன்னிறமும் தோழிமாரும் புளியமுடானதிலே
விதிலசத்தால் மணமுகிக்க விதி வருவதறியாமல்
கைபந்து தட்டு வாரும், கால்பந்து தட்டுவாரும்
கைகொண்டு எறிவாரும் கைகொண்டுபிடிப்பாரும்
அய்யயோ பந்துதப்பி ஆகாசம் போகுதென்பார்
பொய்யல்ல இவளடித்த புதுபந்து போகுது என்பார்

அம்மானை போட்டாட்டிடுவார் அவரவரோ பிடிப்பார்
பந்துதனை எடுத்தெறிவார் பந்து போகு பாருமென்பார்
பங்கையஞ்சேர் மடவார்கள் பந்து அடிக்கும் புதுமைகண்டு
கண்டவர்கள் நிற்கையிலே கைபந்து நின்றனராம்
பந்தடித்த புதுமை எல்லாம் பார்த்து நின்றான் இனசூரன்
சிவலிங்க மன்னவரை சேவிக்கவே போகுநேரம்
பொன்னிறத்தாள் அடித்த பந்து போகுதல்லோ பல்லாக்குமேல்
தோழி அடித்தபந்து தூர விலகி போய்விடுமாம்

## இணைசூரனின் காதல்

தண்டாமரை மார்பன் தான் இணசூரப் பெருமாள்
கண்டெனெ பொன்னிறத்தை காரிகையாள் தன்னழகை
பொன்னிறத்தை கண்டபோது புகழ் இணசூரப் பெருமாள்
வண்டாடும் பூங்குழலை மாலையிட வேண்டுமென்று
மதிமறந்து தள்ளாடி வாணுதல் அழகு கண்டு
மங்கையவள் மேலாசையினால் மன்னன் இணசூரனுமோ

## பொன்னிறம் பற்றிக் கேட்டல்

கூடிநின்ற பேர்களுடன் கூறுவானாம் ஒரு வார்த்தை
நாடதிலே இவள்தனைபோல் நான் கண்டதில்லை என்றான்
தேடரிய பொன் பணமோ திரவியமோ தேன்மொழியாள்
பேடைமயில் பொன்னிறத்தை பெண்பேசி போவதற்கு
தோழியாரை தானழைத்து சூரனின் சூரனுமோ
இவள் ஊரேது பெயரேது உற்றார் பெற்றார் தானேது
வகைஏது தலமேது வகை படியே சொல்லுமென்றாள்
தோழியோடு கேட்டவுடன் சொல்லலுற்றார் சூரனிடம்

## தோழிகள் விபரம் சொல்லல்

ஊருமோ தென்காசி உற்ற பேர் பொன்னிறத்தாள்
ஆசை பெருமாள் தலைவன் அவருடைய அருமைமகள்
இவள் மாமன்மார் ஊரதுதான் வாழ்கடைய ஊரல்லொ
உற்றார் உறமுறையார் ஊருமோ தென்காசி
இவளுடைய அண்ணன்மார்கள் ஏழுபேர்கள் தானுமுண்டு
இருபேர்கள் இங்கிருப்பார் ஏனை ஐந்து பேர்கள்தான்
அரமனைக்குதான் போவார் ஆணழகன் அஞ்சுபேரும்
அவர்களுக்கு அருமையிவள் ஆயிழையாள் பொன்னிறமும்
அந்தவார்த்தை கேட்டபோது ஆணழகன் இணசூரன்
பொன்னிறத்தாள் அழகுண்டு போகாமல் அரமனைக்கு
தன்னுடைய மனைதன்னிலே தான் போனான் இணசூரன்
உண்ணாமல் உறங்காமல் ஒருவரோடும் பேசாமல்
தானிருந்தான் இணசூரன் சடவாய் மனம் சலித்து
சடைந்திருந்த அவனிடத்தில் தாயாரும் தான் கேக்க

## தாயாரின் கேள்வி

என்மகனே இணசூரன் இப்படி இருப்பான்
அரமனைக்கு போனஇடத்தில் அரசர் உனைஅடித்தாரோ
இல்ல எந்தன் மாதவே என்னம்மா சொல்லுகிறேன்

## இணைசூரனின் வர்ணனை

அரமனைக்கு போனஇடத்தில் ஆயிழையாய் பொன்னிறத்தை
கண்டு மதிமசங்கி வந்தேன் காரிகையாள் வடிவுகண்டு
ஈந்தபழம் போலேயிடக் காவிபல் லொழிவும்
அள்ளிதொழித்தது போல் ஆறு வகைதே மலுமாம்
வாரித் தொழித்தது போல் வயறெல்லாம் தேமலம்மா

கூடும் புருவமது குலையானை கொம்பதுபோல்
நெற்றிபுருவமது நேடுபிறை சேர்த்தது போல்
முத்தம் தொழித்ததுபோல் முகம் நிறைந்ததேமலம்மா
பார்த்தவர்க்கு கண்குளிர பத்துவிரல் மோதிரமும்
அஞ்சனகண் மையழகும் அலங்கார கொப்பழகும்
தேய் பிறையதுபோல் திருநீற்று குறிஅழகும்
ஓலை குருத்துபோல் ஒரு பாகம் தலைமுடியும்
செம்பவள வாயழகி செந்தாமரையது போல்
கிளிமொழியாள் பொன்னிறத்தாள் கீழ் மாறி பார்த்தகண்ணும்
பொன்னிறத்தாள் அழகு கண்டு போகவில்லை அரமனைக்கு
அம்மா நானிங்கு வந்தேன்
மதி மறந்து மசங்கி வந்தேன் மாலையிட வேண்டுமம்மா

## *தாயின் வாக்குறுதி*

அந்த வார்த்தை கேட்டபோது அம்மையுமோ என்ன சொல்வாள்
மலங்காதே என் மகனே மாலையிட்டு வைப்போ மென்றாள்
முன் முறைக்கு என் அண்ணனல்லோ முறை மாமன் மகளல்லோ
மாலையிட்டு பொன்னிறத்தை மணமுடித்து நான் தருவேன்
மாலையிட்டு அரண்மனைக்கு போய் வருவாய் ஆணழகா
ஆணழகன் இணசூரன் அரண்மனைக்குதான் போனான்
இணசூரன் தன்னுடைய ஏத்த புகழ் தாயாரும்
மணவாளன் சுடலைமுத்து வருவார் குலத்துதலைவன்
தன்னோட தானுரைத்தான் தான் மகிழ்ந்து சடுதியிலே
சுடலைமுத்து தலைவனவன் துரிதமாய்த்தான் நடந்து
அணஞ்ச பெருமாள் தலைவன் அவனோடு ஏது சொல்வாள்
உன்மகள் பொன்னிறத்தை உடன் மாலைசூட்டுதற்கு
தானோடு தானுரைத்தான் தான் மகிழ்ந்து சடுதியிலே
ஆகட்டென்று சொல்லிவிடவே அணஞ்சபெருமாள் தலைவன் தானும்

## வேறு

## பொன்னிறம் திருமணம்

மாமன் மகள் பொன்னிறத்தை மணமாலை சூட்டுதற்கு
நாள்கேட்டு முகிர்த்தமிட்டு நாயகிக்கு பருவமிட்டார்
கல்யாண சிலவுமிட்டு காரிகைக்கு முகிர்த்தமிட்டார்
முகிர்த்தமிட்டு யிருபேருக்கும் முறை போல பந்தலிட்டார்
மரகதத்தால் பந்தலிட்டு மாணிக்க கோலஞ்செய்தார்
பூமாலை அலங்கரித்து பிச்சிமலர் அரளிமாலைசூடி
அடைக்காயும் வெற்றிலையும் அவரவருக்கு கொடுக்க
உற்றார் முறையார் ஊரவர்க்கும் பாக்கு வைத்து
வாழுமிணை சூரனையும் மணக்கோலந்தான் செய்து
மணக்கோலஞ்செய்து வழிநடந்தார் சீக்கிரத்தில்
திடதிடென முழங்கிடவே நாகசுரமூதி வர
எக்காளம் பேரிகையும் இடியதுபோல் வெடி முழங்க
வெடிமுழங்க முரசறை வெங்கல தாளங்கொட்ட
கொட்டு வெடிகளுடன் கவுத்து வெடிசரக்கும்
அச்சிமாலை தன்னைவிட்டு ஆதரவாய் வழிநடந்தார்
சேம்பூரு தன்னைவிட்டு திடுதிடென மாப்பிளையும்
உப்பாறுதனை கடந்து ஒழுகுபனை விளையும் விட்டார்
வருகுதல்லோ மாப்பிள்ளையும் மணக்கோலந்தான் கூடி
தெங்காசி ஊர்பதியில் சென்றாரே எல்லோரும்
சோலையிலெயிருந்த பெண்கள் சுடுமணலுக் காற்றாமல்
வாடிநிழல் தோறும் வந்திருப்பார் பெண்களெல்லாம்
கடையத்தூ ரானதிலே கட்டுடனெ வந்தற்பின்
எதிர்மாலையிடுவாரும் எதிர்வழக்கு பிடிப்போரும்
மகிழ்த்து வமாய் மாப்பிள்ளையை மறுமனையில் கொண்டெயிருந்த

மாப்பிள்ளைதான் இருந்தற் பின் மாமன்மார் சடங்கு செய்ய
கடம்பூரு மாமனுக்கு கடுகஉடன் கோப்பு வைத்தார்
மாமனுக்கு கலியாணம் மணிபந்தலின் கீழ் முகர்ந்தார்
கண்டவர்கள் மனமிகழ் கலமரிசி அளந்து வைத்தார்
சேலையுடன் அடைக்காயும் தென்னங்காய் உடைத்து வைத்தார்

## மணப்பெண் அலங்காரம்

பொன்னிறத்தை அலங்கரித்து பூட்டினார் அணிகளெல்லாம்
அட்டவர்ண பந்தலிலெ அழகு வர்ண பலகையிட்டு
பூவாடைதனை எடுத்து பொதிந்தாரென பலகையின் மேல்
மாமனையும் அதிலிருத்தி மங்கையரை கொண்டுவந்து
பாதமதுதான் விளக்கி பணிந்து தொழுதுநின்றாள்
பொன்னிறத்தை முகம்நோக்கி புகழ் பெரிய மாமனுமோ
இருப்பாய் மாங்கலியமுடன் என்றென்றைக்கும் அழியாமல்
என்று சொல்லி மாமனுமோ எழுந்தார் சந்தோசமுடன்
மாப்பிள்ளையைக் கூட்டி வந்தார் வர்ண மணி பந்தலுக்கு
இட்டமணி பந்தலிலெ இருந்தினார் பலகையின்மேல்

## மாங்கலியம் சூட்டல்

வட்ட மணி பந்தலிலெ வரவழைத்தார் பொன்னிறத்தை
கொட்டு வாத்தியம் முழங்க குரவைகளும் ஒலிக்க
இட்டவிதியதினாலெ இணசூரன் மாப்பிளையும்
செப்பெடுத்து இணசூரன் சேர்த்தானே மாங்கலியம்
பிரமாவை தான் நினைத்து பொன்னிறத்தாள் திருகளுத்தில்
பூட்டினார் மாங்கலியம் புகழ்பெரிய இணைசூரன்
மாங்கலியம் தான் பூட்ட மடவர்கள் குரவையிட
பேணி உரல்தானெடுத்து பிரமபீடம் சுத்திவந்தார்
முக்காலும் சுத்தியல்லோ முது மனையின்கண் புகுந்தார்

# தனி வீட்டில் இருத்தல்

பிந்தாநாள் மாப்பிளையும் பொன்னிறத்தாள் பெண்மயிலும்
கடையத்தூா் உறமுறையும் காரிகையாள் பொன்னிறமும்
கூட வந்த இனத்தாரும் கொடியிடைமாா் தன்னுடனே
கடையத்துா் தன்னை விட்டு கல்லாற்றங்கரை கடந்தாா்
மடமடென தவில் முரசும் மங்கையா்களின் குரவைகளும்
இடியதுபோல் வெடிஅதிர இயல் மடவாா் குரவையிட
வருகுதல்லோ மாப்பிளையும் வாழ்ந்திருக்கும் அரண்மனைக்கும்
தெரியுதல்லோ நேர் கிழக்கே சேம்பூரு ஆனாதுவும்
காண்பீரோ சேம்பூரை கன்னியரே மடவாரே
திடுதிடென வழி நடத்து சேம்பூரு தன்னில் வந்தாா்
சேம்பூரு தன்னில் வந்து சிறப்புடன் வாழ்ந்திருந்தாரே

## வேறு

இருந்தாரே சேம்பூரு தன்னிலே
இயல்பாகவே மன்னனும் தேவியும்
சேரவே நல்ல ஏழு கழித்துடன்
செய்ய நல்ல பதினாறு வந்தபின்
அருந்தவஞ்சேர் பொன்மாரித் தாயாரும்
அரிசிப்பொடி அரையது கோட்டையில்
ஈரைந்து பெட்டியில் அரிசியும்
ஏத்த எண்ணெய் சீமாவரைப்புடன்
அனுப்பியங்கெ யிருந்தாளே பொன்மாரி
ஆன சேம்பூரு பதிக்கு கொடுபோக
இனிதாக இணசூரன் மன்னவன்
யிரு சரின்ற அரமனை வந்தபின்

வாங்கிய பதினாறும் நடத்தியே
வாழந்திருந்தாரெ மன்னும் தேவியும்ர
இருந்தாரே மதனும் ரதியும் போல்

## குழந்தை வேண்டித் தவம்

யேத்த பிள்ளை வேணுமென சொல்லி
ஈரண்டு வருஷமதாகவே
ஈஸ்பரர் மேல் கருத்தாக பொன்னிறமும்
தான தருமங்கள் செய்யவே ஏழைக்கு
தக்கமன்னனும் தேவியுமாகவே
ஏழைகளுக்கும் இறைவர்களுக்கு
ஏந்திழையாள் தருமங்கள் செய்யவே
தருமம் செய்து தவங்களிருந்துடன்
தானிணசூர மன்னனும் தேவியும்
அதிக சங்கடம்மாக யிருந்தாரே . . . . .

## வேறு

வாழ்ந்திருக்கும், நாளையிலே மகாதேவர் திருவருளால்
பிரம்மன் விதிப்படியே பொன்னிறத்தாள் தன் தனக்கு
மங்கை நல்லாள் திருவயிற்றில் மதலை உருவாய் வளர்

## பொன்னிறம் கர்ப்பமடைதல்

சூழ்ந்தோர் விதிவசத்தால் தொல்லுலகோர் தானறிய
மதலை வந்தவதரிக்க மங்கையர்க்கு மாசம் ஒன்றாக
தோகை நல்லாள் பொன்னிறந்தனக்கு தோன்றும் மாசம் இரண்டாக
மெல்லி நல்லாள் பொன்னிறந்தனக்கு மிக்கமாசம் மூன்றாக
நாலான மாசமதில் நன்நுதலாள் பொன்னிறமும்

நாயகரே தஞ்சமென்று நாயகியாள் இனி திருந்தாள்
அஞ்சான மாசமதில் அரைவயிறு சூலானாள்
அகமகிழ்ந்து இணைசூரன் அன்புடனே தானிருந்தாள்
ஆறான மாசமதில் அம்மையப்பர் இடத்தில் வந்து
அறிவித்தாள் ஆறுமாசமென்ன அன்னை தந்தைதாய்மகிழ

## *மகப்பேற்றுக்கு வரல்*

ஏழான மாசமதில் ஏந்திழையாள் பொன்னிறத்தை
தாய் தகப்பர் இடமதில் தார்குழலைக் கூட்டிவர
தக்கபல இனமுறைக்கும் சடுதியிலே அறிவித்தாராம்
இனமுறையார் தான் கூடி ஏந்திழையை கூட்டிவர
கூட்டி வழிதான் நடந்தார் கொடியிடைமார் எல்லோரும்
தென்காசி தனைவிட்டு சேம்பூரு தன்னில் வந்து
கண்ணான நிழலதிலே கடுக அங்கே யிருந்தனராம்
ஆலநிழல் தனிலிருக்க ஆகாசமானதிலே
பல்லியது சொல்லிடுமாம் பரபிரன்ன கோட்டானும்
சொல்லுதல்லோ பல்லியது தோகையவள் சாகும்படி
அது பலரும் பாராமல் ஆயிழைமார் தானடைந்தார்
சந்தோசமாய் பொன்னிறமும் தாயாரின் பதியில் வந்து
வலது கால் தூக்கி வைக்க வாசல் நடை தட்டிடுமாம்
வாசல் நடைதட்டிடவே மங்கையரும் மனசடைத்து
எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி இருந்தாளே பொன்னிறமும்

## *வேறு*

இருந்தாளே பொன்னிறமும் ஈசுவரரே தஞ்சமென்று
தென்காசியில் வந்த போது சிறந்த மாசம் எட்டதாக
சென்ற மாசம் ஒன்பதிலே சேயிழை தோழியர்கள்

# முளைப் பாலிகை வைத்தல்

மங்கையரை பொன்னிறமும் மாசம் ஒன்பதானதிலே
வைக்கவேண்டும் முளைகளென்று வரலாறு சொல்லுவாராம்
அந்த வார்த்தை கேட்ட போது அகமகிழ்ந்து பொன்னிறமும்
அம்மையப்பர் தன்னுடனெ மகிழ்ச்சியுடன் சொல்லுவாளாம்
இருபத்தொரு தோழிமார்கள் எல்லோருந்தான் கூடி
வைக்க வென்று முளைகளது மங்கையர்கள் எல்லோரும்
குசவனார் திண்ணையிலெ கண்ட பாத்திரமெடுத்து
இருபத்தொரு தோழிமாரும் வித்து வகை
பொன்னிறத்தாள் தன்னிடத்தில் பூவையர்கள் வாங்கலுற்றாள்
எள்ளுடனே சிறுபயிறு இலங்கு சாம கடைக் கண்ணி
பயிறுடனெப் பருத்தி கொட்டை பருத்தி மொச்சைக் கொட்டையுடன்
அவரையோடு சிறுதுவரை ஆனதொரு உளுந்துகளும்
தினையுடனே செந்தினையும் சீரகச் சம்பாவும்
வரண வரிசம்பாவும் வாரிசிறை மீண்டானும்
தட்டர் வெள்ளையுடன் தக்கநல்ல கருப்புக்காலி
பூங்கண்ணி செங்கண்ணியும் புகழ்வரவு குறுவரவும்
வரிகுறுவை மொட்டக்குறுவை வாய்த்த அறுவன்குறுவை
சிறந்த வெள்ள சம்பாவும் சேர்த்த அரிக்கிராவியும்
சேகரமாய் வித்துவகை சேர்த்தாரே எல்லோரும்
மிதுனமென்ற மாசத்தில் மிக்க இருபத்தொன்றாம் நாளையிலே
வகைவகையாய் வித்து எடுத்து மாட்டுரமும் தான் வாரி
ஆட்டுரமும் தான் வாரி அவரவர்கள் முளைப் பருத்துதற்கு
ஏழுநாள் விரதம் பூண்டு யேந்திழைமாரெல்லோரும்
பொன்னிறமும் தோழிமாரும் போனாரே சுனைக்கரைக்கு
சுனைதன்னிலே நீராடி தொழுதெடுத்து முளை பார்த்த

முளைகளெல்லாம் பரத்தி மொய் குழல் மாரெல்லாம்
குருத்தோலை பெட்டிக் கொண்டு கொடியிடை மார்தான்முடி
அவரவர்கள் வைத்தமுளை அவரவர்கள் பலன் பார்க்க
ஏழுநாள் களிக்கும் மட்டும் யிருந்தவர்கள் வீட்டில் வந்து
ஏழுநாள் கழிதற்பின் எல்லோருந்தான் கூடி
சுனைக்கரையிலே சென்று நின்று தொழுதெடுத்தார் முளைகள் தன்னை
எல்லோரும் வைத்தமுளை யிதமாக வளர்ந்து நிற்க
அவரவர்கள் வைத்தமுளை ஆகாயாம் வளர்ந்து நிற்க
பொன்னிறத்தாள் வைத்த முளை பூமியில் அடியமுகி நுனிகருகி
இப்படித்தான் இருப்பதினால் இதுபலனும் போறாது
என்று சொல்லி தோழியரும் யேந்திழையாள் பொன்னிறமும்

## முளையைச் சுனையில் விடல்

சுனைத்தன்னிலே முளை விடுவோம் தோகையரெ தோழியரே
ஆமெனவே தோழியர்கள் அவரவர்கள் முளைஎடுத்தார்
அரனே சிவன் துணை என்னவெ அருஞ்சுனையிலே யிறங்கி
மாரளவு தன்னியிலே மங்கையர்கள் எல்லோரும்
மேலக்கரை சுனையில் நின்று விட்டமுளை பலன் பார்க்க
எல்லோரும் விட்ட முளை இதத்த கீழ்க்கரைச்சேர
பொன்னிறத்தாள் விட்டமுளை பூமி நோக்கி தாழ்ந்திடுமாம்
மனம் வருந்தி பொன்னிறமும் மனைதன்னிலே போவோ மென்றாள்
இருபத்தொரு தோழிமாரும் ஏந்திழையாள் பொன்னிறமும்
மனைதன்னிலே வந்திருந்து வைத்த முளை பலனுரைத்தார்
பொன்மாரித் தாய் கேட்டு போராத காலமென்றாள்
கரைசேர்த்த முளைபலனைக் கன்னியர்கள் தான் பார்த்து
அது கழித்து ஏழாநாள் ஆயிழையாள் தோழியார்கள்

## சுனையாடப் புறப்படல்

சுனையாடி வருவதற்கு தோழியார்கள் புறப்பட்டார்
வாராயோ பொன்னிறமே வாய்த்த சுனையாடுவதற்கு
சுனைக்கரைக்கு போவோமென்று தோழியர்கள் தானுரைக்க
அந்த வார்த்தை கேட்டபோது ஆயிழையாள் பொன்னிறமும்
வேறுவேலை இருக்குதடி மெல்லிநல்லாள் தோழியாரெ
முன்போங்கோ தோழியரெ நான் பின்னே வாறேனென்றாள்
பாலுகறக்க வில்லை பால்மாடு சாய்க்கவில்லை.
அரமனைக்கு போனதற்கு அமுது கறி சமைக்கவில்லை
நித்திரையில் கண்ட கனா என்நெஞ்சகத்திலே இருக்க
வளக நல்லூர் அம்பலத்தில் வருவேனடி தோழியரே
தோழியர்க்கு புத்தி சொல்லி தோகை நல்லாள் பொன்னிறமும்

## தீய சகுனம்

பால் கறக்க வேண்டு மென்று பால்கடையால் கையிலெடுத்தாள்
இளங்கன்று தன்னை விட்டு யேந்திழையாள் பால் கறந்து
முன்கறந்த பால் காச்சி மொய் குழலாள் உறியில்வைத்து
பின்கறந்த பால்களெல்லாம் பொன்னிறமும் காய்க்கும் போது
உறி தன்னிலேயிருந்தே உறமோரும் பாலையுந்தான்
பூனையது தானுருட்டி பூமியில் விழுந்திடுமாம்
சதிகார பூனையது தட்டிக் கவிழ்த்த தென்று
மனது கலக்க முற்று மங்கை யருஞ் சடைத்திருந்தாள்
சடைத்திருக்கும் வேளையிலே தையல் நல்லாள் பொன்மாரி
அரமனைக்கு போறதொரு ஆயிழையாள் உன்கணவன்
வரும் போது யிங்குவருவார் வைக்க வில்லையோ அமுதகறி
பொன்மாரி தாயறிந்து பொற்கொடியும் ஏது சொல்வாள்

## தீய கனவு

நேற்றுராவு சாமமதில் நித்திரையில் நான் கண்டகனா
சுனையாட போன இடத்தில் தோழியர்கள் வரவும் கண்டேன்
தனித்து நீ பொன்னிறமே தக்க சுனையாடக் கண்டன்
கள்ளருன்னை தான் பிடித்து காட்டு வழிக் கொடு போகக் கண்டேன்
காட்டாளம்மன் கோவிலிலெ கடுகவெலி கொடுக்க கண்டேன்
சுனையாட போகாதே தோகையரே பொன்னிறமே
என்று சொல்லி பொன்மாரி ஏந்திழையை தான் விலக்க
விலக்கின சொல் கேளாமல் மெல்லி நல்லாள் பொன்னிறமும்
போடிபோடி என்தாயே பூத்தானம் பேசாமல்
குறத்தி குறி மெய்யானால் குமடுமலை பொன்னாமே
துருப்பிடிச்சு போகையிலே புதுப்பிக்க முடியாது

## பொன்னிறம் புறப்படல்

என் விதியை விலக்குவதற்கு யாராலா ஆகுமம்மா
அமைத்த விதியல்லாது அழுதா கிடைத்திடுமா
சமைத்த சோறு அதுதான் தானும் பின் அரிசியாமோ
கண்டவற்கு பலியாது காரிகையே மாதாவே
மலங்காதே மாதவே வருவேனம்மா சுனையாடி
உடுப்பதற்கு துகில் எடுத்தாள் உத்த மஞ்சள் தானெடுத்தாள்
நீராட துகிலெடுத்தாள் நிறைந்த மஞ்சள் காப்பு எடுத்தாள்
எடுத்தாளே பொன்னிறமும் ஈசுபரா தஞ்சமென்று
துகிலது கையெடுத்தாள் தோகை நல்லாள் பொன்னிறமும்

## தாயார் தடுத்தல்

தாயாரடி தொழுவே தையல் பொன்மாரி ஏது சொல்வாள்
கேளாயோ என்மகளே கிளிமொழியே என் வார்த்தை
உன் தகப்பர் வந்துண்டால் மகளே உள்நோட துணைவருவார்
மணவாளன் வந்துண்டால் மகளே கூடத்து துணை விடுவேன்
போகாதே பொன்னிறமும் பூஞ்சுனையில் நீராட
ஆகாது பொன்னிறமே அஞ்சுன்னையில் அமருவரும்
கள்ளர் மறவருன்னைக் கண்டாக்கால் விடுவாரோ
காரிகையே பொன்னிறமே கடவாதே மனையைவிட்டு
சொன்னாலுங்கேளாயே தோகையரே பொன்னிறமே
மண்ணாவான் சீர்னமயிலே மறவர்ரெம்ப உண்டு மக்கா
கண்ணான என்மகளே கழுத்தறுக்குஞ் சாதியம்மா
முன்னாலே சுனைக்கரையில் முப்பழிகள் கொண்டதவம்
வளக நல்லூர் அம்பலத்தில் மறவர் கொலை செய்த தலம்
மூங்கலடி முக்காட்டில் முப்பழிகள் செய்தலம்
ஈங்க நெரிப் பறச்சேரிக்காப்பால் ஏழுபேரைக் கொன்ற தலம்
இனியாருடனுரைப்பேன் என்மகளே பொன்னிறமே
போகாதே பொன்னிறமெ பூஞ்சுனையில் கெடுதிவரும்
பெண் மதலையில்லாமல் பேதலித்து முகம் வாடி
பழங்கோவிலான தெல்லாம் பகல் விளக்கு ஏற்றி வைத்தேன்
தூரத்துக் கோவிலெல்லாம் தூத்துத் தொளித்திருந்தேன்
ஆனதினால் எந்தனக்கு அருளினாதோர் பாலகியாள்

## பொன்னிறம் தனியே செல்லல்

விலக்கின சொல் கேளாமல் மெல்லி நல்லாள் தான்போறாள்
தனியதான் சுனையாட தானடந்தாள் பொன்னிறமும்
பொன்னரனெ கானாமென்று புலம்பலுற்றாள் பொன்மாரி

மூத்த வெளியானதலே மொய் குழலாள் வரும் நேரம்
பட்ட மரம் தன்னிலிருந்து பல்லியது சொல்லிடுமாம்
அது பலனும் பாராமல் ஆயிழையாள் வழிநடந்தார்
வட்ட பாறை யானதிலே மங்கை நல்லாள் வரும் நேரம்
பறையர் கம்புவெட்டி வழியேதான் ஊணிக் கொண்டு
எதிரேதான் வரவும் கண்டு ஏந்திழையாள் பொன்னிறமும்
உடல்பதறி உள்மசுங்கி உடையவரே தஞ்சமென்றாள்
சிவனே உன் தஞ்சமென்று சீக்கிரத்தில் வழி நடந்தாள்

## குறத்தி குறி கூறல்

வாறவழி தன்னிலொரு மலங்குறத்தி எதிரேவர
கைப்பிடித்து பொன்னிறத்தின் கண்டபலன் சொல்லலுற்றாள்
சுனையாட போனதுண்டால் தோழியர்கள் தான் சதிப்பர்
சுனையாட போகாதே தோகையனே பொன்னிறமே
தனியே நின்று சுனையதிலே தாயே சுனையாடிடுவாய்
கள்ளருன்னைத் தான் பிடித்து காட்டுவழி கொடு போவார்
கட்டாளம்மன் தன் தனக்கு கடுகவெலிதான் கொடுப்பார்
சுனையாடப் போகாதே தோகையரே வாழ்மயிலே

## பொன்னிறம் மீண்டும் செல்லல்

போடி போடிக் குறமகளே பூத்தானம் பேசாமல்
வாழ் மயிலாள் குறமகளும் மலைநோக்கி
வாழ் மயிலாள் குறத்தி குறி மனதிலே எண்ணாமல்
வாகை நல்லூர் அம்பலத்தில் வாணுதலாள் செல்லு நேரம்
முன் போன தோழியரை மெல்லி நல்லாள் காணாமல்
தோழியரைக் காணாமல் தோகையரும் திகைத்து நின்று
சதித்தாரே தோழியர்கள் சதிகேடு வந்த தென்றாள்

என்று சொல்லி பொன்னிறமும் ஏந்திழையுந்தான் புலம்பி
பார்த்தாளே நாலுதிக்கும் பாவியர்கள் சதித்தாரென்றாள்
வாகை நல்லூர் அம்பலத்தில் வந்தோமே நெடுந்தூரம்
திரும்பியே போனாலும் தேடுவார்கள் தோழியர்கள்
என்று சொல்லி பொன்னிறமும் யேந்திழையும் வழிநடந்து
வாறதெல்லாம் வரட்டெனவே வழிநடந்தாள் பொன்னிறமும்

## வேறு

## பொன்னிறம் சுனையாடல்

கடுநடையாய் தானடைந்து கண்டாளே தோழியரை
வாகை நல்லூர் அம்பலத்தில் நான் வருமளவும் நில்லாமல்
வந்ததென்ன தோழியரே மனம் பதறி வந்தேனான்
சந்தோசமாய் தோழிமாரும் தையல் நல்லாள் பொன்னிறமும்
தலைக்கெண்ணெய் அரப்புமிட்டு தையல் நல்லாள் எல்லோரும்

## சுனை நீராடல்

சுனை தன்னிலே தானிரங்கி தோகையர் நீராடும் நேரம்
முட்டளவு தண்ணீரில் ஒருமுல்லைப்பூ ஆயக் கண்டாள்
இப்பூவை எடுத்தாலென்று யானும் சுனையாடுவதில்லை
அரையளவு வெள்ளத்திலெ ஒரு ஆண் மதலை இருக்கக் கண்டாள்
இம்மதலை எடுத்தெறிய யானும் சுனையாடுவதில்லை
கழுத்தளவு தண்ணியிலே கை காலை பிடிக்க கண்டாள்
கலியுகமோ என் சிவனெ கர்த்தாவே கடுஞ்சுனையில்
என்று சொல்லி பொன்னிறமும் ஏந்திழையும் சுனையாட
சுனையாடி நிற்கயிலெ சூழ்ந்த விதிப்படியே

## புயலும் மழையும்

காட்டாளம்மன் பெரும்படைகள் காற்றாக அடித்ததுலே
காத்து மழை தன்னுடனே கடுகவே பெரும் புசலாம்
எறிமழையும் இருள்காத்தும் இருளாகமூடியதே
ஆதாளிக் காத்துடனே துய்யயிடி முழக்கங்களும்
கூடி நின்ற தோழியர்கள் கூறுவாராம் ஒரு வார்த்தை
பதறுதே பொன்னிறமே பரமசிவன் காத்திடுவார்
கரையேறு பொன்னிறமே கடுஞ்சுனையில் நில்லாதே
என்று சொல்லி தோழியர்கள் ஏறினர் கரைதன்னிலே

## பேய் பொன்னிறம் போல் செல்லுதல்

கரையேறி போகையிலே கடுகபேய் பொன்னிறம் போல்
பொன்னிறம் போல் வடிவாகி பேய் கூட வந்ததுவே

## தோழியர் பொன்னிறத்தை தேடுதல்

வாகை நல்லூர் அம்பலத்தில் மங்கையர்கள் கூடிநின்று
பொன்னிறத்தை பார்க்கையிலே பிறகே வர கண்டதில்லை
சுனை தன்னிலே நின்று விட்டாள் தோகைநல்லாள் பொன்னிறமும்

## பொன்னிறம் தனிப்படல்

இருள் வாங்க கரைஏறி ஏந்திழையாள் பொன்னிறமும்
புளிய மர மூடதிலே போய் சேர்ந்தாள் பொன்னிறமும்

## பொன்னிறம் தவிப்பு

புளியமரம் தான் சரிய புயலுங்காத்து மடித்திடுமாம்
ஆலமர மூடதில் போய் அணுகி நின்றாள் பொன்னிறமும்
தனித்தாளே பொன்னிறமும் தடுமாறியங்கு நின்றாள்

தாயார் சொல் கேளாமல் தனித்தே நான் இக்காட்டில்
மனமெறிந்து பொன்னிறமும் மங்கை நல்லாள் வாடி நின்றாள்
மணவாளன் அறிந்ததுண்டால் பழிமறித்து விலக்கி விடுவார்
தொகுதியுடன் திசை காட்டி தொடந்து வர மனதிருண்டோ
என்று சொல்லி பொன்னிறமும் ஈசுவரரெ தஞ்சமென்றாள்
குடுகுடென்ன வடகாத்து கொண்டு மழைத்தாள் பொழிய
ஆலமர மிட்டல்லவோ ஆயிழையாள் பொன்னிறமும்
மாமரத்து மூட்டிலே போய் நின்றாளே பொன்னிறமும்

## திருடர் கூடிப் பேசுதல்

அன்னாளில் கள்ளரெல்லாம் ஆகவொன்றாய் கூடுவாராம்
தென்காசிக் கோட்டையைப் போல் அழகாய் நின்ற இடம்
காட்டாளச்சி கோவிலிலே கடிதாய் கூடினரே
வெள்ளாளர் பத்து பேரும் வெகுமறவர் பதினைத்துபேர்
கண்ணாளன் ஆறுபேரும் கருமறவன் பதினொரு பேர்
வாணியர்கள் நாலுபேரும் வம்பறயர் பதினைந்து பேர்
அறுபத்தொரு கள்ளர்களும் அவரவரே கூடுவாராம்
எவ்வூரில் போவோமென்று அவர்கள் பேசி நிற்கையிலே
அதிலொரு கள்ளனவன் அவன் தானும் சொல்லு வானாம்
காட்டாளம்மன் கோவிலிலே கருவூலங்கள் இருக்குது
கூடனதோர் கள்ளரெல்லாம் குறிபலன் பார்த்தெழுந் திருந்தார்
வெட்டியே எடுப்பதற்கு விரைவாக போவோ மென்றார்
அதில் ஒரு கள்ளனுமோ ஆதரவாய் ஏதோ சொல்லான்

## மையிட்டுப் பார்த்தல்

மந்திரமும் தந்திரமும் மாயவித்தை படித்தவன் நான்
மையிட்டு பார்ப்பதற்கு மைக்கூடு எடுக்க வேண்டும்

மைக்கூடு தானெடுத்து வழிநடந்தார் சடுதியிலே
அறுபத்தொரு கள்ளரிலும் ஆறுபேர் மந்திரவாதி
காட்டாளம்மன் கோவில் வந்து கடுகவே மையிட்டனராம்
மையிட்டுப் பார்ப்பளவில் வருகுதல்லோ பேய் படைகள்
பார்த்திடவே பூமியது பாதாளம் வெடித்திடுமாம்
கைக்காறன் மைக்காறன் கண்டு சொல்லுவான் கள்ளருடன்

## காவல் பூதங்கள்

கருவூலங்கள் இருப்பதுண்டும் காவல் பூத மெத்த வுண்டும்
உண்டுமடா சொல்லுகிறேன் உற்றபுகழ் பேயின் பெயரை
இந்த நல்ல தலந்தன்னிலே ஈனகுல இசக்கியுண்டும்
சண்டாள மூப்பூதமுண்டும் சடையிசக்கி மாடனுண்டும்
பாதாள பூதமுண்டும் பச்சை தின்னி இசக்கி யுண்டும்
முக்கால் வட்டத்தில் யிசக்கி யுண்டும் முன்னோடு பூத முண்டும்
புதுவரங்கள் பெற்றுவந்த புகழ் பெரிய இசக்கி யுண்டும்
இத்தலத்தில் மூன்று கூட்டத்தில் இசக்கி நிற்குகிறாள்
தேச மெய்க்க வரங்கள் பெற்ற செங்கிடா பூதமுண்டும்
பாலாட்டு யிசக்கி யுண்டும் பச்சை தின்னி மாடனுண்டும்
சூலாட்டு இசக்கியுண்டும் துன்னிமறிக் காறியுண்டும்
செங்கிடா காறானுண்டும் திருகுகொம்பு காறனுண்டும்
இள்நேரத்து வாதையுண்டும் ஏத்த சடையிசக்கி காறியுண்டும்
மந்திர நல்மூர்த்தியுண்டும் அந்திரகுலயிசக்கி யுண்டும்
எதிரடிவாள் வாதையுண்டும் ஏத்தவிடு மூர்த்தியுண்டும்
காட்டாளம்மன் கோவிலிலே கடுக முன்னாள் உணவு கொண்ட
குருமூர்த்தி விடுமூர்த்தி கூண்ட கடுவாய் மூர்த்தியுடன்
பஞ்சவரைக் கொல்லயிட்ட பழைய மூர்த்தி ஐந்து முண்டும்
கொக்கோட்டு இசக்கியுண்டும் குறுமாங் குளி காரியுண்டும்

வாவறவாள் இசக்கியுண்டும் வழித்தலவாள் இசக்கியுண்டும்
சின்ன யிசக்கி பெரிய யிசக்கி சிறந்த பழையூர் யிசக்கியுண்டும்
கணியன் கைவெட்டியுண்ட கலங்கொட்டி வாதையுண்டும்
எதிர்த்தாரை சங்கரிக்கும் ஏத்த சங்கிலி பூதமுண்டும்
அனந்த குளத்திசக்கி யுண்டும் எல்லோருக்கும் துணையாக
இத்தனையும் திரளாக இணர்வந்து கூடுதென்றான்

## பேய்களின் அட்டகாசம்

மையிட்ட கள்ளுனுட வாய்தனிலே எறிகள் விழ
கல்லு கொண்டும் எலும்பு கொண்டும் கள்ளர்தனை எறிந்திடுமாம்
எறியாத்த மாட்டாமல் எல்லாக் கள்ளர்களும் ஓடுவாராம்
ஓடியல்லோ கள்ளரெல்லாம் உற்ற வட்ட பாறையிலே

## புரிசம் பார்த்தல்

வட்ட பாறையானதிலே வந்து கள்ளர் கூடுவாராம்
கூடியந்த கள்ளரிலே குறிகாறன் புரஷம் வைத்தான்
வைத்ததொரு புரஷத்திலே மாபூதந்தலியுல்லொ
கருவூலத்தில் தேவன்தமார் காவலாக நிற்பதுண்டு
கூட்டறவாய் வெகு பேய்கள் கூடியங்கே நிற்குதெல்லா
இந்த நல்ல தெய்வங்களுக்கு ஏத்த பெலி கொடுக்க வேண்டும்

## பலி கொடுக்க வேண்டியவை

என்று சொல்லி குறிகாறன் ஏத்த கள்ளன் தானுரைக்க
செங்கிடா பூதத்திற்கு செங்கிடா ஒன்று வேணும்
துள்ளுமறிக காறிக்கல்லெ துள்ளிக் குட்டி ஒன்று வேணும்
சூலாடு இசக்கிக்கொருச் சூலாடுதானும் வேண்டும்
பாலாட்டு இசக்கிக் கொரு பாலாடு தானும் வேண்டும்

கருவூலத்து பூதத்திற்கு கரும்பன்றி ஒன்று வேண்டும்
சின்ன யிசக்கி தான் தனக்கு சிறுகாரி பூனை வேணும்
வாதைகளுக்கு கோழியது வகைவகையாய் நூறு வேணும்
இளநேரத்து வாதைகளுக்கு ஏத்த சுட்டி கிடாய் வேணும்
இத்தனையும் போராது இன்னும் கேளு கள்ளர்களே
ஆளுக்கு கெங்கேபோவோம் ஆளில்லா அடவியிலெ
அதிலே ஒருமாபாவி அரும்பாவி ஏது சொல்லான்
ஓடியங்கே நான் வரும் போது உத்த சுனைக் கரையருகே
தலைபிள்ளை நிறைசூலிதான் தனித்து நிற்க கண்டேன்
சுனைக்கரையில் போனதுண்டால் சூலிதனை கொடுவரலாம்
என்று சொல்லி மாபாவி இல்லை என்றார் கள்ளரெல்லாம்
சுனைகரையில் ராத்திரியில் சூலிவந்து நிற்பாளோ
சூலிகள் தான் வருவாளோ சுனையாட ராத்திரியில்
திகைத்து நிற்க கள்ளரெல்லாம் சிறந்த வட்ட பாறையிலே

## வேறு

## வேதியன் பூசை செய்ய வரல்

காட்டாளம்மன் கோவிலிலே கடுக சாமபூஜை செய்ய
பூஜை செய்ய போவதற்கு புகழ் பெரிய வேதியனும்
உருளியிலெ உறுளியுடன் உற்ற தீவெட்டியுமாய்
சுனைத்தன்னிலே நீர்கோர சுனைக் கரையிலெ வந்தாரனெ

## பொன்னிறம் வேதியனிடம் உதவி கேட்டல்

வேதியனை கண்டதுபோது மிகமகிழ்ந்து பொன்னிறமும்
வேதியரே எவ்வூருக்கு மிக்க ராவுக்கு நீர் போறீர்
அப்போது வேதியனும் ஆரனவே தான்அறிய
ஆறுபிள்ளை பெண் கொடியே ஆளில்லா யடவியிலெ
நிற்பதென்னப் பெண் கொடியே நீயாரென கேட்டான்
கேளுமெந்தன் வேதியரெ கீர்த்தியுடன் ஒரு வார்த்தை
இருபத்தொரு தோழியோடெ ஏத்த சுனையாட வந்தேன்
சதித்துவிட்டார் தோழியர்கள் தனித்தேனான் சுனைக்கரையில்
வழியுந் தெரியுதில்லை வழித்தடமும் காணுதில்லை
திசைதெரிய மாட்டாமல் திகைத்து நின்றேன் வேதியரே
அந்த வார்த்தை கேட்ட போது அந்தணனும் ஏது சொல்வான்
ஊரேது பேரேது நன்னுதலே சொல்லு மென்றான்
ஊருமோ கடையத்தூர் உற்றபேரும் பொன்னிறத்தாள்
அண்ணன்மார் ஏழுபேர்கள் உண்டு அரமனை குறிகாறர்.
அரமனைக்கு மணியக்காரன் ஆணழகன் இணசூரன்
என்று சொல்லி பொன்னிறமும் ஏங்கியோங்கி தானழுதாள்
உன்னை பொன்னிறமுமே உன் ஊரதிலே கொண்டிடுவேன்
நான் காட்டாளம்மன் கோவிலில் போய் கடுக பூசை செய்து வாறேன்
பூசை செய்து வருமளவும் போகாதே நில்லு மென்றான்.
பூசையிட்டு வேதியரே போம்போது என்னை கூட்டி
கொண்டு சென்று விட்டுவிட்டால் கோடி பணந்தந்திடுவார்
ஆகட்டும் என்று சொல்லி ஆயிழையாள் பொன்னிறத்தை
போய் வாறேன் நில்லுஎன்று போகலுற்றார் வேதியரும்

## பொன்னிறம் புலம்பல்

வேதியனும் போகும்போது மெல்லி நல்லாள் புலம்பலுற்றாள்
சதித்தாரே தோழியர்கள் சங்கரனார் கற்பனையோ
கெடுத்தாரே என்னையுமோ கெடுமதியால் இங்கு வந்தேன்
மாதாவின் வார்த்தை தள்ளி மதிகெட்டு நான் மாளவந்தேன்
என்று சொல்லி பொன்னிறமும் ஏந்திழையாள் தான்புலம்ப
மான்போலே மறுகிடுவாள் மங்கைநல்லாள் பொன்னிறமும்
விலக்கின சொல் கேளாமல் வீணிலேயா சாகவந்தேன்
உற்ற தந்தை அறிந்தாலே உடனோடி வாறாரோ
பெற்றதாய் அறிந்தாளானால் பின்னே தேடிவாராளோ
விட்டு விட்டு வந்தோமென்று மெல்லியர்கள் சொல்லலையோ
தவமிருந்து பெற்றெடுத்த தாயாரோடு சொல்லலையோ
மாலையிட்ட மணவாளர் மன்னவருக்கு சொல்லலையோ
அண்ணன்மார்க்கு சொன்னதுண்டால் அரைநொடியில் வருவார்களே
கடம்பூரு மாமன்மார்க்கு காரிகையாள் சொல்லலையோ
அறிந்தாக்கால் இருப்பரோ அவரவரேதேடிடுவார்
என்று சொல்லி பொன்னிறமும் ஏந்திழையாள் அழுகலுற்றாள்

## வேதியன் திருடரைச் சந்தித்தல்

காட்டாளம்மன் கோவிலிலே கடுக பூசை செய்ய போன
வேதியனும் வழிநடந்து விரைவாக கோவிலிலே
கோவிலிலே செல்லும் நேரம் கூட்டமிட்டுக் கள்ளர் நிற்க
திசைபிழைத்து கள்ளரெல்லாம் திகைத்து நிற்கும் நேரமதில்
வேதியனை கண்டாரே விரைவாக கள்ளரெல்லாம்
கண்டவுடன் வேதியனை கையோடு கூட்டி வந்து
வந்து நின்று வேதியனும் வரிசையுள்ள கள்ளரிடம்

ஆராரு அண்ணர்களே அடவியிலெ கூடியிருப்பதென்ன
அந்த வார்த்தை கேட்ட போதே ஆதரவாய் ஏதோ சொல்வார்
திசையறிய மாட்டாமல் திசைபிழைத்து நிற்கிறோம்
கள்ளர் வார்த்தை கேட்ட போதே வேதியனுமேதே சொல்வான்
திசையறிய மாட்டிரானால் திக்குதிசை நான் சொல்லி தாறேன்
சொல்லி தாறேன் என்றபோதே சொற் பெரியகள்ளரெல்லாம்
வாரும் வாரும் வேதியரே வரலாறு கேட்பதற்கு
வாருமென்ற வேளையிலே வரலாறு சொல்லவென்று
காட்டாளம்மன் கோவில் விட்டு கடுதாய் வட்ட பாறை வந்து

## வேதியனைக் கட்டுதல்

வந்ததொரு வேதியனை வார்த்தை கேக்க கட்டு மென்றார்
கட்டுமென்ற வேளையிலெ கருமறவன் ஒருவன் வந்து
கட்டி விட்டான் வேதியனை கடுகவே முன்னேவந்து
என்னைத்தான் கட்டுவது ஏனடா கள்ளர்களே
காட்டாளம்மன் கோவிலிலே கருவூலம் எடுப்பதற்கு
தலப்பிள்ளை நிறசூலிக்கு சரியாக உந்தன்னைத்தான்
வெலிகொடுத்து நிதி எடுக்க வேதியனே உந்தன்னைத்தான்

## வேதியன் காட்டிக் கொடுத்தல்

என்னை வெட்டி வெலி கொடுக்க வேண்டாம் யிகல் பெரிய கள்ளர்களே
என் கட்டை அவிழ்த்திடுங்கோ இப்பவெலிக்கு ஆள் காட்டித் தாறேன்
காட்டித்தாறேன் என்ற போதே கட்டவிழ்த்தார் கள்ளர்களும்
எங்கே நீ காட்டி தாறாய் இகல் பெரிய வேதியரே
கடையத்தூர் பதிதன்னிலெ காரிகையாள் பொன்னிறமும்
தோழியர்கள் விட்டுவிட்டார் சுனைக்கரையில் நிற்குகிறாள்

கண்டெனென்று வேதியனும் கலங்கியவன் சொல்லிடவே
சொன்னபோதுக் கள்ளரவர் சூலியோ எனக் கேட்டார்
ஒன்பது மாத சூலியென்று சொன்னானே வேதியனும்
சூலி என்று சொற்கேட்டு சொற்பெரிய கள்ளரெல்லாம்
வாரும் வாரும் வேதியரே மங்கையரைக் காட்டித் தாரும்
காட்டியே தந்தீரானால் உம்மையே விட்டிடுவோம்
வேதியனும் முன்னடக்க மிக்க கள்ளர் பின்பாக
வட்டபாறை தனைவிட்டு வழிநடந்தான் வேதியனும்
சுனைகரையருகாக சூரன்மார் வந்தார்கள்
புளிய மரமூடதிலெ பொன்னிறமும் யிருக்கக் கண்டார்
கண்டீர்களோ கள்ளர்களே காரிகையாள் இருப்பதுவை
என்று சொல்லி வேதியனும் இன்பமுடன் மனையில்போனான்
வேதியனும் போனபோது மிக்க புகழ் கள்ளர்களும்

## திருடர்கள் பொன்னிறத்திடம் பேசுதல்

பொன்னிறத்தாள் அருகில் வந்து புகலுவானாம் ஒரு வார்த்தை
ஏதேது பெண் கொடியே யிங்கிருந்து அழுவதென்ன
யிருபத்தொரு தோழியோடெ யானுஞ்சுனையாட வந்தேன்
சுனையாடி வருகையிலெ தோழியர்கள் சதித்துவிட்டார்
சதித்துவிட்டார் தோழியர்கள் தனியே சுனையாடினேன்
சுனையாடிக் கரையில் வந்தேன் சொரிமழைதான் பெய்ததண்ணே
மழைமாரி பொழிந்ததினால் வழித்தடங்கள் தெரியாமல்
திகைத்து நான் இருக்கிறேன் சொல் பெரிய அண்ணார்களே
என்னைத்தான் கூட்டிகொண்டு எந்தன் ஊரில் விட்டதுண்டால்
விட்டதுண்டால் அண்ணர்களே வெகுபணங்கள் தந்திடுவார்
கூட்டிக்கொண்டு விடுவதற்கு குற்றமில்லை பெண் கொடியே
உந்தனுடஊரும் பேரும் உரிமையுடன் சொல்லுமென்றான்

தாய் தகப்பன் பேர்தனையும் தார்குழலே சொல்லுமென்றான்
என்தகப்பர் அணஞ்ச பெருமாள் என்தாய் பொன்மாரி
அண்ணன்மார் ஏழுபேர்கள் அரமனைக்கு குறிகாறன்
என்று சொல்ல பொன்னிறமும் ஏற்ற புகழ் கள்ளருடன்
உன் புருஷன் பேர்தனையும் உரிமையுடன் சொல்லுமென்றான்
உங்களுட பெஞ்சாதிமார் உங்கள் பேரைச் சொல்வார்களோ
மாலையிட்ட மணவாளர் வாய்த்த இணசூரரண்ணே
அழுதழுது பொன்னிறமும் ஆயிழையாள் புலம்புவாளாம்
என்தகப்பர் சம்சாரிண்ணே இருநூறுகலம் நஞ்சை நிலம்
புஞ்ச நிலமதிலும் நூறு பெரும் வாழ்வு சமுசாரி
முக்காதமுண்டு மண்ணே முழுவதும் எங்கள் ஊர் மனைதான்
ஊர்மனையில் கொண்டு சென்று உடன் சேர்தீரானாக்கால்
என்னுடைய தாய்தகப்பர் என் அண்ணமார் ஏழுபேர்
உங்களையும் உபசரித்து உரியபடி பசியாத்தி
அம்மையப்பர் இடந்தனிலே அண்ணே கொண்டு வீட்டிரானால்
என்ன ஒரு நிறையில் வைப்பர் பொன்னை ஒரு நிறையில் வைப்பர்
என்னுடைய நிறை தன்னிலே இடைக்கிடை பொன் தந்திடுவார்

## திருடருக்குள் உரையாடல்

அப்போது அதிலொருவன் அவர்களுடன் ஏதோ சொல்வான்
கூட்டியங்கே கொடுபோனால் கூண்ட நிறை பொன் தருவார்
மேட்டி செய்ய வெண்டாங்காண் விட்டிடுவோம் ஊர்பதிலே
கேட்டிலையோ அண்ணே நீ கேள்வி அணஞ்ச பெருமாள்
வீட்டிலே தான் கொடுபோனால் வெட்டிடுவான் இரண்டு துண்டாய்
என்றுரைக்க கேட்ட யேனை யொரு கள்ளனவன்
பொன்னிறத்தை வெலி கொடுத்து பெரிய நிதி எடுத்தாலே
மானிலத்தில் வெகுகாலம் இருப்போமோ இறவாமல்

உங்களுடைய மனிதர்களை உயிரோட கொல்வதுண்டோ
தன்னுடைய உயிரது போல் தான் பார்க்க வேண்டுமென்றான்
வேண்டுமென்று சொன்னாயே மிக்க நிதி மிகுதிருந்தால்
அறுவளங்களுண்டாகும் அவனிதனில் கீர்த்திவரும்
வேணுமென்ற காலமெல்லாம் வீட்டிலிருந்துண்டிடலாம்
என்று சொல்லி மாபாவி யேந்திழையாள் பொன்னிறத்தை

## பொன்னிறத்தை ஏமாற்றி அழைத்துச் செல்லல்

உன்னாணை பொன்னிறமே உங்களுட அரமனையும்
அன்னாதான் தெரியுதடி அரமனையும் வாசல்களும்
முன்னேநட பொன்னிறமே உன்னைகொண்டு விட்டிடுவோம்
என்று சொல்லக் கள்ளருமெ ஏந்திழையாளேது சொல்லாள்
எங்கிருந்து வந்தீரோ என்னுடைய அண்ணர்களே
நாட்டு வழி நடவாமல் காட்டுவழி நடந்தீரோ
கள்ளர்களே நீங்களண்ணே கள்ளரில்லே பொன்னிறமே
காளை கொள்ளப் போக வந்தோம் கரையாளர் பொன்னிறமே
காளை கொள்ள வந்தவர்க்கு கயிறுகையில் இருக்காதோ
கயிறு கொடு வந்தோமில்லை காரிகையே பொன்னிறமே
என்று சொல்ல கள்ளர் தன்னை யேந்திழையுமேது சொல்வாள்
எங்களுடைய அரமனைக்கு என்னை கொண்டு விட்டிடுங்கோ
அந்த வார்த்தை கேட்டபோதே ஆகட்டென்றார் கள்ளருமே
கிழக்கு பாதையாக சென்று கொடியிடையே விட்டிடுவோம்
என்று சொல்ல கள்ளரெல்லாம் ஏந்திழையைக் கொடுபோனார்
முன்னே நட முன்னே நட மொய்குழலே முந்திநட
முன்னே தான் நடப்பதற்கு என்மேனி கண்டால் தெரியாதோ
முன்னே விட்டு கள்ளரெல்லாம் மொய்குழலை கொடு போனார்
நாட்டுவவி தானிருக்கக் காட்டு வழி கொடு போறீர்

காட்டு வழி கொடு பொறீர் கள்ளர்களோ நீங்களண்ணே
கள்ளரில்லை பொன்னிறமே கரையாளர் மக்கள் நாங்கள்
தண்ணீர் தவிக்கு தண்ணே தாகமெத்தாயிருக்குதண்ணே
தண்ணீர் கேட்ட வேளையிலே சண்டாள பாவி கள்ளர்
குருத்தோலை பட்டை வெட்டி குழுகுழு எனநீர் வார்தது
குறிசேடு செய்தவனுங் கொடுத்தானெ பாவிக்கள்ளன்
வாங்கியதை பொன்னிறமும் வயிறெரிந்து முகம் வாடி
என்ன தண்ணீர் அண்ணர்களெ எரி கொண்டு நாறுதண்ணே
நல்ல தண்ணீர் பொன்னிறமே நடுகாட்டு உவரு வெள்ளம்
இக்காட்டு தண்ணீர் தான் எரிகொண்டு நாறு மென்றாள்
கொட்டி கவிழ்த்து விட்டாள் கோபமுள்ள பொன்னிறமும்
தட்டி கவிழ்த்து விட்டாள் தங்கவளைக்கையாலே
காட்டு நுள்ளிக் காய்பறித்து காரிகையாள் பொன்னிறமும்
தின்று தண்ணீர் போல் குடித்து தீர்த்தானெத்தாகமதை
மனிதர் தடங்காணாத வழியேதான் கொடுபோறீர்
ஊருவழி காணாத உடன் காட்டு வழிக் கொடு போனார்
காலுங்கடுக்கு தண்ணே காலுகள் தடுமாறுதண்ணே
அண்ணர்களே யிந்தவழி ஆள்போக அருங்காடு
இந்த வழி வரமாட்டேனேன்று யேங்கி யேங்கிதானழுதாள்
அழுதாளே பொன்னிறமும் அரனெழுத்தோ என்று சொல்லி
பொன்னிறத்தாள் படுந்துயரம் புகழ்மலையில் மிருகங்கண்டு
கண்டல்லவா மிருகங்களும் கவலையுற்று கரடிபுலி
ஊர்குருவி யானை சிங்கம் உற்ற நல்ல வரையாடும்
வரையாடும் மான்கலையும் மற்றுமுள்ள கரடிகளும்
புல்லுவாய் புலியுடனே புகழும் பன்றி மந்திகளும்
மற்றுமுள்ள மிருகங்களும் வாயிவிரைக் கலவாமல்

வாடியங்கே நின்றிடுமாம் மங்கை நல்வாள் துயரங்கண்டு
அய்யைய்யோ பொன்னிறத்தை அரும்பாவிக் கொடு போறார்
கொடுபோறார் மலைமேலே கோதையரைக் கொல்வதற்கு
கூட்டமிட்டு கொண்டு போறீர் கொல்லாமல் விட்டிடுங்கோ
கொல்லாமல் விட்டிடுங்கோ குடும்பம் தழைக்குமண்ணே

## வேறு

அந்தமலை தனைவிட்டு அடுத்த மலை சார்ப்பில் வந்தார்
நாவுதான் உணருதண்ணெ நாவிலைதான் தருவீரோ
நாவிலை தான் கேட்டதற்பின் நடுக்காட்டிலே கிடக்கும்
ஆட்டெருக்கு களிபாக்கும் ஆலயிலை வெற்றிலையும்
பல்லிமுட்டை சுண்ணாம்பும் பைந்தொடிக்கு தான் கொடுத்தான்
இருகையாலத்தான் வாங்கி யேந்திழையும் திங்கலுற்றாள்
எரிப்புமில்லை புளிப்புமில்லை ஏது வகை அண்ணர்களே
இக்காட்டு வெற்றிலைதான் யிப்பிடியா இருக்குமென்ராள்
மலையேறு மலையேறு வாணுதலெ பொன்னிறமே
காலுங் கடுக்குதண்ணே கைகாலுஞ் சோருதண்ணே
வயிற்றிலொன்பது மாசமண்ணே மலையேற போகுதில்லை
அதிலே ஒரு மாபாவி அரும்பாவிக் கள்ளனவன்
கைபிடித்து கொடு வரட்டோ காரிகையெ பொன்னிறமே
கைபிடித்து கொடுபோனால் என் கற்பழிந்து போகுமண்ணே
கற்பழிந்து போகுமென்ற காரிகையாள் பொன்னிறத்தை
தாயை கொன்ற மாபாவி சண்டாளன் கண்சிவந்து
எருக்கலம் கம்புவெட்டி யேந்திழையைத் தானடித்தான்
ஆங்காரம் பேசாதே ஆயிழையே பொன்னிறமே
ஓடி நடஎன்று சொல்லி ஒன்று இரண்டு அடித்தான்
பிடரியிலே கை கொடுத்து முன்னோக்கி தள்ளிவிட்டான்

விம்மி விம்மி தானழுதாள் மெல்லி நல்லாள் பொன்னிறமும்
கண்ணீர் வடிந்தோட கமலமுகம் வியர்வை சிந்த
தண்ணீர் தான் தவிக்க தலை சுழத்தி செவியடைக்க
உயிர் சோர்ந்து உடல்பதறி கண்ணுதலால் பொன்னிறமும்
மறுகிமனம் தான்வாடி விம்மி விம்மி தானழுதாள்
மாறுபட மேனிஎல்லாம் மாறுபட விதியாச்சொ
அண்ணெயண்ணெ கள்ளர்களே அடியாதே நடப்பேன்
பெண்ணை யடியாதே பெண்பாவம் காட்டாதே
சாடிவந்து கள்ளனவன் தலை தனிலே கொட்டுவானாம்
வாடிவிட்டாள் கொட்டோடோ மயங்கிவிட்டாள் பொன்னிறமும்
பெண்ணோட பிறந்ததில்லையோ பெரும் பாவி கள்ளர்களா
அடுத்த மலைதான் கடந்து அப்புறத்து போகையிலே
புளியமரம் காய்த்து நிற்க பொன்னிறங் கண்டபோது
கள்ளருடன் முகம் பார்த்து கன்னி நல்லாள் பொன்னிறமும்
தண்ணீர் தான் தவக்குதண்ணே தாக மெத்த வருகுதெண்ணே
கண்ணுதான் அயருதன்னே கால்கள் தடுமாறுது தண்ணே
புளியங்காய் தான் பறித்து பொன்னண்ணே தரமாட்டிரோ
புளியங்காய் கேட்டவளுக்கு புளியமாறு வெட்டிதானடித்தான்
அடி மேலடி விளவே அவயமிட்டாள் பொன்னிறமும்
அம்மையப்பர் அடித்திலையே அரும் பாவியடித்தானோ
மாறுபடா மேனியெல்லாம் மாறுபட முள்ளிமுக்க
எந்தனுடைய தலைமுடியை இச்செடிகள் தானிழுக்க
இவர்கள் கையால் அடிபடவும் ஈசுபரனார் கற்பனையோ
வாக்கினாலே அதட்டி வளர்த்தாலே மாதாவும்
பாக்கியத்தோடேயிருந்து பாவிநான் வாழேனோ
கள்ளருக்கோ என்று சொல்லி கருதியென்னை தாய் வளர்ந்தாள்
மஞ்ச பூசும் மேனியெல்லாம் வடுப்படவும் விதியாச்சே

எண்சாண் தலைமுடியும் இசங்க முள்ளு தானிழக்க
நெத்தியிலே தானடிக்க ரெத்தமது கொப்பளிக்க
உச்சியிலே தானடிக்க உள்ளங்கால் வலித்திடுமாம்
அண்ணே என்னை யடித்தே ஆவிமெத்த சோருதண்ணே
என்னையடியாதே என்பழியை யேக்காதே
என்று சொல்லி பொன்னிறமும் ஏங்கி ஏங்கி தானழுதாள்
இளைய அண்ணன் கிட்டினர்க்கு இன்றல்லவோ கல்யாணம்
வருவாள், வருவா ளென்று வழிபார்த்து நிற்பாளே
கேளுமெந்தன் அண்ணர்களே கிருபையுடன் ஒருவார்த்தை
என்மேலே கிடக்கும் நகை ஏழாயிரம் பொன்பெறுமே
அத்தனையும் கழத்திக் கொண்டு அண்ணர்களே விட்டிடுங்கோ
ஆங்காரம் பேசாதே ஆயிழையே பொன்னிறமே
என்று சொல்லி கள்ளரெல்லாம் ஏற்றி கொண்டு பொன்னிறத்தை
கடுநடையாய் நடக்குகிறார் கள்ளரவர் எல்லோரும்
சிறு நடையாய் நடவானோ திகைப்புத் தீர்த்து போவானே
உன்வங்கசங்கள் தழைக்குமண்ணே என்னை விட்டிடுங்கோ
உன் சந்ததிகள் தழைக்கு மண்ணே என்னை விட்டிடுங்கோ
உங்களுடைய மனையாட்டிமார் நன்னுதல்மார் எல்லோரும்
மாங்கலியம் தழைத்திருப்பார் என்னை விட்டிடுங்கோ
தொங்காரம் பேசாதெ சூல் வயிற்றை கீறிடுவேன்
நகையாதெ பொன்னிறமே நாணயமாய் பேசாதே
பேசாமல் நடக்காவிட்டால் பிளந்திடுவேன் இருகூறாய்
சனியன் வந்து வயிற்றிலிருக்க தள்ளாடி வருகுதண்ணே
காலன் வந்து வயிற்றிலிருக்கே கைகாலுந் சோருதண்ணே
மான் போலே மருகுதண்ணே வழிநடக்க போகுதில்லை
சாஸ்டாங்கமாய் விழுந்து தையல் நல்லாள் பொன்னிறமும்

கால்பிடித்து தான் தொழுதாள் கள்ளரவர் தங்களையும்
பதறாதே என்று சொல்லி பாவையரைதான் கூட்டி

## பொன்னிறத்தை கோவிலில் அடைத்தல்

காட்டாளம்மன் கோவிலிலெ கன்னியரைக் கொண்டு சென்றார்
அம்மன் வாழும் கோவிலிலெ ஆயிழையாள் பொன்னிறத்தாளை
பழங்கோவிலைத் திறந்து பைந்தொடியைத் தானடைத்தார்

## வேறு

## பிற பலிகள் கொடுத்தல்

பொன்னிறதை தானடைத்து புகழ் பெரிய கள்ளரெல்லாம்
ஆடு கிடாக்கோழி பன்றி ஆதரவாய் கொண்டு வந்தார்
கொண்டு வந்து கள்ளரெல்லாம் கூடினாரே வெலி கொடுக்க
மேலநடவாசலிலே பேப்ரணும் கட்டுவாராம்
கீழ நடவாசலிலே பேப்பரணம் கெட்டுவாராம்
தெக்குநட வாசலிலெ திரையதுவும் கட்டுவாராம்
வடக்குநட வாசலிலெ வளைந்து திரைக்கட்டுவாராம்
குருத்தோல தட்டெடுத்து கொண்டு யங்கே நிறுத்துவாராம்
அடைக்காயும் வெற்றிலையும் அதிகபழம் நிறுத்துவாராம்
படைத்தாரே திரைகள் தோறும் பரபரென்ன பொங்கலிட்டார்
செங்கிடா காரனுக்கு செங்கிடா வெலி கொடுத்தார்
அத்து திரைதான் வளைந்து சூலாடுத் தான் பிளந்தார்
சூலாடு அறுத்திடவே துள்ளுகுட்டி அழுதிடுமாம்
ஆடழுதச் சத்தமெல்லாம் ஆயிழையாள் தான் கேட்டாள்
ஆடுபடும் பாட்டிற்கெல்லாம் ஆயிழையாள் தான் எம்பாடோ
மேல நாட வாசலிலே மிக்க திரைக்குள்ளாக

பூனையது கொண்டு சென்று புகழ் பெறவே கீறுவாராம்
பூனைபடும் பாட்டையெல்லாம் பொன்னிறமும் பார்த்துநின்றாள்
பூனை படுந்துயரங்களுக்கு பொற்கொடி நான் எம்பாடோ
கீழ வாசல் நடைதன்னிலே கெட்டின தோர் திரைக்குள்ளாக
துள்ளுக்குட்டி கொண்டறுத்தார் தோகை நல்லாள் தான்காண
குட்டி படும் பாட்டுக்கெல்லாம் கொடியிடையாள் எம்பாடோ
மற்றமுள்ள தெய்வங்களுக்கு வகை வகையாய் வெலிகொடுத்தார்

## பரண் கட்டுதல்

பொன்னிறத்தை வெலி கொடுக்க புகழ் காட்டாளம்மனுக்கு
உட்கோவிலானதிலே உற்ற கருவூலம் இருக்குமிடத்தில்
ஆடுகளுக்கு நாலுதறி தானறைந்து அதினருகே பூப்படையும் வைத்தார்
காலடுத்து அசையாமல் காலுக்கு இரண்டுதறி
கைஎடுத்து அசையாமல் கைக்கு இரண்டு தறியறைவார்
மரக்கால் திரை வளைந்து வாணுதலை கூட்டிவர

## பொன்னிறத்தை பலி கொடுக்க அழைத்தல்

கேளுமெந்தன் அண்ணர்களே கிருபையுடன் ஒரு வார்த்தை
என் வயிற்றில் தனித்த கற்பம் இன்றெடுத்தால் அண்ணர்களே
ஆண்பாலன் ஈன்றெடுத்தால் அண்ணே உங்கள் பெயரிடுவோம்
பெண்பிள்ளை ஈன்றெடுத்தால் உங்கள் பெஞ்சாதிமார் பெயரிடுவோம்
கொல்லாதே விட்டீரானால் கோடித்தவம் பெறுவீரண்ணே
ஆயிழையே பொன்னிறமே ஆங்காரம் பேசாதே
இந்த வார்த்தை சொல்லாதே யேந்திழையே பொன்னிறமே
உங்களாணைக் கள்ளர்களே இன்னுமொன்று சொல்ல கேளு
என்னை நீங்கள் அறுத்ததுண்டால் நிதியெடுத்து போக மாட்டீர்

காட்டாளம்மா காட்டாளம்மா கருவூலத்தைக் காட்டாதே
ஆங்காரம் பேசாதே என்று ஐம்பது பேரை கொன்ற கள்ளன்
பிடரியிலே கைகொடுத்து பொன்னிறத்தை தள்ளுவானாம்
திரைக்குள்ளே தள்ளுவானாம் தீபாவிக் கள்ளனவன்
அடிவயிறு காணாமல் ஆயிழையாள் பொன்னிறமும்
ஆணுடையும் தானுடுத்து அரனாரே தஞ்சமென்றாள்
தினச நாலுமே தொழுது சிவனே உன் தஞ்சமென்பாள்

## பொன்நிறத்தைக் கட்டுதல்

சரிந்தாளே திரைக்ககத்தே தார் குழவாள் பொன்னிறமும்
கையதுவும் காலதுவும் கடுத்தறியில் பகுந்து கெட்ட
தார்குழலாள் பொன்னிறத்தின் தலைமுடியும் பகுந்து கெட்டி
வெலி கொடுக்க வேண்டுமென்று கள்ளரெல்லாம் வந்தார்
எல்லோரும் வந்து கூடி ஏந்திழையாள் பொன்னிறத்தை

## பலிகொடுக்கத் தயக்கம்

அதிலிஒரு பாவிக் கள்ளன் அறுக்க முடுகுவானாம்
அறுக்க வந்து முடுகுவானாம் ஆயிழையாள் அழகுகண்டு
அறுக்கவுங் கையாடாமல் அப்பாலே ஓடிவிட்டான்
பின்னுமொரு மாபாவி பெற்ற தாயைக் கொன்றவன் தான்
பெற்றத் தாயைக் கொன்றவந்தான் பெரும் பாவி மொட்டையனும்
நானறுப்பேன் வெலி கொடுப்பேன் நாசகியாள் பொன்னிறத்தை
கையருவாள் கையில் வாங்கி காரிகையாள் அருகேவந்தான்
வந்து நின்ற கள்ளனவன் மங்கை நல்லாள் அழகு பார்த்தான்
ஈந்தம் பழம் போலே இடக்காவி பல்லொளியும்
அன்னி தொனித்தது போல் ஆறுவகை தேமலுமாய்
கோரித் தொளித்தது போல் கொங்கையிரண்டும் தேமலுமாய்

வாரி தொளித்தது போல் வயறெல்லாம் தேமலுமாய்
கூடும் புருவமது குலயானை கொம்பதுபோல்
நெற்றி புருவமது நாலுபிறை சேர்த்தது போல்
முத்தம் தொளித்தது போல் முகம் நிறைந்த தேமலுமாம்
மார்பிலிட்ட பொன்பணியும் வலது கையில் தங்க வளையும்
பார்த்தவற்கு அழகுபெற பச்சடம்பு மொப்பினையும்
ஒப்பினையும் உடலழகும் ஒரு பாகம் தலைமுடியும்
கிளிமொழியாள் பொன்னிறத்தாள் கீழ்மாறி பார்த்தக் கண்ணும்
அப்படியே அழகு கண்டு அறுக்கவும் கையாடாமல்
கையருவாள் விட்டெறிந்து கடக்க போய் நின்றான்

## கருமறவன் பலிகொடுத்தல்

பின்னுமொருக் கருமறவன் பெற்ற பிள்ளையை கொன்றவன் தான்
நானறுப்பேன் வெலி கொடுப்பேன் நல்ல காட்டாளம்மனுக்கு
கையருவாள் கையிலெடுத்து காரிகையாள் யருகெ வந்தான்.
பொன்னிறத்தை முகம் மூடி புகழ் திரைக்குள் தான்புகுந்து
தன் முகத்தைக் காட்டாமல் தான் மாறி மிக நோக்கி
அரும்பாவி கள்ளனவன் ஆயிழையாள் வயிறு நோக்கி
வலதுபக்கம் வாழையிலை நோக்கி மாபாவித்தான் போட்டான்
கமுகுவிளம் பானைபோல் கன்னி நல்லாள் திருவயிற்றை
கீறவென்று கள்ளனுமோ கிட்ட சென்று முடுகும் நேரம்
ஆயிழையாள் பொன்னிறமும் அழுதாளே அப்போது
கொம்பனையாள் அழுதசத்தம் கூட்டபனையருகே கேட்க
கேட்டானெ கடையத்தூ ரான் கேளாமல் போய் மறைந்தான்
பின்னும் முகம் பாராம் பெற்ற பிள்ளையை கொன்றக்கள்ளன்
வாழைமடல் கீறினாப் போல் மங்கை நல்லாள் திருவயிற்றை
பொன்னிறத்தாள் திருவயிற்றை புகழ் பெறவே கீறுவானாம்

## கருவை எடுத்தல்

## வேறு

வயிறு கீறி கள்ளனவன் வலித்தெடுத்தான் பாலகனை
வலபிற மானதிலே மாபாவி கள்ளனவன்
தலைவாழை யானதிலே தான் கிடத்தி பாலகனை
தீபாவி கள்ளனவன் தெளிவாகத்தான் கிடத்தி
பொன்னிறத்தாள் வயிறுதன்னை பிளந்தோர் தெருவாயின்
கொல்திரியும் தானாட்டி கொழுத்தினான் தீபதூபம்

## பூதங்களிடம் பலிஏற்க வேண்டுதல்

காட்டாளம்மா வெலியேத்திடு கடுவாய் மூர்த்தி வெலியேதிடு
மூன்றரக் கோட்டத் தெய்வங்களே முன்னே நின்று வெலியேத்திடுங்கோ
இசக்கி அம்மா வெளியேத்திடு யேத்த செங்கிடா பூதம் வெலியேத்திடு
இப்படியெ வார்த்தை சொல்லி இதமாகக் கள்ளரெல்லாம்
முக்கால் சுத்தி வந்து முதுகெழக்கு வெலி யேற்க குரவைப்பிட்டார்
காட்டாளம்மன் வெலியேற்க கடுவாய் மூர்த்தி வெலியேற்க
இசக்கியம்மை வெலியேற்க இசக்கிம்மை யேற்க செங்கிடா பூதம் வெலியேற்க
மூன்றரை கோட்டைத் தெய்வங்களும் மொய் குழலாள் பொன்னிறமும்
வெலிகள் பற்றி பொன்னிறத்தை விரைவாக சேர்த்துக் கொண்டு
பொன்னிறமும் பேய்படையும் புகழ் பெறவே நிற்கையிலே

## கருவூலம் திறத்தல்

அறுபத்தொரு கள்ளர்களும் ஆக ஒன்றாய் தான் கூடி
காட்டாளம்மன் கோவிலிலே கருவூலங்கள் எடுப்பாராம்

நிதிகள் வெட்டி கள்ளரெல்லாம் ரெம்பவே தானெடுத்தார்
கருவூலங்கள் எடுத்தபோது கைக்காறன் ஏதோ சொல்வான்
கைக்கணக்கால் பகுந்தெடுத்தால் கணக்கறிய மாட்டாது
எண்ணியே பகுந்துண்டால் இரெண்டு நாள் செல்லும்
மேல மலை தன்னிலே சென்று வெட்டவேண்டும் நாளிமுழை
நாழி வெட்டி கொண்டு வந்து நாமளந்து பங்கு வைப்போம்
ஆழாக்கில் ஒரு உழக்கும் அரப்படியில் ஒரு உழக்கும்
ுளாக்கில் ஒரு உழக்கும் முந்தரியில் ஒரு நாளியும்
ெவட்ட போக வேணும் வெள்ளாளர் பத்துபேரும்
ஆகட்டென்று சம்மதிச்சு ஆயுத முந்தானெடுத்து

## நாழிமுளை வெட்டச் செல்லல்

மலைதன்னிலே தானேறி வாக்கான முளைபார்த்து
நாளி முளை வெட்டும் முன்னே நல்ல காட்டாளம்மனுமோ
காட்டானை கடுவாய் புலி கள்ளர் மேல் ஏவிவிட்டாள்

## கள்ளரை விலங்குகள் கொல்லுதல்

வதைகள் செய்து கொல்ல வென்று வகைவகையாய் ஏவிவிட்டாள்
கடுவாய் புலிதிரளாக கள்ளரையும் கொன்றிடுமாம்
தாடிக்காற பூதமது தலையடியாய் அடித்திடுமாம்
அறுப்பதொரு கள்ளர்களும் அவரவரே தானிறந்தார்
இறந்தாரே பாவியர்கள் ஈசுவரனார் கல்பனையால்
தீவினையால் பாதகர்கள் செத்திறந்து போனபின்பு
போனார்கள் கள்ளரெல்லாம் புகழ் பெறவே கைலாசம்
கைலாசம் போய்சேர கரை கண்டனர் ஏது சொல்வார்
தீராத பாவம் செய்தீர் திருநரகம் தள்ளுமென்றார்

## பொன்னிறத்தை தேடுதல்

சுனையாட போனதொரு தோகைநல்லாள் பொன்னிறத்தை
காணாமல் தேடுவாராம் கட்டுடனே எல்லோரும்
பொன்னிறத்தாள் கிளையிலுள்ளோர் புவியிலுள்ளோர் எல்லோரும்
பொன்னிறத்தாள் தகப்பனுமோ பொன்னிறத்தாள் தாயாரும்
அண்ணன்மார் ஏழுபேரும் ஆயிழையாள் புருஷனுமோ
பொன்னிறத்தாள் தோழியோட பூவை நல்லாள் கேட்க
தோழியரெ தோழியரெ சுனையாட போனிர்களெ
சுனையாட போனிடத்தில் என் தோகையரை சதித்தீரோ
என்ன செய்தீர் என்று சொல்லி இணசூரன் தான் கேட்க
இணசூரன் தான்கேட்க ஏந்திழைமார் தோழியர்கள்
அழைத்தோமே சுனையாட ஆயிழையாள் பொன்னிறத்தை
கூட வரவில்லை நாங்கள் குளித்து கரையேறு மட்டும்
என்றுரைத்தார் தோழியர்கள் இணசூரன் தன்னோடே
தோழியர்கள் சொல்கேட்டு சூரனிணச் சூரனுந்தான்
தாய் தகப்பன் மார்களுக்கும் தன்கிளையில் உள்ளவர்களுக்கும்
ஆளனுப்பி சீக்கிரத்தில் அவர்களையும் கூட்டிவந்தார்

## சுனைக்குச் செல்லுதல்

அடுத்தவரும் தொடுத்தவரும் அசல் பதியிலுள்ளவரும்
அவரவரெக் கூடுவாராம் ஆக தொண்ணுத்தொன்பது பேர்கள்
ஒன்றுபோல் தான்கூடி உடன் நடந்தார் சுனைக்கரைக்கே
துருதமுடன் வழிநடந்து சுனைக்கரையில் தான் வந்தார்
பார்த்தாரே பொன்னிறத்தை பலதிசையுங் காவுகளும்
பொன்னிறத்தை காணாமல் பூஞ்சுனையில் குடியோடி
காணாமல் பொன்னிறத்தை கரையேறி ஏழுபேரும்

பின்னும் அந்த காவுதன்னில் பேதலித்து தேடும் நேரம்
தேடியெங்கும் பார்வையிலே தேன்மொழியாள் பொன்னிறத்தின்
அடித்தளத்தை கண்டாரே ஆணழகன் இணைசூரன்
கண்டானே பொன்னிறத்தாள் காலினடி யடையாளம்
சித்தடி பாதையிலே சேர்ந்த மனுசருடன்
அழகான தென்று சொல்லி அவ்வழிதான் போனார்
மனுஷர் தடங்காணாத மலைவழியே தான் போனார்
நாடுமலையான தெல்லாம் நன்றாக தேடுவாராம்
நாடெங்கும் தான் திரிந்து திகைத்து நின்றார் எல்லோரும்
வாடிமனம் தான் கலங்கி மங்கை நல்லாள் பொன்மாரி

## *தந்தை புலம்பல்*

எங்கேதான் போனாயோ என்மகளே பொன்னிறமே
உன்னை பெறுவதற்கு உற்ற தவமிருந்ததெல்லாம்
குளிர்ந்தமரச் சோலையெல்லாம் கோவிலென்ற கையெடுத்தேன்
தழுத்த மரச்சோலை எல்லாம் சாத்தவென்று கையெடுத்தேன்
தூரத்து கோவிலெல்லாம் தூத்து தொழித்திருந்தேன்
பலவிடமுந் தவமிருந்து பாவிநான் பெற்றெடுத்தேன்
இதற்கோ நான் பெற்றெடுத்தேன் ஏந்திழையே என்மகளே
வாழ்ந்திருக்கும் நாளதிலே மகளே நீவாழாமல்
சேர்ந்திருக்கும் நாளையிலே சேராமல் நீமகளே
இணையும். புறாவும் போல இருந்ததில்லையோ பொன்னிறமே
சுனையாட கூட்டிவந்து தோழியர்கள் சதித்தாரோ
என்று சொல்லிதான் புலம்ப யேந்திழையாள் பொன்மாரியும்
அழுது நிற்கும் வேளையிலே ஆகாசமானதிலே
கழுகு நின்று ஆயக்கண்டான் காரிகையாள் பொன்மாரியும்

## காட்டாளம்மன் கோவிலுக்குச் செல்லுதல்

கூட்டமிட்டு கழுகு சேர்ந்து கூண்டாய் கண்டனரே
கண்டனரே அண்ணன்மார்கள் கழுகு ஆய்ந்த திசைநோக்கி
கடுநடையாய் தானடைந்தார் காட்டாளம்மன் கோவில் பாதைக்கு
திடுதிடென வழிநடந்து சென்றாரே கோவிலிலே
திருநடையில் போய் சேர்ந்தார் சேகரமாய் எல்லோரும்
காட்டாளம்மன் கோவிலிலே கண்டாரே வெலிகளேல்லாம்
ஆட்டு வெலிதன்னைக் கண்டார் அம்மனுடகோவிலிலே
பூனை வெலி தன்னைக் கண்டார் புகழ்பெறவே எல்லோரும்
பன்றி வெலி பாடு கண்டார் பார்த்தாரே வெலிகளெல்லாம்
கண்டாரே வெலிகளெல்லாம் காட்டாளம்மன் கோவிலிலே

## பொன்னிறத்தைக் காணுதல்

கருவூலத்தின் தன்னருகே கண்டாரே பொன்னிறத்தை
பொன்னிறத்தாள் தன்னுடைய பிள்ளையை எல்லோரும் கண்டார்
பொன்னிறத்தாள் திருவயிற்றில் பிறந்தெடுத்த பிள்ளையைத்தான்
இணைசூரன் கையிலெடுத்து யேங்கி யேங்கி அழுதானே

## தந்தை தற்கொலை

## வேறு

பொன்னிறத்தாள் தகப்பன் புகழ்அணஞ்ச பெருமாள் வந்து
பொன்னிறத்தாள் தலைமாட்டில் புலம்புவான் பெருமாளே
என்மகள் பொன்னிறமே உனக்கு இந்த விதி வருவானேன்
இப்படி நீ பிறப்பாய்யென்று எள்ளளவும் அறிந்தேனில்லை
அறிந்தேனில்லை என்று சொல்லி அணஞ்ச பெருமாள் தானழுதான்
தன்தலையில் தானடித்தால் தலைமண்டைதான் சிதற
இனியிருக்க வொண்ணாது என்று சொல்லி தானழுதாள்

இனிசாக வேண்டுமென்று எண்ணியவர் மனதிலெண்ணி
தலைமாட்டில் தானிறந்தான் தகப்பன் அணஞ்ச பெருமாள்
பொன்னிறத்தாள் தமையன் மாரும் புகழ் பெறவே ஏழுபேரும்
மாலையிட்ட மணவாளன் வாய்த்த இணசூரன் வந்து
அழுது கொண்டு மணவாளன் ஆயிழையாள் அருகே வந்து
வந்து நின்று இணசூரன் வயிறெறிந்து ஏதோ சொல்வான்
அரமனைக்கு போய் வருமுன் ஆயிழையே பெண்ணே நீ
கள்ளர் கையால் கொலைபடவே காரிகையாள் இங்குவந்தாய்
காட்டாளம்மை உன்னை வெலியுண்டாள் கள்ளருன்னை கொன்றாரோ
என்று சொல்லி இணசூரன் எடுத்திருந்த பிள்ளையதான்
பொன்னிறத்தாள் மணவாளன் புகழ்வெறவே பாலகனை
கொஞ்சி முகத்தோடுணைத்து கூறுவான் ஒருவார்த்தை
இப்படி நீ பிறப்பதற்கு ஈசுபரனார் கல்பனையோ
என்று சொல்லி தானழுது இலையதிலே வைத்தான் பிள்ளைதன்னை

## எல்லோரும் இறத்தல்

வைத்த தொரு வேளையிலே மங்கை பொன்னிறம் தன்னுடைய
மாமன்மாரும் தோழிமாரும் வகைவகையாய் எல்லோரும்
பொன்னிறத்தை சூழ்ந்து நின்று புகழ்பெறவே ஏது சொல்வாள்
எங்களை நீ ஆதரித்தாய் ஏழை முகம் பார்த்தாய்
ஆண்டி என்று வந்தவற்கு அமுதுகறிதான் கொடுத்தாய்
பிச்சைக்கு வந்தவற்கு பிழைகேடு செய்யவில்லை
கொத்தைக் குறைக்கவில்லை குறமரைக்கால் அளக்கவில்லை
அடைக்கலமாய் வந்தவரை அறிவுகேடு செய்யவில்லை
இப்படியே தர்மம் செய்தாய் ஏந்திழையே பொன்னிறமே
அப்படியே இருந்த உன்னை அழகு காட்டாளம்மன் கோவில்
கடவயிறு தான்கீறி கள்ளருன்னை கொன்றாரோ

என்று சொல்லிதான் புலம்பி இறந்தாரே தோழிமார்கள்.
மாமன்மார் இறந்த போது மற்றுமுள்ள குடும்பத்தார்கள்
கொடியிடையாள் கிளையிலுள்ளோர் கூட தொண்ணுதொன்பது பேரிறந்தார்
இப்படியே தானிருக்க ஏந்திழையாள் குடும்பமெல்லாம்
மன்னனின் சூரனுட மாதாபிதா ரண்டு பேரும்
இணசூரன் கிளையிள்ளோர் எல்லோரும் வந்து கூடி
பொன்னிறத்தாள் அருகே வந்து புலம்புவாராம் எல்லோரும்
மருமகளே உந்தனுக்கு மாய கெற்பம் தான் தரித்து
ஏழுமாசமானதிலே ஏந்திழையே உந்தனைத்தான்
கூட்டி கொடு போனாரே கொல்லவென்று உந்தனைத்தான்
பெற்றெடுத்து வருவாளென்று பெரும்பாவி பார்த்திருந்தேன்
வருவாள் வருவாளென்று வழிபார்த்து நின்றேனே
கள்ள பயல் மறவருன்னை கடவயிறு கீறி நானோ
காட்டாளம்மை வெலி ஏத்தாளோ கள்ளருன்னை சதித்தாரோ
என்று சொல்லிதான் புலம்பி இறந்தாரே எழுபதுபேர்

## இணைசூரன் இறத்தல்

எல்லோரும் இறந்த போது இணசூரன் தானுமப்போல்
பொன்னிறத்தாள் தன்தனையும் பிறந்தெடுத்த பிள்ளையை
பொன்மாரி தன்தனையும் புகழ் அணஞ்ச பெருமாளையும்
மைத்துனன்மார் ஏழுபேரையும் மற்றுமுள்ள சனங்களையும்
தாயாரையும் தகப்பனையும் தக்கபல மனுசரையும்
மற்றுமுள்ள மனுஷரையும் மங்கை நல்லாள் தோழியையும்
பூமிதானம் செய்தானே புகழ் பெரிய இணசூரன்
பூமிதானம் செய்தவுடன் பொன்னிறத்தாள் வலதுபக்கம்
சமுதாடுதான் நாட்டி சாகவென்று இணசூரன்

வானதிலே தான்சாக மகாதேவர் திருவருளால்
இறந்தானே இணசூரன் ஈசுபரரே தஞ்சமென்றே

## வேறு

## பொன்னிறம் வரம் வாங்கச் செல்லல்

எல்லோரும் ஒன்று போலே இறந்த அந்நேரத்தில்
வரம் வாங்க வேண்டுமென்று வனவாசம் தான்போனாள்
மாயோன் பொன்னுங்கைலையிலெ வரம் வாங்க சொல்லுவாராம்
மங்கை நல்லாள் பொன்னிறமும் மகாதேவரை அடி தொழுதாள்
அச்சுதரை அடிதொழுது அரனெனவும் சிவனெனவும்
அரன்அடி தொழுது ஆயிழையாள் பொன்னிறமும்
வரவேண்டும் என்று சொல்லி மங்கை நல்லாள் தான்கேட்க
வரங்கேட்ட நேரமதில் மகாதேவர் ஏது சொல்வார்
ரெத்த களரியோடெ நீங்கள் இங்கே வந்ததென்ன
விரித்த தலையோடெ விரைவாக வந்தீரே
மகாதேவர் தான்கேட்க மங்கை நல்லாள் பொன்னிறமும்
வாய்திறந்து யேது சொல்வாள் மகாதேவர் இடமதிலே
கள்ளரெல்லாம் தான்கட்டி காட்டாளம்மன் கோவிலிலே
கருவூலங்கள் எடுப்பதற்கு கருதிஎன்னை வெலி கொடுத்தார்
அந்த வார்த்தை கேட்டபோதே அரனாரும் ஏது சொல்வார்

## வரம் கேட்டல்

என்ன வரம் வேண்டும் என்றார் என்னிடத்தில் வந்தவற்கு
நாடதிலெ செல்லவரம் நாசகாரனை கொல்ல வரம்
பெற்றவீட்டில் செல்லவரம் பேறுமாறியிருக்க வரம்
அன்று பெற்ற பிள்ளைகளை அம்மானை போடவரம்

தலைபிள்ளை மதலைகளை தலைதிருவி கொல்லவரம்
ஏழுகழித்த பிள்ளைகளையெல்லாம் இளங்குடலை பிடுங்கவரம்
இந்த வரம் போராது இன்னும் வரம் தாருமென்றார்
கள்ளருட வங்குஷத்தை கட்டாக முடிக்கவரம்
வேதியனும் அவன் கிளையும் விரைவாக முடிக்க வரம்
மண்ணுக்குள்ளே ஒழிக்கவரம் மாறிப்பற்றித்துவிட வரம்
எலிபிடிக்கும் பூனைபோலே இப்புவியில் திரியவரம்
காரிவண்டது போல் காலடியில் சாடவரம்
பிள்ளையில்லா பேர்களுக்கு பிள்ளை கொடுக்கவரம்
பேரு கூலி வாங்கவரம் பிடிமஞ்சனை வாங்கவரம்
அஞ்சுமாத சூலிகளை இல்லாமலாக்க வரம்
ஏழு மாத சூலிகளை இளங்குடலை பிடுங்கவரம்
பத்து மாத சூலிகளைப் பால்வடிய கொல்லவரம்
இந்தவரம் போராது இன்னும் வரம் தாருமென்றார்
அழுகுரல் கேட்டுபோன ஆனதொரு கடைத்தூரன்
அவன் கிளையை முடிக்க வரம் அரனாரே தாருமென்றாள்
மதுரை படை வீட்டிலுள்ள மறவர்களைக் கொல்லவரம்
மந்திர வேலன் காணியிலெ மாறாமல் நிக்கவரம்
நல்லக் குட்டி காணியானுட நற்கிளையை முடிக்க வரம்
மந்திரவாதி கணியானுட மகளை வெலிபற்ற வரம்
காட்டாளம்மன் அனியிடத்தில் கடுக பூசைவாங்கவரம்
தோழியரும் நானுமாக சுனையாட வரம் வேண்டும்
இந்தவரம் போராது இன்னும் வரம் தாரும்மென்றார்
கொக்கோட்டு குளவரம்பில் கோவில் குடிகொள்ளவரம்
வாறவாற பேர்களுடன் மகிழ்ந்து பூசை பற்றவரம்
கல்யாணம் கெட்டபோற கன்னியரை பிடிக்கவரம்

மாப்பிள்ளை கொடுபோறவளை மசங்கி திரிய வரம்
களவு செய்ய போறவரை காலடியாய் அடிக்கவரம்
பொய் சொல்லும் பேர்களை பிடரியை முறிக்கவரம்
தப்பு செய்யும் பேர்களை சிறுகுடலை பிடுங்கவரம்
கள்ள சத்தியம் பண்ணுபவரை கண்ணிரண்டையும் பிடுங்கவரம்
இந்த வரம் போதாது இன்னும் வரம் வேண்டுமென்றார்
வாவறைவாள் இசக்கியென்னும் வழித்தலையில் இசக்கி என்னும்
குறுமாங்குளியில் யிசக்கி என்னும் கோவில் குடி கொள்ளவரம்
பிறருடையவாள் இசக்கி என்னும் பேச்சி முத்துயிசக்கி என்னும்
மூன்றரை கூடத்தியிசக்கி என்னும் முக்கால் வடக்கத்து இசக்கி என்னும்
செங்கியா பூதமென்றும் திருகு கொம்பு காறெனென்றும்
கருங்கிடா பூதமென்றும் கழுவு ஏந்தி மாடனென்னும்
பாயிதப்பானை பூதமென்னும் பன்றி வெலிமாடனென்றும்
குருமூர்த்தி விடுமூர்த்தி கூண்ட கடுவாய் மூர்த்தி என்னும்
என்னரென பொன்னரனெ எங்களுக்கு வரமும் தந்து
கேட்டபடி வரமும் தந்து கீர்த்தி பெற அனுப்புமென்றார்
மாயனிடம் வரங்கேட்டு மங்கை பொன்னிறம் நின்றனளே

## *சிவன் கட்டளை*

## வேறு

அந்த வார்த்தை கேட்டபோது அரனரும் ஏதோ சொல்வார்
போறது நீ தெட்சணா பூமியிலெ புதுமை ஒன்று சொல்லகேளு
ஊரில் ஒருத்தரை கொல்லாதே ஒருதாய்க் கொருமகளை கொல்லாதே
நாலுபேரில் ஒருத்தரை கொல்லாதே நன்றி செய்பவரை கொல்லாதே
என்னை நினைப்பாரெ கொல்லாதே என்பேர் உரைப்பாரை கொல்லாதே

ஊட்டுணவு தருவாரை கொல்லாதே உன் தொழிமார்களை கொல்லாதே
கொத்தவேலை செய்வாரை கொல்லாதே கூறக்கேள்
அரனை சிவனை கொல்லாதே ஆயிழை உமையாளை கொல்லாதே
கொல்ல வரம் வேண்டுமானால் கூறக்கோள் முன்னரைக் கூட்டத் திசக்கியே
காட்டில் திரிகின்ற கள்ளர் துட்டர் கதறியடித்திடு மூன்றரைக் கூட்டத்திசக்கியே
மேட்டி செய்யும் மறவர் குறவரை வீட்டோடே கொன்றிடு
கள்ள சத்தியம் செய்திடும் பேர்களையும் கண்ணிரண்டையும் பிடுங்கி எடுத்திடு
மறுவில் கலகஞ் செய்வாரை மண்டையாக அடித்துவிடு
நியாயமில்லாமல் சண்டைபிடிப்பாரை நாக்கை பிடுங்கி எடுத்திடு
பேச்சு அறிந்து பேசாதவர்களை பிடதியாக அடித்திடு
கொலை மரணம் செய்திடும் பேர்களை கண்ணை பிடுங்கி கையை முறித்து எடுத்திடு
கள்ள சாட்சிகளை எழுதிடும் பேர்களை காலுரண்டையும் அடித்து முறித்திடு
விசுவாச பாதகம் செய்வாரை வெட்டி ஈரலை பிளந்து எடுத்திடு
கூடி கொண்டு குமண்டைகள் செய்வாரை கோலங் கொண்டு குடலை பிடிங்கிடு
என்று சொல்லி திருவாணை விட்டாலோ ஈசுபரனார் வரங்கள் கொடுப்பாராம்
கேட்ட வரமெல்லாங் கொடுத்தல்லோ கீர்த்தி பெற பேருங் கொடுத்தனர்.
இப்படியே வரங்களும் வாங்கியே ஈசுபரரை தொழுது புறப்பட்டாள்
ஈசுபரரை தொழுது வணங்கியே. ஏகினார் கைலாசம் விட்டே

## வரம்பெற்ற பொன்னிறத்தாளின் செய்கை

### வேறு

கைலாசபுரமும் விட்டு கண்டாரே நூல் பாலம்
நூல் பாலம் தான் கடந்து கொடியிடைமார் எல்லோரும்
எட்டாரப்புரமும் விட்டு இருண்டவர்ண சோலைவிட்டார்
திருத்தாளே அகத்திவிட்ட திருவானவாள் கைலைவிட்டார்
வெற்றி பெற நூலுகரை விளங்கின குண்டாறுமிட்டார்
கண்டாத்தங்கரை தன்னிலே கூடி நின்று குரவையிட்டார்
குருசூமுங் குமரிமலை குண்டுமலை தான் கடந்தார்
கல்லுவெட்டி காயல் விட்டு காட்டு வரங் காணுவாராம்
ஒய்யார நடையுமாக ஒரு நொடியில் ஒடுவாராம்

### பழி வாங்கல்

கள்ளருட ஊர் பகுதியில் உடன் சென்றல்லவோ
ஓடியங்கே சாடுவாராம் ஒரு நொடியில் தேடுவாராம்
திகைக்கவே விளியறைந்து திசை நாலுந்தேடுவாராம்
மன்னவரும் மங்கையரும் மகிழ்ந்துறங்கும் வேளையிலே
கால் கொண்டாடி பார்ப்பாராம் கண்ணை பிடுங்குவாராம்
இப்படியே கொன்றாளே எல்லா கள்ளர் குடும்பத்தையும்
கொன்றல்லவோ பொன்னிறமும் குமுகுமெனக் குரவையிட்டாள்
இட்டகுரல் சத்தமது ஈசுபரருக்குத்தான் கேட்க
கள்ளருட குடும்பமெல்லாம் கட்டோடுகொன்ற பின்பு
கள்ளனிடங் காட்டி கொடுத்த கருத்தாய் வேதியன் ஊரிலே போய்
அவனையும் அவன் கிளையுமாக ஒன்றாய் முடித்தபின்பு

## சுனையாடல்

கடுக சுனை நீராட காட்டு வழிதானடைந்தார்
தோழிமாரும் பொன்னிறமும் சுனைகரைக்கே போவோமென்றாள்
ஏந்திழையாள் பொன்னிறமும் இருபத்தொரு தோழிமாரும்
சுனைத்தன்னிலே வந்திறங்கி துருசமாக சுனையாடினர்
ஆண்டவனார் வரத்திலே அவர்கள் சுனையாடிடவே
சுனையாடி கரைக்கேறி தோழியரும் பொன்னிறமும்

## அம்மனை வழிபடல்

காட்டு வழியாய் நடந்து காட்டாளம்மன் கோவில் வந்தார்
காட்டாளம்மன் கோவிலிலே கண்டாரே அம்மனையும்
அம்மனை அடி தொழுது அவர்களுமே நிற்கலுற்றார்
காட்டாளம்மன் வாய்திறந்து கடுக மொழி செப்பலுற்றாள்
எங்கிருந்து வந்தீர் எனக்குறிய சொல்லுமென்றாள்
உந்தனுடக் கருவூலத்தை வெட்டியே எடுப்பதற்கு
கள்ளரென்ன தான் பிடித்து கடுகவெலியது கொடுத்தார்
வெலிகொடுத்த வேளையிலே விரைவாய் கையிலாசம் போனோம்
கைலாசம் போய் சேர்ந்தோம் கரைகண்டனாரிடமதிலே
மகாதேவர் எங்களுக்கு மாறாத வரம் தந்தார்
உந்தனுடன் பூசையுண்ண உடையவனார் வரமும் தந்தார்
அந்த வார்த்தை கேட்டபோது ஆயிழையாள் காட்டாளம்மன்
பூசையது தான் கொடுத்தார் புகழ் பெறவே எல்லோருக்கும்
காட்டாளம்மை பூசை கொடுக்க கரை கண்டனர் வரத்தாலே
அம்மனுட பூசையுண்டு ஆசாரமாய் போனோமென்றார்
போய் வாறோம் என்று சொல்லி பொன்னிறமும் தான் கேள்க
ஊர் மனையில் சென்றல்லவோ ஊட்டுணவு வாங்க வேணும்
என்று சொல்லி பொன்னிறமும் எழுந்திருந்து வழிநடந்தாரே

## வேறு

## மதுரை படைவீட்டில் அட்டகாசம்

காட்டாளம்மன் கோவில்விட்டு காட்டு வழிதான் நடந்தார்
வழிநடந்தான் பரபரென்ன மதுரை படை வீட்டில் போக
மதுரைபடை வீடதிலே வந்தாரே எல்லோரும்
தென்மதுரை வடமதுரை வந்தாரே கீழ்மதுரை மேலமதுரை வந்து
நாலுதிக்கும் வலையுங்கெட்டி நாணயமாய் கொல்லுவாராம்
வந்து நின்று கொல்லுவாராம் மதுரைபடைவீட்டிலெல்லாம்
தக்க மறையோர் தெருவும் தட்டழியக் கொல்லுவாராம்
சிந்தை கலங்கும் படி சீக்கிரத்தில் கொல்லுவாராம்
ஆயிமாரும் தாசிமாரும் அந்தணரை கொல்லுவாராம்
சிறுபிள்ளை சூலிகளை சேகரமாய் கொல்லுவாராம்
பாவிகளைச் சூலிகளை பச்சப்பிள்ளை தாச்சிகளை
ஈணாத மலடிகளை இளம் பிள்ளைத் தாச்சிகளை
அவரவரைக் கண்டவுடன் அடிபிடியாய் கொல்லுவாராம்
அச்சிகளெப் பண்டாரத்தை அடங்கலுமாய் கொல்லுவாராம்
குசவர் மறவரையும் குளுவரையும் கொல்லுவாராம்
கொண்டு பானைவிற்கும் அந்த கொசவர்களை கொல்லுவாராம்
ஏத்தி பணம் எடுக்கும்மந்த செட்டிகளை கொல்லுவாராம்
சேணியனெப் பட்டானியை சேகரமாய் கொல்லுவாராம்
ஆறுநூறு சேவர்களை அமைச்சர்களை கொல்லுவாராம்
எண்ணெய் வாணியத் தெருவும் இலைவாணிய தெருவும்
கம்மாளன்மார் தெருவும் கலங்கொட்டியார் தெருவும்
உப்புலிப் பார்தன் தெருவும் உறக்காறர் தான் தெருவும்
ஊழியஞ் செய்வார் தெருவதையும் ஒரு நொடியில் கொல்லுவாராம்

அன்று பெற்ற பிள்ளைகளை அம்மானை போட்டாட்டுவாராம்
வண்ணான் துறைதனிலே மாற்றுடுக்க போவாராம்
மண்ணுவாரி எறிவாராம் மறுக பற்றித்தொடருவர்ராம்
பிள்ளையில்லா பேர்களுக்கு பிள்ளை கொடுப்பாராம்
அப்படியே கொன்றல்லவோ அசல் தெருவில் சொல்லுவாராம்
துலக்கருடத் தெருவிலெ துருதமுடன் கொல்லுவாராம்
அலுக்கிட்ட துலக்கச்சியும் அவளுடைய துலக்கனையும்
எடுத்து நிறுத்து வாராம் ஏரியிலே சவுட்டுவாராம்
இனி எங்கே போவோ மென்று ஏகாந்த விளிஎறிவார்.
மிக்க பாண்டி மன்னருடன் பந்தியில் செல்லுவாராம்
ஆனைப்பந்தி குதிரைபந்தி அடங்கலுமோ கொல்லுவாராம்
ஏற்ற கொம்பன் வெற்றிமத யானையுட மத்தளத்தில்
ஆனையுட மத்தளத்தில் அடிகள் விழந்தடுபிடியாய்
சும்மா நின்ற மதயானை துடிக் கொண்டு விழுந்திடுமாம்
கண்டு நின்ற குற்றன்மார் கைலைபுரனோடு கொல்வார்
வரிக்கோல் குறட்டியுடன் மாகுத்தன்மார் கொண்டாடுவார்
ஆனையது மதம்பட்டு அந்த நாட்டை அழித்திடுமாம்

## பாண்டியன் ஒட்டனை அழைத்தல்

இப்படியே அழிக்கு தென்று ஏது சொல்வார் பாண்டியரும்
ஒட்டனையும் தானழைத்து உடன் சொன்னார் ஒட்டனிடம்
கற்றதொரு சோதிரியை காலத்தே கூட்டிக் கொண்டு
வாடா என்று விடை கொடுத்தார் மன்னனுமோ ஒட்டனிடம்

## ஜோதிடம் பார்த்தல்

திருவாளி புருஷமது சீக்கிரத்தில் பார்க்கவென்று
புரஷம் பறையும் அந்த காணியானை கூட்டிவந்தான்

வந்த தொரு சோதிடரும் வார்த்தை கேட்டு புரச்சம் வைத்தான்
வைத்ததொரு புரசத்திலே வகைப்படியே சொல்லுவானாம்
ஒரு நாளுங் குற்றங்குறை இல்லாத மதுரை யெல்லாம்
கூட்டதெய்வம் தான் புகுந்து கொல்லுதல்லோ யிப்போது
உந்தனுட கைதனக்கு ஒளிவுண்டால் பாருமென்றார்
பின்னும் பார்த்து நீயும் இப்போள் போய் பிடிக்க வேண்டுமென்றார்

## வேலன் பேயைப் பிடிக்க ஆயுத்தம்

பேய் பிடிக்க சொன்ன போதே புருஷத்துடன் கணியானும்
அவன்தம்பி கூட்டத்தார் எல்லோரையும் கூட்டுவாராம்
வந்தவுடன் எல்லோரும் மகிழ்ந்து சந்தோசமாக
பறையெடுத்து வேலன் இப்போள் பறச்சத்தம் காட்டுவானாம்
பறை கொம்பூதுவானாம் பலபேரும் கூடி நின்று அப்பொழுதே
அப்பொழுதே அவனுடைய வேலத்தியும் ஏதோ சொல்வாள்
மதுரை ஊரானதிலே மன்னவனை பேய் பிடிக்க வேண்டாம்
என்னுடைய இளவேலர் ஏத்த வலு வாதையுண்டும்
வல்லாத வாதையுண்டும் வழித்தலைவாள் இசக்கியுண்டும்
மூணரக் கோட்டம் ஏழரைக் கோட்டம் முக்கால்வட்டத்தியிசக்கியுண்டும்
செங்கிடாபூதமுண்டும் சேர்ந்ததிரள் வாதையுண்டும்
இளநேரத்து வாதையுண்டும் ஏத்த சடையிசக்கி யுண்டும்
அத்தனையும் திரளாக அன்னாவந்து கூடுதென்றாள்
மந்திரத்தில் அடங்காது மாறணத்தில் அடங்காது
தந்திரத்தில் அடங்காது தம்பலத்தில் அடங்காது
மந்திரத்தில் அடங்கா விட்டால் மாறணத்தில் அடக்கிடுவேன்
தம்பலத்தில் அடங்கா விட்டால் சக்கரத்தில் அடுக்கிடுவேன்
கெட்டாத வாதையுண்டோ பிடியாத பேய்கள்யுண்டோ
என்று சொல்லி இளவேலன் இவனுடைய வேலத்தியும்

போகாத என்று சொல்லி புத்தியாக விலகிடவே
விலக்கின சொல் கேளாமல் வேலவனே போகாதே
போகாதே வேலவனே பொன்னுயிரு மாள்வதற்கு
தாலிபிச்சை கிளையாதே தட்டாதே இளவெலா
விலக்கின சொல் கேளாமல் வேலவனும் மனைபுகுந்து
செப்பெடுப்பேன் சிமிளெடுப்பான் தென்னம்பாளை கூடெடுப்பான்
அமுதகலையே எடுப்பான் அடைத்து வைக்க குழியெடுத்தான்
பேய்பறையைத் தானெடுப்பான் பேருக்கெத்தனையெடுத்தான்
பேய் பிடித்து வாறதற்கு பிருசத்தடன் நடப்பமென்ன

## எல்லா மந்திரவாதிகளும் கூடல்

ஏழுகாணி மலையிலுள்ள ஏத்தபுகழ் வேலன்மாரும்
காணிக்கார மலையிலுள்ள தனைபுகழ் வேலன்மாரும்
புல்லுமலை தன்னிலுள்ள புகழ் பெரிய வேலன்மாரும்
சள்ளிமலை தனிலிருக்கும் வேலன் மாரெல்லாம்
தங்கமலை தனிலிருக்கும் தக்கபுகழ் வேலன்மாரும்
இரட்ட மலை தனிலிருக்கும் இசல் பெரிய வேலன்மாரும்
நாகவள்ளி மலையிலுள்ள நாலேழு வேலன்மாரும்
நாகவள்ளி குறத்திமகன் நல்ல மந்திர வேலவனும்
ஆக ஏழுமலையிலுள்ள எல்லோரும் கூடுவாராம்
மதுரை ஊர்தனை நோக்கி வழி நடந்தார் சடுதியிலெ
மதுரை வாழ் மன்னவனை வந்து கண்டு தொழுது நின்றார்
ஏதேது தம்புரானே எங்களை நீர் அழைத்தென்ன
கேழும்கேழும் வேலன்மாரே கீர்த்தியான வார்த்தையெல்லாம்
வல்லாத வாதை வந்து மதுரைதன்னை அழிக்குதல்லோ
வாதைகளை தான்பிடித்து வடமலையில் கொடுப்போங்கோ
ஒரு நாளும் குறைகள் இல்லா உற்ற நல்ல மதுரையிலே

வாதைகளும் இசக்கிகளும் வந்து கூடி கொல்லுதென்றார்
வல்வித பேய்தனையும் மந்திர வேலன் பிடிக்க வேண்டும்
பேய்பிடிக்க வேண்டுமானால் புகழ் பெரிய மன்னவரே
எதுக்கும் வகையானதெல்லாம் உடன் ஒதுக்கிதரவேண்டும்
இன்னதென்று சொல்ல வேண்டும் ஏத்தமந்திர இளவேலா

## பேய் பிடிக்கும் முறை

மூணுகோடி நெல்லெடுத்து மூணுபங்காய் திரித்து
வெள்ளரிசி கருத்தரிசி வெளிப்புழுங்க அரிசிவேண்டும்
சாம்பிறாணி தீபதூபம் தக்கப் பதிவடைவேண்டும்
வாடைமணம் களப்பம் வேணும் வளர்க்க முகிழபூவுவேணும்
பழமுடனே சர்க்கரையும் பாக்கு வெற்றிலை புகையிலையும்
வேண்டும் வகை தானிருப்பான் மிக்கவுரை ஒன்று வேண்டும்
ஆனைமுட்டை இருபத்தொண்ணும் அதிலும் குறை போகாது
குதிரைமுட்டை இருபத்தொண்ணும் கூட மல்லிகை பூவுவேணும்
அம்புலிமான் கொம்பும் வேணும் அதிலுங்கூட நிறைவழி வேணும்
நிலம்தீண்டா வெள்ளம் வேணும் நெல்பொரி ஒரு கோடிவேணும்
இந்த வகை இன்னதென்று எனக் கூறிய இளவேலன்
ஆனைமுட்டையில்லா விடடால் தின்னுங் தென்னங்காய் வேணும்
குதிரைமுட்டை இல்லாவிட்டால் கோழிமுட்டைதானும் வேணும்
அம்புலிமான் கொம்பதிலும் அதிய திருவிளக்காகும்
வாழையிலை ரெம்பவேதான் மன்னவரே வரவேண்டும்
கூவும் சாவல் ஏழுவேணும் கூடநூறு பெடைக்கோழி வேணும்
துள்ளுமறி மூன்று வேணும் துள்ளுமறி ஒன்று வேணும்
வச்செடுக்கும் வகைகளெல்லாம் மன்னவனார் கொடுத்த பின்பு

## பேய் பிடிக்க ஆயுத்தம்

வாங்கியந்த இளவேலன் வைத்தானே பூட்டுகளும்
முத்த வெளியானதிலே முறையாக வைத்தனராம்
வண்டாளை மரத்தை வெட்டி மலைவேலன் பேய் பரணுகெட்டி
ஊட்டுக்களம்தான் பரத்தி ஊட்டுணவும் வைத்தானாம்
பேய்பரணுமேலே கொண்டு பூப்படையை யிடுவானாம்
பூப்படைக்கு மேலேயல்லோ பூவும் பொரியும் தூவுவானாம்
உரலை கவுத்தியிட்டு உரல்மேல் ஏறுவானாம்
மேலேயெங்கும் குறியுமிட்டான் மிக்க நெற்றி பொட்டுமிட்டான்
கலியை வருத்தவென்று கைமுறித்து வெலி கொடுத்தான்
நாலுதிசையுங் கொட்டுவானாம் நடுவில் நின்று ஆடுவானாம்
அத்துப் பேய் பேரும் சொல்லி ஆடுவானாம் மந்திரனும்

## வாதைகளை அழைத்தல்

மூணர கூட்டத்திசக்கியம்மா முன் வந்து ஆகவேணும்
செங்கிடா பூதத்தானே திருவிளங்கள் பத்துவேணும்
பொன்னிறத்தாள் இசக்கியம்மா பூசைக்கு வந்தாக வேணும்
வாவறவாள் இசக்கியம்மா வந்துஆக வேணும்
இருபத்தொரு பேரு கொண்ட இசக்கியம்மா வரவேணும்
அனந்தங்குளத்திசக்கியம்மா அப்பன் வந்தாகவேணும்
மந்திரனும் பேய் கூற வந்து கூட பேய் களெல்லாம்

## வேலர்களைப் பேய்கள் அடித்தல்

முக்கால் வட்டத்திசக்கியம்மை முன்வந்து குரவையிட்டாள்
மொகுமொகெனக் குரவையிட்டு முக்கால் வட்டத்திசக்கி யுந்தான்
வலத்தச் சுத்தி இடத்தே வந்தான் வாணுதலான் பொன்னிறமும்
மந்திரன் தன் நெஞ்சத்திலே வாணுதலும் அடித்திடவே
அடித்த அந்த நேரத்திலே அலறி விழுந்தான் மந்திர வேலன்

## செண்பகக் குட்டியின் கனவு

வேலன் இங்கே மடிந்தவுடன் வெற்றி பெற இசக்கியம்மை
மூன்றரை கூட்டத்திசக்கி என்ற மொய் குழலாள் பொன்னிறமும்
தெக்கதிலெ உறங்கினதோர் சேயிளைக் செண்பகக்குட்டியிடம்
கனவாக நித்திரையில் கட்டுரைத்தாள் இசக்கியம்மை
கனவு கண்டு தான் முழித்தாள் கன்னி நல்லாள் செண்பகக்குட்டி
செண்பகக் குட்டித் தானும்போல் சீக்கிரத்தில் தாய்க்குரைத்தநாள்
நேற்றிராவு நித்திரையில் நிதி கேடாய் கனவு கண்டேன்
கண்டதொரு கனவு தன்னை கண்மகளே சொல்லு மென்றாள்
தாயாரும் தான் கேட்க தார்குழலாள் சொல்லுவாளாம்
உன்கணவன் என்தகப்பன் உயிர்மடிந்து தான் போனார்
கனவின் பலன் சரிதானென்றால் கன்னிச் செண்பகக் குட்டியும்
கிழவிதன்னைக் கேட்டபோது கிளிமொழியாள் வேலத்தியும்
தன் வயிற்றில் தானடித்தாள் தார் குழலாள் வேலத்தியும்

## வேலத்தியின் புலம்பல்

சதித்தாளே இசக்கியம்மை சண்டாளி கெடுத்தாளே
கெடுத்தாளே இசக்கியம்மை கேட்டானில்லை என் வார்த்தை
தாலிபிச்சைகளைந்தானே சண்டாளன் இளவேலன்
போகாதே என்றேனே பொல்லாத மதுரையிலே
வாதையுண்டும் என்றாளே வார்த்தை தன்னைக் கேட்டில்லையே
இசக்கியுண்டும் என்றேனே என்வார்த்தை தன்னைதட்டிவிட்டாள்

## வேலத்தி மதுரை வரல்

என்று சொல்லி வேலத்தியும் இயல் மதுரை தனை நோக்கி
வழிநடந்தாள் சடுதியிலே மங்கை நல்லாள் வேலத்தியும்
திடுதிடென வழிநடந்து சீக்கிரத்தில் மதுரைகண்டாள்

தென்மதுரை வடமதுரை தேடினாளே வேலத்தியும்
கீழ் மதுரை மேல்மதுரை கிளிமொழியாள் தான் பார்த்து
அப்பாவேலன் படுகளத்தை ஆயிழை வேலத்தி கண்டாளே

## வேறு

கண்டவுடன் வேலத்தியப்போது கணவனான இளவேலன்தனையும்
விந்தையாகி பொன்னிறந்தனையும் விரைவாக வெலியேதுய கொண்டதோர்
மூன்னரை கூடத்தியிசக்கியெ மோசஞ் செய்த மந்திர வேலனை
மாதாவே மந்திர வேலனை மனது மெய்க்க எழுப்பி தந்தாக்கால்
உன்தனக்கு மனதுதான் மெய்க்கவே உத்த செண்பகக்குட்டி வேலத்தியை
வெலிதாறேன் உன்மனது மகிழவே வேலனையுமெழுப்பித் தருவாய் நீ
சத்தியந்தான் தாயாரே மாதாவே தாலி பிச்சைக்களையாடுதத்தாயாது

## வேலன் எழுந்து வரல்

என்றுதன் இள வேலத்தியுஞ் சொல்ல எழுப்பிடவே இசக்கியம்மை
எழுந்திருந்தானே மந்திர வேலனும் இசக்கியம்மை திருவருளாலே
மந்திரவேலன் வேலத்தியப்போது அதுவிட்டுப்போக வேணுமாக்கால்
சடையாமல் மதுரையிலெ நிற்கும் தக்க வாதைகள் தன்னை பிடிக்கவே
மந்திரனிலும் நூத்தெட்டுக் கொண்டவள் மங்கை நல்லாள் இளவேலா பெண்கொடி

## வேலன் பூசை கொடுத்தல்

தந்திரத்தோட பேய்கள் பிடிக்கவே தக்க நல்ல மலை வேலர் கூடியெ
கொண்டு வந்ததோர் செப்பும் சிமிழையும் கண்ட தொங்கின் பாளைகூடத்து தன்னையும்
கண்டு தானும் எடுத்தாளே கைவசம் காரிகையாள் இளங்கொடிவேலத்தி

வாதை தன்னை பிடிக்க வேலத்தியும் மற்றுமுள்ள பேய்பிடிக்கவும்
மதுரைத்தெருவுமுற வெளியிலே வட்டமாக மெலி களந்தானிருப்பான்
தலைவாழை இலையதுஇட்டல்லொ தக்கப்பூப்படை
வைக்கத்துடங்கினாள் 1565
வெத்திலை பச்சைப் பாக்கு பழமுடன் மிக்க நெத்திப் பூவும் பரத்தினாள்
பரத்தாவ பிச்சி நந்தவன பூவும் பச்சை வாடாபூ பச்சை கொழுந்துவும்
இப்படியே வெலிக்களந்தன்னிலே இதமாக படைத்த அன்னேரத்தில்
தீபதூபங்கள் தன்னையுங் காட்டியே சேகரமாக கோழிவெலி செய்தாள்
செப்புடனே சிமிளி தென்னம் பூக்கூடும் சேர்த்து வேலத்தி
பூப்படைபேல் வைத்தாள் 1570
பேய்பறையை முழக்கியே வேலத்தி பேய் பிடிக்க வேணுமெனச்
சொல்லி
நூத்தெட்டு மந்திரம் சேவித்தாள் கொடியிடையாள் வேலப்பெண் கொடி
சேவிக்க மந்திரம் வேலத்தி யப்போது சென்று மதுரையில் நின்ற
பேய்படை சேர
வாவா என்று தான் மந்திரமெண்ணூறும் மங்கை நல்லாள் மனதில்
கறியானிளை
செப்பதிலுஞ் சிமிளது தன்னிலும் சேர்ந்து பேய் எல்லா மடை
பட்ட போதிலே 1575
முத்திரியிட்டு கட்டவே அப்போது முழுது மந்தஇளவேல பெண்கொடி
எழுப்பினதோர் இளவேலன் தன்னுடன் ஏழுமலையிலுள்ள
வேலன்மாரும்
ஏழைகளை கூடி மதுரையில் மன்னனுட உற்ற நல்ல
திருமுன்பில் சென்றனார்.
கண்டு மன்னன் மனது சந்தோசமாய் கனவரிசை மிக்கவே கொடுத்தனர்
வென்றியாகவே பேய்கள் நீயிப்போள் விரைவாக பிடிறதறியவே 1580
சந்தியில் நிற்கும் கண்ணலதையிப்பேன் தானெப்பாதிப் பிளந்து
தான்கீழிப்பால்

பேய் பிடித்து மெய் யென்றிவேனான் பேதகமில்லை வேலத்தி என்றனர்
வேலத்தி திறமறியெ உரைப்பராம் மிக்கமதுரையில் மன்னரைப்போது
கைக்குள் நின்றதோர் செங்கிடாபூதத்தை கருதி ஏவிநாள் ஆலைப் பிறக்கவே
மதுரை மன்னன் பார்த்தங்கிருக்கவே மங்கை வேலத்தி திறத்தையுங் காண்பித்தாள் 1585
வாதை சென்று மரத்தை இருகூறாய் மதுரை மன்னவன் காணும் படியாக
பாதிறக்கவே பாதிமணமேல் விழ பாண்டி மன்னன் பார்த்து சந்தோசமாய்

## செங்கிடாக்காரனைப் பிடித்தல்

இந்த பூதம் இவ்விடத்தில் நின்றாக்கால் இங்கேயுள்ள மறவரைக் கொல்லுமே
என்று சொல்லி செங்கிடாக்காறனை ஏந்திழை வேலத்தி பிடிக்கவே சொன்னாள்
சொன்ன போதிலே செப்புகுடத்திலெ துய்யதெற்றிப்பூத்தன்னையு மிட்டனள் 1590
வாடை நல்லமணங்களை தூவினாள் வாவவென்று மந்திரஞ்செவித்தாள்
அந்த நேரத்தில் செங்கிடகாரனும் அதிலெ செப்புக்கு டத்திலடைத்தனள்
செங்கிடாக்காரன் சேஷப்பூதமும் சேரயுள்ளதோர் பேய் படைத்தன்னையும்
கொண்டு சென்றார் மலங்காணிதன்னிலே கூடி ஏழுமலைவேலர்தானுமே

## பொன்னிறத்துக்கு கோவில் கட்டல்

கூடியே கோவில் வைக்கவேணு மென்று கூட்டநல்ல மலங்காணி தன்னிலே 1595
மதுரை ஊரதிலே தன்னிலே வைக்கவேணுங் கோவிலது என்று
மதுரை ஊரதிலே தன்னிலே வைப்பதற்குப்புதுக் கோவிலாகவே

வளர்ந்த சந்தன மரத்தையும் வெட்டி வகைவகையாய் அறுத்து முறித்து
கண்ட முல்லு முகந்தாயம் வாய்மடை கூட முறித்தார் கழுகோலாந்தும்
கண்ட படியலும் பணியும் செய்தல்லோ கோவில் வைக்கவே கால்களும் நாட்டுவார்
ஆய்காலதும் அப்போது நாட்டியே அதுமேலே கூட்டேற வைப்பாராம்
அதினுமேல்களுக்குக் கோலும் பரத்தியெ அதன்மேல் பட்டியல் வாய் மடை இறுக்கினார்
ஆகவே எல்லாம் ஓடும் பரத்தியெ அரைத்த சாந்தும் அதன் மேலே பூசினார்
விளங்கவே ஓட்டுக்குங்குறை தீர்த்து மிக்கமணிக் கோவில் முகித்தாரே
முத்து நாகப்பட்டினம் போலவே முகித்தாரே கோவிலது *சீக்கிரமாகவே*

## *கோவிலில் வாதைகள்*

## *வேறு*

கோவிலது தான் முகித்து கூடியந்த வேலன் மார்கள்
திரளாக தெய்வங்களை சீக்கிரத்தில் குடியிருந்த
பொன்னிறத்தை வெலிஏத்த புகழ் பெரிய இசக்கியும்
கண்ட செங்கடாக் காறனையும் கொடியிடையாள் இசக்கியும்
சூலாட்டு இசக்கியும் துள்ளுமறிக்காறியும்
பாலாட்டு இசக்கியும் பலவேசக்காறனையும்
வாட்டமுத்த வடிவழகி மங்கை கானகத்தி சக்கியையும்
அட்டத்திக்குங் கீர்த்தி கொண்ட செங்கிட காறனையும்
இளநேரத்து வாதையும் எதிரடிவாள் வாதையும்
போக்குவரத்து வாதையும் புலிபதைத்து வாதையும்
மந்திர மூர்த்தித்தன்தனையும் அந்தகுல இசக்கியும்

சடையிசக்கி தன்தனையும் சந்தியடிமாடனையும்
தானையடி இசக்கியையும் சந்தியடி யிசக்கியையும்
வாவறவள் இசக்கியையும் மறிவெலிக்காறியையும்
சிறுபிள்ளை இசக்கி இருபத்தென்றும் சின்ன இசக்கித் தன்தனையும் 1620
கச்சவிறை வாதையையும் கலிவாதை தன்தனையும்
உதிரகுல இசக்கியையும் உதிரகுல கன்னியையும்
முறத்து வாதை தன்தனையும் முக்கால் வட்டத்திசக்கியையும்
அப்படியே தெய்வங்களை ஆக ஒன்றாய் நிறுத்துவாராம்
உள் கோவிலிலும் பிற கோவிலிலும் ஒன்று போல நிறுத்தியபின் 1625
உள்கோவிலானதிலே உடனே சித்திரம் எழுதவென்ன
அப்படியே வேலன்மார்கள் ஆக ஒன்றாய் தான்கூடி
உள்கோவிலும் பிற கோவிலும் உட்சித்திரம் எழுதிடுவாராம்

## கோவிலில் சித்திரங்கள்

### வேறு

செங்கிடாகாரன் உருவது எழுத திருகுகொம்பு காறன் உருவது எழுத
இளநேரத்து வாதை உருவது எழுத எதிராடினாள் வாதை உருவதும் எழுத 1630
சுட்டிகிடா காறன் உருவது எழுத துள்ளுமறிக்காறி உருவது எழுத
கலிவதையுட உருவதும் எழுத கைமுறி வாதை உருவதும் எழுத
போக்குவரத்து வாதை உருவதும் எழுத புலிப்புனத்துவாதை உருவது எழுத
கச்சை பிறவாதை உருவதும் எழுத கலங்கொட்டி வாதை உருவதும் எழுத
மந்திர மூர்த்தி உருவதும் எழுத அந்திர குலத்திசக்கி உருவம் எழுத
முறத்து வாதை உருவதும் எழுத முக்கால் வட்டாத்திசக்கி உருவதும் எழுத 1635

மன்னன் கருங்காலி உருவதும் எழுத விழித்தலை யிசக்கி
உருவதும் எழுத
பாலாட்டு இசக்கி உருவதும் எழுத சூலாட்டிசக்கி உருவதும் எழுத
சடையிசக்கி உருவதும் எழுத சந்தியடிமாடன் உருவம் எழுத
கொக்கோட்டிசக்கி உருவதும் எழுத குறுமாங்குளிக்காறி
உருவது எழுத 1640
தாளையடி இசக்கி உருவதும் எழுத சந்தியடி இசக்கி உருவது எழுத
வாவறவாள் இசக்கி உருவதும் எழுத மாறிவெலியிசக்கி
உருவதும் எழுத
சின்னயிசக்கியுட உருவதும் எழுத சிறுபிள்ளை இசக்கி
இருபத்தொன்றும் எழுத
உதிர கன்னியுட உருவதும் எழுத உடனே பேச்சி உருவதும் எழுத
அனந்தங்குளத்திசக்கி உருவதும் எழுத ஆவுடைக்கண்ணிஉருவதும்
எழுத 1645
பலவேசக்காறன் உருவதும் எழுத பன்றிவெலிக்காறி உருவதும் எழுத
உருவதும் எழுதியே வேலன் மார்த்தானும் சந்திசித்திரம் எழுதி
முடித்தாரே

## பொன்னிறத்துக்குப் பலிக்கொடுத்தல்

## வேறு

கோவில் குடிகொண்டு நின்ற கூண்டப்புகழ் தேவதைகள்
ஏழுமலங்காணியிலும் இயல்பாக கொன்றிடுமாம்
மலங்காணி தன்னிலுள்ள மனுஷர்களை கொன்றிடுமாம் 1650
மலைதேவர் தான் கூடி வைத்தாரே புருஷன்தன்னை
வாதைகளுக்கு பூண்டுவைத்தான் வாதையருக்கு கோழியுண்டு
மார்பளவில் மந்திர வேலன் பாவை நல்லாள் இளவேலத்தியும்
இருபேருட கைதனக்கும் ஏத்த வாதை ஒளியுண்டாமே

இளவேலன் இடத்தில் வந்து இசம்பலுற்றார் மலைவேலர்
நின்றிடுவாய் நேர்ந்திடுவாய் நிச்சயங்கள் செய்திடுவாய்
மலங்கனி வேலன் மாரும் மந்திர இளவேலனும்
புதுக்கோவில் தன்னில் வந்து பொன்னிறத்தை வெலிகள் கொண்ட
அம்மாளே நீறு கொடுக்க அருள்புரிவான் என்றுரைத்தான்
அம்மாளே என்ற சொல்கேட்டு அம்மையுமோ என் சொல்வாள்
உன்மகள் தான் செண்பககுட்டி ஒன்பது மாச சூலோடெ
அறுத்து வெலி தருவேனென்று ஆணையிட்டால் மாறிடுவேன்
அப்படியே இசக்கி சொல்ல ஆகட்டென்றான் இளவேலன்
சொன்னவார்த்தை தவறாமல் தோகையரை வெலிதருவேன்
என்று சொல்லி இளவேலன் இசக்கியம்மை சம்மதித்து
இளவேவன் தன்மேலே இயல் வாதை துள்ளிடுமாம்
சூலாடு பாலாடு துள்ளுமறி கேட்டிடுமாம்
மற்றுமுள்ள தெய்வங்களுக்கு வகைவகையாய் கேட்டிடுமாம்
கேட்ட வகை தந்திடுமாம் கிளிமொழியே நீறுதருவாய்
வாங்கியவன் தான் போனான் மலைவேலர் பிணிதீந்து
வருகுதல்லோ பொன் பணமும் மறி கோழிக் கிடாய்களுடன்
சூலாடும் சூல்பன்றியும் சுட்டிக் கிடாய் கொண்டு வந்தார்
வருகுதல்லோ பொன்பணங்கள் மடிச்சிலை முடிப்புக்கிட்டி
மதிடிவாள் காவதிலெ வைத்த புது கோவிலிலே
வெலிப்பீடம் இடுவானும் வெலிக் குடைகள் ஒதுக்குவானாம்
திசை திசையாய் பீடமிட்டான் திரைவளைந்தான் சீக்கிரத்தில்
மேல்பறணும் கீழ்பறணும் விதவிதமாய் கெட்டுவானாம்

## செண்பகக் குட்டியைப் பலி கொடுத்தல்

செண்பககுட்டி வேலத்தியை சீக்கிரத்தில் கூட்டி வந்து
தன்னுடைய வேலத்தியைத்தான் கூட்டிவரச் சொன்னான்

ஆடுகீடாய் கோழிபன்றி அறுத்து வெலிதான் கொடுத்தேன்
மற்றுமுள்ள தெய்வங்களுக்கு வகைவகையாய் வெலிக்கொடுத்தான்
ஒன்பது மாத சூலோடெ ஒண்ணுதல் செண்பக குட்டியை
சூலாட்டை மேல் பறணில் தூக்கிவிட்டான் இளவேலன்
கீழ் பறனில் செண்பக குட்டி கிளிமொழியை கிடத்திவைத்தான்
சூலாட்டைத் தான் பிளந்து துள்ளுமறித் தனையெடுத்து
மகளுடைய நெஞ்சதிலே வைத்தவனும் வெலி கொடுத்தான்
ஆடுவெலி கொள்ளுமுன்னே ஆயிழை செண்பகக் குட்டியை
வெலியுண்டாளே மூணரக் கூட்ட இசக்கியம்மை வெலி யுண்டளே
மற்றுமுள்ள தெய்வமெல்லாம் வகைவகையாய் வெலிகளுண்டு
மதுரடிவாள் காவதிலே வைத்த புது கோவிலிலெ
மாறாத வரங்கள் பெற்று மலையில் நின்றாரே

*பொன்னிறத்தாள்*

*வில்லடிப்பாட்டு*

*முற்றிற்று.*



# குறிப்புகள்

பொன்னிறத்தாள் கதை ஏட்டில் உள்ளபடியே பதிக்கப் பட்டுள்ளது. அதனால் ழ, ள, ற, ர எழுத்து மாற்றங்களையும், சில எழுத்துப் பிழைகளும் திருத்தப்படவில்லை. இவை மூலத்தில் உள்ளபடி கொடுக்கப்பட்டுள்ளன.

வரி 24 : கடயம் - தென்காசியின் அருகே உள்ள செழிப்பான ஊர்

27 : வடுவர் - தெலுங்கர் ; வடுவர் குலம் பொன்மாரி - தெலுங்கிச்சி

33 : திருப்பூத்தல் - பருவம் அடைதல்

34 : முகித்தார் முடித்தார்

30 - 35 : பருவம் அடையும் முன்பே பொன்மாரிக்குத் திருமணம் நிகழுகிறது. பருவம் அடைந்தபின் கணவனுடன் கூடி குழந்தை பெறுகிறாள்.

52 : குளித்தபின் ஈர உடையுடன் கருவறையின் முன் நின்று வணங்குதல் பெருநெறி, சிறுநெறி வழிப்பாட்டில் நடைமுறையில் உள்ளது.

60 - 70 : கர்ப்பிணியின் பத்துமாத நிலையை வருணனை செய்யும் போக்கு கதைப் பாடல்களில் பொதுவாகக் காணப்படுகிறது.

72 : மருத்துவம் - மகப்பேறு பார்க்கும் முதியபெண். இவள் நாவிதர் சமூகத்தைச் சார்ந்தவளாய் இருப்பாள்.

88 - 107 : மருத்துவமும், தூதுவனும் மருத்துவக்கூலி குறித்துப் பேரம் பேசுதல் என்ற பகுதி சில கதைப்பாடல்களில் ஒரே போக்கில் அமைந்துள்ளது.

109 : பொலிவு - பரிசுகள் : குழந்தை பிறந்ததும் கர்ப்பிணியின் உறவினர்கள் மருத்துவத்துக்குப் பரிசுகள் கொடுக்கும் வழக்கத்தை இது குறிப்பிடுகிறது.

113 - 120 : மருத்துவம் மகப்பேறு பார்க்க வரும்போது நடக்க முடியவில்லை எனச் சோர்ந்து பேசுவதும், தூதுவன் அவளைத் தயவாக அழைப்பதும் குமரி மாவட்டக் கதைப்பாடல்கள் சிலவற்றில் ஒரே போக்கில் உள்ளன.

131 : பாடகம் - காலில் அணியும் அணி

133 : கொங்கண் - முலைக்காம்பு

136 : மலங்காதே - மயங்காதே

147 : பொதுவாகக் கதைப் பாடல்கள் சைவச் சார்புடையனவாகவே உள்ளன. இக்கதைப்பாடலும் கதைத்தலைவி சிவன் அருளாள் பிறந்தவள் என்று குறிப்பிடுகிறது.

148 : புரை - அறை

152 : கும்ப கடி மருந்து - குழந்தை பின்னர் கர்ப்பிணிக்கு வயிற்றிலும், பிறப்பு உறுப்பிலும் இருக்கும் புண்ணை நீக்கக் கொடுக்கும் மருந்து.

163 - 180 : மகப்பேறு பார்த்த மருத்துவத்திற்குப் பலரும் பரிசுகள் கொடுத்தலை இவ்வருணனை குறிப்பிடுகிறது.

183 : குழந்தை பிறந்த 28ஆம் நாள் தீட்டு கழியும் என்பது நம்பிக்கை. அதன் பிறகே மருத்துவச்சிக்குப் பிற பரிசுகளைக் கொடுக்க முடியும்.

192 : பொன்னிறம் உமையம்மை அருளாள் பிறக்கிறாள் - சைவச் சார்ப்பு

190 - 206 : குழந்தையைத் தாலாட்டுதல். எல்லா கதைப்பாடல்களிலும் இது போன்ற வருணனை வருகிறது.

208 : குழந்தை பிறந்த 28ஆம் நாள் குழந்தைக்குப் பெயரிடும் சடங்கு நிகழும்.

215 : அட்ட திருக்கல்யாணம் - குழந்தைக்குப் பெயரிடும் சடங்கு.

222 : தேமனாய் - தேமல், அழகாக

227 : ஒரு பாவந்திலை முடி - சுமார் மூன்று முழம் நீளம் முடி.

228 : தாப்பு, பொன்பணை, யோதூப்பு - அணி வகைகள்.

236 : கைக்கோளர் - நெசவுத் தொழில் செய்பவர். சோழர்காலத்தில் படைவீரர்களாய் இருந்தவர்.

238 : தாணுவன் - நாவிதர்

241 : இலைவாணியர் · வெற்றிலை விற்கும் வணிகர்

245 · பட்டுநூலார் - பட்டாரியர் சாதி

288 - 94 : மதுரை திருமலை நாயக்கரின் மகன் தளவாய் நாயக்கன், அவர் மகன் இணைசூரன். இங்கு குறிப்பிடப்படும் திருமலை நாயக்கரின் காலம் 1623-1659 ஆகும். நாயக்கர் காலம் பாளைப்பட்டுக்களில் தெலுங்கு, கன்னட நாட்டினர் பொறுப்புடையவர்களாய் இருந்திருக்கிறார்கள். தளவா நாயக்கர் ஒரு பாளையப்பட்டின் படைத்தலைவனாக இருந்திருக்கலாம். மதுரையில் நாயக்கப் பேரரசை நிறுவிய விசுவநாத நாயக்கர் காலததில் தென்பாண்டியில் ஆட்சி செய்த உடையவர்மன் ஸ்ரீவல்லபப் பாண்டியன் (1534 - 1543) தன் மகளை மதுரை நாயக்கரின் படைத்தலைவன் அச்சுதராயருக்குத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார் என்பது வரலாறு. எனவே தென்பாண்டிப் பகுதியில் பாண்டியர் - நாயக்கர் கலப்பில் பிறந்தவர்கள் தங்களைப் பாண்டியர் என்றும், நாயக்கர் என்றும் கூறிக் கொண்டனர்.

306 : சிவலிங்க மன்னன். இவன் தென்காசிப் பாண்டியனாகவோ · பாளையப்பட்டுத் தலைவனாகவோ இருந்திருக்கலாம். இவளைச் சந்திக்க இணைசூரன் செல்கின்ற நேரத்தில்தான் பொன்னிறத்தாளைப் பார்க்கின்றான்.

329 : பொன்னிறத்தாளின் அண்ணன்மார்கள் தென்காசி தலைவன் சிவலிங்க மன்னனிடம் பணியாளர்களாக இருந்தனர்.

335 : சடைவாய் - சோர்ந்து

356 : மசங்கி - மயங்கி

358 . மலங்காதே - மயங்காதே

365 : சடுதியில் - வேகமாக

394 : மகிழ்ந்துவா்மாய் - மகிழ்ச்சியாய்

396 : திருமணத்தில் மாமன் சடங்கு முக்கியமானது. மாமன் சடங்கிற்கு ஒரு கலம் அரிசி, சேலை, வெற்றிலை பாக்கு தேங்காய் கொடுக்க வேண்டும்.

கோப்பு - சிறப்பு

412 : விதியின் மேல் முழுமையான நம்பிக்கை வைத்தல் கதைப்பாடலின் மரபு.

417 : பிரமபீடம் திருமண மேடையில் உள்ள நெருப்பு.

495 - 504 : தானிய வகைகள். வாரிசிறை மீண்டான் - ஒருவகை நெல் இந்த நெல்லுவகைகள் குமரிமாவட்டத்தில் வழக்கில் இருந்தவை.

505 : மிதுனம் - தை மாதம்

541 : சாய்க்கவில்லை - வைக்கோல் வைக்கவில்லை

558 : ராவு - இரவு

566 : பூத்தானம் - விவாதம்

580 : உள்நோட - உன்னுடன்

646 : புசல் - புயல்

648 : ஆதாளி - பெரும் கூப்பாடு

668 : வடகாத்து - வடதிசை காத்து

686 : மையிட்டுப் பார்த்தல் - மந்திர மையை வைத்து அறிதல் தலைப்பிள்ளையின் தலையிலிருந்து இந்த மையைத் தயாரிப்பர் என்பது நம்பிக்கை.

692 - 713 : நாட்டார் தெய்வங்களின் பட்டியல்

720 : புரஷம் - சோவிகளைப் பரத்திப் போட்டுச் சோதிடம் பார்த்தல். இது பொரிச்சம் என்றும் வழங்கும்.

738 : தலைச்சூலியை நாட்டார் தெய்வங்களுக்குப் பலிகொடுப்பது குறித்த நம்பிக்கை பற்றி பிற கதைப்பாடல்களும் பேசுகின்றன.

761 : குறிக்காரர் - வீரர்கள்.

762 : இணைசூரன் தென்காசி ஊரில் மணியக்காரன் பதவியையும் வகித்திருக்கிறான்.

மணியக்காரர் - ஊரில் வரிவாங்குபவர். கள்ளர், மறவர் ஆகிய சாதியினர் இல்லாத ஊரில் மணியங்காரர் வரி வசூலித்தார்.

960 : அவயம் - கூக்குரல்

969 : இசங்க முள் - ஒருவகைக் கள்ளிச்செடி

988 : தொங்காரம் - தொண தொணப்பு

1001 - 22 : பலவகையான பலிகள் கொடுத்தல். சூல் ஆடு சூல் பன்றியைப் பலிகொடுப்பதைப் பிற கதைப் பாடல்களும் பேசுகின்றன. இந்த வருணனைக்குச் சுடலைமாடன் கதையை மூலமாகக் கொள்ளலாம்.

1103 : புதைந்து கிடக்கும் கருவூலம் பலி ரத்தத்தைக் கண்டதும் திறந்து கொள்ளும் என்பது நாட்டார் நம்பிக்கை.

1243 : சமுதாடு - சூலம் போன்ற ஒருவகை ஆயுதம்

1389 : அச்சிகள் - மலையாள வைப்பாட்டிகள்

1411 : சவுட்டுதல் - மிதித்தல்

1412 : விளிஎறிதல் உரக்கச் சப்தமிடுதல்

1426 : புரஷம் பறையும், சாதகம் கணித்துக் கூறும் பறையும் - கூறும் (மலையாளச் சொல்)

1427 : புரச்சம் சோதிடம். சாதகம் இல்லாமல் சோவிகளைப் பரத்திப் போட்டு கணித்தல்.

1432 : இப்போள் - இப்போது

1446 : மாறணம் - தந்திரம்

1457 : பேய்களை இளம் தென்னங்காய்க்குள்ளே அடைத்து பூமியில் புதைத்து விடுவார்கள் என்பது நாட்டார் தெய்வம் குறித்த நம்பிக்கை.

1462 : காணிக்காரர் - குமரிமாவட்டம் கல்குளம் தாலுகா மலையில் உள்ள ஆதிவாசிகள். இவர்கள் மந்திரம் அறிந்தவர்கள் ; நாட்டார் தெய்வங்களை வசப்படுத்துபவர்கள் என்ற நம்பிக்கை இன்றும் உள்ளது.

1472 : தம்புரானே - தலைவனே

1608 - 24 : நாட்டார் தெய்வ வகைகள்.

---